ஆராதனை கீதங்கள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆராதனை கீதங்கள்

"கிறிஸ்துவின் வார்த்தை உங்களுக்குள் நிறைந்து வாசமாயிருப்பதாக; சகல ஞானத்தோடும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லி, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் உங்கள் இருதயங்களில் நன்றியறிதலோடு கடவுளைப் போற்றிப் பாடுங்கள்."

கொலோசெயர் 3:16.

புதுப்பிக்கப்பட்டது

1997

முதல் பதிப்பு 1932
புதுப்பிக்கப்பட்டது 1991
இரண்டாவது புது பதிப்பு 1997

பிரதிகள் கிடைக்குமிடம் :

Tamil Baptist Church
Kilpauk, Chennai - 600 010.
Tel. : 6417 082

J-JIREH GRAPHICS - 489, N.S.K. NAGAR, CHENNAI - 600 106. TEL. 628 7689

கீர்த்தனைகள்
கடவுள் வாழ்த்து

1

பல்லவி

ஆ! வாரும் நாம் எல்லாரும் கூடி,
மகிழ் கொண்டாடுவோம்: - சற்றும்
மாசிலா நம் யேசு நாதரை
வாழ்த்திப் பாடுவோம்.

சரணங்கள்

1. [1]தாரகம் அற்ற ஏழைகள் தழைக்க நாயனார் - இந்தத்
தாரணி யிலே மனுடவ தாரம் ஆயினார்:-
2. மா பதவியை இழந்து வறியர் ஆன நாம், - அங்கே
மாட்சி உற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார்:-
3. [2]ஞாலமதில் அவர்க் கிணை நண்பர் யாருளர், - பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார்:-
4. மா கொடியதான சாவின் வலிமை நீக்கியே, - இந்த
மண்டலத்தி னின்றுயிர்த் தவர் விண்டலஞ் சென்றார்:-
5. பாவிகட் காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே, - அவர்
பட்சம் வைத் துறும் தொழும்பரை ரட்சைசெய்கிறார்:

1ஆதரவு 2உலகம்

2

பல்லவி

ஆத்துமமே, என் முழு உள்ளமே, - உன்
ஆண்டவரைத் தொழு தேத்து:- இந்நாள் வரை
அன்பு வைத் தாதரித்த - உன்
ஆண்டவரைத் தொழுதேத்து

சரணங்கள்

1. போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற்கரிய தன்மையுள்ள -

2. தலை முறை தலை முறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத -

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும் மேலான -

4. வாதை, நோய், துன்பம் மாற்றி, ஆனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த -

5. உற்றுனக் கிரங்கி உரிமைப் பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் -

6. துதி மிகுந்தேற ஸ்தோத்தரி தினமே,
இதயமே, உள்ளமே, என் மனமே -

3

1. சத்தாய் நிஷ்களமாய் ஒருசாமிய மும்மிலதாய்,
சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே,
எத்தால் நானடியேன் கடைத்தேறுவன் என்பவந்தீர்ந்-து;
அத்தா, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

2. திரைசேர் வெம்பவமாம் கடல்மூழ்கிய தீயரெம்மைக்
கரைசேர்த் துய்க்க வென்றே புனையாயினை, கண்ணிலியான்,
பரசேன் பற்றுகிலேன்: என்னைப்பற்றிய பற்றுவிடாய்,
அரசே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

3. தாயே தந்தைதமர் குருசம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான், கதிவேறிலை, நிண்ணயங்காண்,
"ஏயே" என்றிகழும் உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

4. பித்தே றிச்சுழலும் ஜெகப்பேய்பிடித் துப்பவத்தே
செத்தேன், உன்னருளால் பிழைத்தேன் மறுஜென்மமதாய்;
எத்தோஷங்களையும் பொறுத்தென்றும் இரங்குகவென்று
அத்தா, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

5. துப்பார் சிந்தையிலேன் மறைந்தீட்டிய தொல்வினையும்
தப்பா தேவெளியா நடுநாளெனைத் தாங்கிக் கொள்ள
இப்பா ருய்யாவென்றே மனுக்கோலமெடுத்த எங்கள்
அப்பா, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

6. மையார் கண்ணிருண்டு செவிவாயடைத் துக்குழறி
ஐயான் மூச்சொடுங்கி உயிராக்கைவிட் டேகிடுநாள்
நையேல் கைநெகிழேன் உனைநானுண் டஞ்சலென
ஐயா, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

4

பல்லவி

வரவேணும் எனதரசே
மனுவேல் இஸ்ரவேல் சிரசே

அனுபல்லவி

அருணோ தயம் ஒளிர் பிரகாசா,
அசரீரி ஒரே சருவேசா,

சரணங்கள்

1. வேதா, கருணாகரா மெய்யான பராபரா,
ஆதார நிராதாரா, அன்பான சகோதரா,
தாதாவும் தாய் சகலமும் நீயே:
நாதா, உன் தாபரம் நல்குவாயே

2. படியோர் பவ விமோசனா, பரலோக சிம்மாசனா,
முடியா தருள் போசனா, முதன் மாமறை வாசனா,
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்
இமையவர் அடி தொழு மேன்மையான் எந்தாய்

3. வானோர் தொழு நாதனே, மறையாகம போதனே
கானாவின் அதீதனே கலிலேய விநோதனே,
ஞானாகரமே, நடுநிலை யோவா
நண்பா, உனத நன்மையின் மகா தேவா!

5

பல்லவி

வந்தனம், வந்தனமே! தேவதுந்துமி
கொண்டிதமே - இது
வரையில் எமையே வளமாய்க் காத்த
எம்துரையே மிகத் தந்தனம்

சரணங்கள்

1. சந்ததஞ் சந்ததமே எங்கள் தகு
நன்றிக் கடையாளமே - நாங்கள்
தாழ்ந்து வீழ்ந்து சரணஞ் செய்கையில்
தயை கூர், சுரர்பதியே.

2. சருவ வியாபகமும் எமைச் சார்ந்து
தற்காத்ததுவே: எங்கள்
சாமி பணிவாய் நேமித் துதி,
புகழ் தந்தனமே நிதமே.

3. சருவ வல்லபமதும் எமைத்
தாங்கினதும் பெரிதே
சத்ய சருவேசுரனே, கிருபாகரனே யுன்
சருவத்துக்குந் துதியே!

4. உன்தன் சருவ ஞானமும் எங்களுள்
ளிந்திரியம் யாவையும் பார்த்தால்
ஒப்பேதருங் காவலே யுன்னருளுக்கோ
தரும் புகழ், துதி, துதியே!

5. மாறாப்பூரணனே, எல்லா வருடங்களிலும்
எத்தனை-உன்தன்-
வாக்குத் தவறாதருளிப் பொழிந்திட்ட
வல்லாவிக்குந் துதியே!

6

பல்லவி

பாடித் துதி மனமே: பரனைக் கொண்
டாடித் துதி தினமே.

அனுபல்லவி

நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்துப்

சரணங்கள்

1. தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னுறச்
செப்பின தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
வழுத்தின அன்பை விழித்துத் தியானித்துப்

2. சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையில் கிடந்த புறச்சாதியாம் எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோஷத்துக்காகப்

3. எத்தனை தீர்க்கர், அநேக அப்போஸ்தலர்,
எத்தனை போதகர்கள், இரத்தச் சாட்சிகள்,
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்கு
இத்தனையாய்க் க்ருபை வைத்த நம் கர்த்தனை

7

பல்லவி

மனமே! விழித்துத் துதிசெய்!
உன் தேவனை நீ
மனமே! விழித்துத் துதிசெய்!

சரணங்கள்

1. உன் பேரில் அன்பு வைத்து
உன்பாவம் அகல் வித்துத்
தன் ஆவியைக் கொடுத்து
உன்னை ரட்சித்தவரை-

2. ஜீவத்திலே காப்பாற்றிப்
பாவ காயத்தை ஆற்றித்
துர்க்குணங்களை மாற்றித்
துக்கங்களிலே தேற்றி,-

3. வேண்டிப் பூலோகம் வந்து
மாண்டி ரத்தம் சொரிந்து
மீண்டும் ரட்சண்யம் தந்த
ஆண்டானைத் துதிசெய் நீ-

4. நித்திய பிதாவைத் துதி
மத்யஸ்தரையும் துதி
சத்தியாவியையும் துதி
திரியேக தேவனை நீ-

8

பல்லவி

காலமே தேவைத் தேடு! - ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு.

அனுபல்லவி

சீலமுடன் பதம் பாடிக்கொண்டாடு:
சீரான நித்திய ஜீவனை நாடு.-

சரணங்கள்

1. மன்னுயிர்க்காய் மரித்தாரே: மனு
மைந்தனெனப் பெயர் வைத்திருந்தாரே
உன் சிருட்டிகரை நீ இதயத்திலெண்ணு:
உள்ளங்கனிந்து நீ தனிஜெபம் பண்ணு.

2. பாவச் சோதனைகளை வெல்லு: - கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு.
ஜீவ கிரிடஞ் சிரத்திலணியச்
சிந்தனை செய்: மனுவேலனைப் பணியக்.-

3. சிறுவர்க ளென்னிடஞ் சேரத் - தடை
செய்யா திருங்களென்றார் மனதார:
பரலோகச் செல்வ மவர்க்குப் பலிக்கும்:
பாக்கியமெல்லாம் பரந்து ஜொலிக்கும்.-

4. வேலையுமக்குக் கைகூடச் - சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாடக்
காலை தேடுவோ ரென்னைக் கண்டடைவாரே
கண்விழித்து ஜெபம் செய்யுமென்றாரே.-

9

பல்லவி

தோத்திர பாத்திரனே, தேவா,
தோத்திரம் துதியுமக்கே.
நேத்திரம் போல் முழுராத்திரியுங் காத்தோய்:
தோத்திரம் துதியுமக்கே!

சரணங்கள்

1. சத்துரு பயங்களின்றி - நல்ல
நித்திரை செய்ய வெமைப்.:.
பத்திரமாய்ச் சீராட்டி யுறக்கியே
சுற்றிலுங் கோட்டையானாய்,-

2. விடிந்திருள் ஏகும்வரை - கண்ணின்
விழிகளை மூடாமல்
துடிதாய்த் தந்தைபோல் படிமிசை எமது
துணை எனக் காத்தவனே,-

3. காரிருள் அகன்றிடவே,- நல்ல
கதிரொளி திகழ்ந்திடவே;
பாரிதைப் புரட்டி உருளச்செய் தேகன
பாங்கு சீராக்கி வைத்தாய்,-

4. இன்றைத் தினமிதிலும் - தொழில்
எந்தெந்த வகைகளிலும்
உன் திரு மறைப்படி ஒழுகிட எமக்கருள்
ஊன்றியே காத்துக் கொள்வாய்.

10

1. ஸ்தோத்திரம் ஏசுநாதா உனக்கென்றும்
ஸ்தோத்திரம் யேசுநாதா
ஸ்தோத்திரம் செய்கின்றோம் உம் அடியார்
திருநாமத்தி னாதரவில்.

2. இன்றைத் தினமதிலும் ஒருமித்துக்
கூட உம் நாமத்தினால்.
தந்த நின் க்ருபைக்காக உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

3. நின் உதிரமதினால் திறந்த
நின்ஜீவ புது வழியாம்
நின் அடியார்க்குப் பிதாவின் சன்னதி
சேரவுமே சந்ததம்.

4. இத்தனை மகத்வமுள்ள பதவி
இப்புழுக்களாம் எங்களுக்கு
இத்தனை மாதயவு நின்கிருபை
எத்தனை ஆச்சரியம்.

5. வானதூதர் சேனைகள் மனோகர
கீதங்களாலெப்போதும்
ஓய்வின்றிப் பாடித் துதிக்க மாபெரும்
மன்னவ்னே உமக்கு.

6. நீரல்லால் எங்களுக்குப் பரலோகில்
யாருண்டு ஜீவநாதா?
நீரேயின்றி இகத்தில் வேறொரு
தேற்றமில்லை பரனே.

11

பல்லவி

தேவரீருக்கே மிகத்தோத்திரம் மிகத்தோத்திரம்

சரணங்கள்

1. ஜீவனோடெமைப் புதுவருடம் (புதிய வாரம்)
சேர்த்துக் காத்தனையே - நின்
செட்டையின் மீதடியார் களைவைத்தே
சுமந்து காத்தனையே-

2. எய்திடும் துன்பம் எத்தனை யுண்டதற்
கெல்லாம் விலக்கினையே
ஏசுகிறிஸ்தின் நாமத்தினாலெங்கள்
ஏதம் போக்கினையே.

3. எங்களின் தேகம், எங்களின் ஆவியும்
எல்லாம் உனதன்றோ? - இவை
எல்லாம் படைத்தேன் ஏற்றுக்கொள்வையே'
எல்லாம் உமக்கென்றே.-

4. உந்தன் நாமம் அர்ச்சிக்கப்பட
உன் ராச்சியம் வருக-
உன் சித்தம் பரலோகம்போல
உலகில் செயப்படுக.-

5. இராச்சியம், வல்லமை, மகிமையும், கனமும்
உமக்கே யுடைமையே - இவ்
வெளியார்க்குந்தன் அருளே தந்து
ஆசீர்வதித்தருளும்.-

12

பல்லவி

அதிகாலையிலுமைத் தேடுவேன் முழுமன தாலே
தேவாசீர் வாதம் பெற - நாடுவேன்
ஜெப தபத்தாலே

அனுபல்லவி

இதுகாறும் காத்த தந்தை நீரே,
இனிமேலும் காத்தருள் செய்வீரே,
பதிவாக உம்மிலே நான் நிலைக்கவே
பத்திரமா யெனை உத்தமனாக்கிடும், தேவே!

சரணங்கள்

1. போன ராமுழுவதும் பாதுகாத் தருளின போதா! - எப்
போதும் எங்களுடனிருப்பதா யுரைத்த நல்நாதா!
ஈனப்பாவிக் கேது துணை லோகிலுண்டு பொற்பாதா!
எனக்கான ஈசனே! வான ராசனே!
இந்த நாளிலுமொரு பங்கமில்லாமல் காரும் நீதா!-

2. பல சோதனைகளால் சூழ்ந்து நான் கலங்கிடும் போது-
தப்பாது நின் கிருபை தாங்கிட வேணும் போது
விலகாது என் சமுகம் என்ற வாக்கில் தவறேது?
விசுவாசங் கொண்டு மெய்ப்பாச மூண்டிட
விக்கினம் யாவிலும் வெற்றி காணுவேன் மலை வேது-

3. நரர் யாவர்க்கு முற்ற நண்பனாய் நடந்திடவையே - தீ
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச் செய்யே
பரலோக ஆவியாலே மாரி போலெனிலே பெய்யே,
புகழான நாதனே! வேத போதனே!
பூரண மாயுனைப்போற்றுவேன் தினம் தினம் மெய்யே

பல்லவி

ஓய்வுநாள் இது, மனமே, - தேவனின்
உரையைத் தியானஞ்செய் கவனமே.

அனுபல்லவி

நேய தந்தையர் சேயர்க் குதவிய
நெறி இச் சுவிசேஷ வசனமே,-

சரணங்கள்

1. ஜீவ சுக புத்ர செல்வம் தந்தவர்
சேவடி உனக் கபயமே:
மேவி அவர் கிருபாசனத்தின் முன்
வேண்டிக் கொள், இது சமயமே,-

2. ஆறு நாளுனக் களித்தவர், இளைப்
பாறி ஏழினில் களித்தவர்
கூறும் பூரண ஆசீர்வாதத்தைக்
குறித்துனை இதற் கழைக்கிறார்,-

3. கர்த்தர் ஆசனம் குறுகிக் கேள் இன்று
காலை நண் பகல் மாலையும்
சுத்தம் விரும்புவோர் மாத்திரம் வந்து
துதிக்கத் தகும் இத் தேவாலயம்,-

4. ஆத்ம தேகம் நீ கடவுட்குப் படைப்
பாற்ற நற்சுப நாளிதே:
அறையிலே சமு சார ஜெபம் செய்வோர்
அடைவர் பலனிதில் அதனமே,-

பல்லவி

தருணம் இதுவே, கிருபை கூரும்,
விழிபாரும், பாதம் தாரும், தாரும்

சரணங்கள்

1. கருணை தெய்வ குமாரா, கன மனுடவதாரா,
அருமை ரட்சக யேசு நாதா,- உல
கனைத்தும் வணங்கும் சத்ய வேதா - உன்றன்
அடியார்க் கருளும் திருப்பாதா, சத்ப்ர
சாதா, நீதா,- -

2. வானத்திலிருந்து வந்த ஞானத்தொளி சிறந்த
மகிமைப் பிதாவின் திருப்பாலா, - ஆதி
மைந்தர்க் கிரங்கும் அனுகூலா, - கன
விந்தைக் கருணை மனுவேலா. மெய்ந்
நூலா, சீலா, -

3. அற்பஉலக வாழ்வில் அலைந்து நிலைகுலைந்து
அலகைப்படு குழியல் வீழ்ந்து, - தாழ்ந்து,
அஞ்சி அஞ்சி நலிந் தேனே: - அடிமைக்
கஞ்சல் என்று சொல்லும் கோனே, - சீ
மானே, தானே,-

4. இந்த உலகத் தெமைச் சந்தித் தனுக்கிரகித்த
சொந்தக் கிருபைகள் மா காத்ரம், - அவை
சிந்தித்து முடியா விச் சேத்ரம், - நிர்ப்
பந்த அடியர்கள் எம் மாத்ரம்!- பத
தோத்ரம்! தோத்ரம்!-

15

மாலை ஆராதனை

1. வாருமையா போதகரே
வந்தெம்மிடம் தங்கியிரும்
சேருமையா பந்தியினில்
சிறியவராம் எங்களுடன்.

2. ஒளிமங்கி இருளாச்சே
உத்தமனே வாருமையா
கழித்திரவு காத்திருப்போம்
காதலனே கருணை செய்வாய்.

3. ஆதரையில் எம் ஆறுதலே
அன்பருக்கு சதாவுறவே
பேதையர்க்குப் பேரறிவே
பாதை மெய்ஜீவ சற்குருவே.

4. நானிருப்பேன் நடுவிலென்றாய்
நாயனுன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய
தற்பரனே நலம் தருவாய்.

5. உன்தன்மனை திருச்சபையை
உலகமெங்கும் வளர்த்திடுவாய்
பந்தமற பரிகரித்தே
பாக்கியமளித் தாண்டருள்வாய்

16

1. வந்தாளுமே, எந்நாளுமே,
உன் நாமமே, என் தாபமே,
இந்நேரமே, கண்பாருமே.

2. என் மேசையா உன்னாசையே
கொண்டோசையாய் நான்பேசவே,
நின்னாசீர்தா நன்னேசமாய்.

3. தேவாவியே, வரந்தாரும்,
இப்பாவியின் பாவந்தீரும்
உன்ஜோதியின் ஒளிவீசும்.

4. இப்பாரிலே நின்பேரையே
தப்பாமலே யான் பாடியே
எப்போதுமே கொண்டாடுவேன்

5. சத்துருக்கள் சதிசெய்ய
நித்தமெனை நெருக்குரார்
அத்தனேதா னடைக்கலம்.

17

பல்லவி

பாதம் ஒன்றே வேணும் - இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் - உன்

சரணங்கள்

1. நாதனே, துங்க மெய் - வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய - தூதர் தொழுஞ் செய்யப் -

2. சீறும் புயலினால் - வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் - நீர்மேல் நடந்த உன்-

3. வீசும் கமழ் கொண்ட - வாசத் தயிலத்தை
ஆசையுடன் - மரி பூசிப் பணிந்த பொற் -

4. போக்கிடமற்ற எம் - ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந் - தூக்கி நடந்த நற் -

5. நானிலத்தோர் உயர் - வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத் - தானே கொடுத்த உன் -

6. பாதம் அடைந்தவர்க் - காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு - நாதனே, என்றும் உன்

18

களிப்பும் துதிப்பும்

பல்லவி

சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசுக் கிறிஸ்துவுக்குத்
தோத்திரம் புகழ்ச்சி நித்திய கீர்த்தனம் என்றும்!

அனுபல்லவி

அந்தரம் புவியும் தந்து, சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினார்: நமை ஒன்றாய்க் கூட்டினார்: அருள் முடி
சூட்டினார்: கிருபையால் தேற்றினாரே. துதி-

சரணங்கள்

1. பாதகப் பிசாசால் வந்த தீதெனும் பவத்தால் நொந்த
பாவிகளான நமை உசாவி மீட்டாரே:
வேத பிதாவுக் குகந்த ஜாதியாகக் கூட்டவந்த
மேசியாவைப் பற்றும் விசு வாச வீட்டாரே,
கோதணுகா நீதி பரன் பாதமதின் ஆதரவில்
கூடுங்கள்:- பவத்துயர்
போடுங்கள்: - ஜெயத்தைக் கொண்
டாடுங்கள்: துதிசொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும்

2. விண்ணிலுள்ள ஜோதிகளும், எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து போற்றவே
மண்ணிலுள்ள ஜாதிகளும் நண்ணும் பல பொருள்களும்
வல்லபரன் எனத் துதி சொல்லி ஏத்தவே,
அண்ணலாம் பிதாவுக்கொரேபுண்ணியக் குமாரனைக்கொண்
டாடிட,-அவர் பதம்
தேடிட,-வெகு திரள்
கூடிட, துதி புகழ் பாடிட, பாடிட என்றும்-

3. சத்தியத் தரசர்களும் உத்தியோகத் துரைகளும்
சங்கத்தோர் களுங்கிருபை தங்கி வாழவே,

எத்திசை மனிதர்களும் பக்தர் விசுவாசிகளும்
ஏக மிகுஞ் சமாதான மாக வாழவே,
உத்தம போதகர்களும் சத்திய திருச் சபைகளும்
உயர்ந்து - வாழ, தீயோன்
பயந்து - தாழ, மிக
நயந்து கிறிஸ்துவுக்கு ஜெயந்தான், நயந்தான் என்றும்-

19

பல்லவி

எந்நாளுமே துதிப்பாய் - என்னாத்துமாவே நீ
எந்நாளுமே துதிப்பாய்

அனுபல்லவி

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவு மறவாது-

சரணங்கள்

1. பாவங்கள் எத்தனையோ - நினையா திருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ
பாழான நோவைப் பறத்திக் குணமாக்கி
பாரினில் வைத்த மகாதயவை நினைத்து-

2. எத்தனையோ கிருபை - இரக்கங்களினாலே
எத்தனையோ கிருபை
நித்தமுனைமுடி சூட்டினதுமன்றிச்
செத்திடாவுன் சொந்த ஜீவனை மீட்டதால்-

3. நன்மையாலுன் வாயை - நிறைத்தாரே பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை
உன்வயது கழுகைப்போல் வலுவடைந்
தின்னும் இளமைபோ லாகச் செய்ததாலே

4. பூமிக்கும் வானத்துக்கும் -உள்ள தூரம் போலவே
பூமிக்கும் வானத்துக்கும்
சாமி பயமுள்ளவர் மேலவர் கிருபை
சாலவும் தங்குமே சத்தியமேயிது.

5. மன்னிப்பு மாட்சிமையாம் - மாதேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்.
மேற்குக் கிழக்கதின்தூரம் அறிவாயோ
மேதினி லுன்பாவம் போனதத் தூரமே,-

6. தந்தைதன் பிள்ளைகட்குத் - தயவோடிரங்கானோ?
தந்தைதன் பிள்ளைகட்கு
எந்த வேளையவரோடு நீ தங்கினால்
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே,-

20

பல்லவி

உனக்கு நிகரானவர் யார்? -இந்த
உலக முழுவதிலுமே

அனுபல்லவி

தனக்குத் தானே நிகராம் தாதை திருச் சுதனார்
மனுக்குலம் தன்னை மீட்க மானிடனாக வந்த-

சரணங்கள்

1. தாய் மகளுக்காகச் சாவாளோ-கூடப்பிறந்த
தமையன் தம்பிக்காய் மாய்வானோ?
நேயன் நேயர்க்காய் வீவானோ? தனதுயிரை
நேர் விரோதிக்காய் ஈவானோ?
நீ இம் மண்ணுலகில் நீசர்கட்காக வந்து
காயும் மனமடவர்க்காக மரித்தாய் சுவாமி-

2. கந்தை உரித்தெறித்தனை-நீதியின் ஆடை
கனக்க உடுத்துவித்தனை.

மந்தையில் சேர்த்து வைத்தனை, கடிகணையை
மாற்றி எந்தனைக் காத்தனை:
கந்த மலர்ப் பாதனே, கனக ரத்ன மேருவே,
சிந்தை உவந்து வந்த தியாக ராசனே, சுவாமி-

21

பல்லவி

எத்தனை நாவால் துதிப்பேன் - எந்தன்
கர்த்தா உன் கருணையைப் பாடிப் புகழ்ந்து

அனுபல்லவி

நினைக்க நினைக்க எந்தன் நெஞ்சமெல்லாம் உருகும்
நின்னைச் சொல் மாலையால் சூட்டி மகிழும்

சரணங்கள்

1. நம்பினோரல்லோ அறிவார் - எந்தன்
தம்பிரானே உந்தன் கம்பீர குணம்,
அம்பரா உன் அன்பின் அதிசய நடத்துதல்
சம்பூரண சவரட்சணை செல்வம்.

2. பிரார்த்தனை கேட்கும் பெம்மானே - இந்தப்
பேதை பலவீனம் பாராதருள் கோனே!
சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோர்
தாவிப் பிடித்துக் கவலை தீர்த்தோனே!

3. துணிவாய் என் நெஞ்சே தீவிரமாய்-மிக
தொழுது ஆண்டவன் செயல் நினைந்து,
எண்ணில் அடங்காது இறைவனின் கிருபை
விண்ணவன் சேவையில் வீரமாய்ச் செல்லு.

22

பல்லவி

எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!
எளியேன் மேல் இரங்கையனே

அனுபல்லவி

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே:
நிலைவரம் எனில் இல்லை! நீ என் தாபரமே

சரணங்கள்

1. பத்தும் உன் மேல் எனக்கில்லை என்பேனோ?
பணிந்திடல் ஒழிவேனோ?
சித்தமுறுங்கரம் கால்கள், விலாவினில்
தோன்றுது காயங்கள் தூய சிநேகா -

2. எந்தன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடாதிருக்கையிலே
உன்றன் மிகுங் கிருபை, ஓ! மிகவும் பெரிதே
உத்தம மனமுடையோய், எனை ஆளும்-

3. ஆயங் கொள்வோன்போல், பாவ ஸ்திரீ போல்
அருகிலிருந்த கள்ளன் போல்,
நேயமாய் உன் சரண் சரண் என வணங்கினேன்:
நீ எனக்காகவே மரித்தனை, பரனே-

4. கெட்ட மகன் போல் துட்டனாய் அலைந்தேன்
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்:
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அல நான்:
எனை ரட்சித்திடல் உன்றன் நிமித்தமே, அப்பனே-

23

பல்லவி

எல்லாம் ஏசுவே - எனக்கெல்லாம் யேசுவே.

அனுபல்லவி

தொல்லைமிகு மிவ்வுலகில் - துணை யேசுவே

சரணங்கள்

1. ஆயனும் சகாயனும் நேயனு முபாயனும்
நாயனு மெனக்கன்பான ஞானமண வாளனும்,-

2. தந்தைதா யினம்ஜனம் பந்துளோர் சிநேகிதர்
சந்தோட சகலயோக சம்பூரண பாக்கியமும்,-

3. கவலையி லாறுதலும் கங்குலிலென் ஜோதியும்
கஷ்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட ஔஷதமும்,-

4. போதகப்பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும்,-

5. அணியு மாபரணமும் ஆஸ்தியும் சம்பாத்யமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்
ஞானகீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும்,-

24

பல்லவி

தந்தானைத் துதிப்போமே, - திருச்
சபையாரே, கவி - பாடிப்பாடி

அனுபல்லவி

விந்தையாய் நமக்கனந்தனந்தமான
விள்ளற்கரியதோர் நன்மை மிகமிகத் -

சரணங்கள்

1. ஒய்யாரத்துச் சீயோனே,- நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும்-

2. கண்ணாரக் களித்தாயே - நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்து, புசித்து,
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனாமாரிபோற் பெய்துமே-

3. சுத்தாங்கத்து நற்சபையே, - உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனை சத்தியாக்கத் தமின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்து உயிர் வரம்-

4. தூரத்திரிந்த சீயோனே, - உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி
ஆரங்கள் பூட்டி யலங்கரித்து உனை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை!-

5. சிங்காரக் கன்னிமாரே,- உம்
அலங்காரக் கும்மி யடித்துப் படித்து
மங்காத உன் மணவாளன் யேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும்.

25

பல்லவி

துதிப்பேன் துதிப்பேன் ஏசு தேவனை
அல்லேலூயா பாடி
துதிப்பேன் துதிப்பேன் ஏசு தேவனை

அனுபல்லவி

துதிப்பேன் லோகத்தின் பாவத்தை நீக்கிடத்
தூயவனாய் வந்த தேவ குமாரனைத்,-

சரணங்கள்

1. கருணை நிறைந்த கண்ணுள்ளோரவர்,
தம் ஜனத்தின் கூக்குரல்
கருணை கூர்ந்து கேட்கும் காதுள்ளோர்
லோகப் பாவச் சுமைதனை
சிரசுகொண்டு சுமந்தளிக்க வென்றே
குருசெடுத்துக் கொல்கதாவில் சென்றோரைத்-

2. பொற் குத்துவிளக்கு ஏழு மத்தியிலே,
எங்கள் யேசுநாயகர்
பொற்கச்சை மார்பினில் கட்டி நிற்கிறார்.
நீல அங்கி தரித்தோராய்க்
கற்பிக்கும் காரியம் கவனமாய்க் கேட்டுச்
சொற்படி செய்வோரைத்
தப்பாமல் மீட்போரைத்-

3. வழியும் சத்யமும் ஜீவனுமவரே
அவரருகில் வருவீர்
வழியிலாறுதல் செய்பவரவரே!
லோக பாவத்தைச் சுமந்தார்
பழைய சுபாவங்கள் ஒழித்து முற்றுமாய்
அழித்துப் பக்தரை மோட்சத்தில் சேர்ப்போரைத்-

26

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்
மன்னன் ஏசு நாதருக்கே வான்முடி சூட்டுங்கள்!

பல்லவி

ராசாதி ராசனேசு, யேசுமகா ராசன்! - அவர்
ராச்சியம்புவி யெங்குமகா மாட்சியில் முழுங்க
அவர் திருநாமமே விளங்க-அவர் திருநாமமேவிளங்க
அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயாவே!
அல்பா ஒமேகாவுக்கு அல்லேலூயாவே!

2. நன்மனதோ டுரைக்கின்றேன் நாட்டார்களே நீங்கள்
புன்னகையோ டன்பருக்குப் பொன்முடி சூட்டுங்கள்.-

3. இந்தியா தேசத்தவரே ஏகமாய்க் கூடுங்கள்
சிந்தனை யோடேயவர்க்குச் செம்முடி சூட்டுங்கள்.-

4. யேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்
ராசராசரின் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்

5. சகல தேச தேசத்தாரே சாஷ்டாங்கம் செய்யுங்கள்
மகத்வ ராசராசருக்கே மாமுடி சூட்டுங்கள்.-

27

பல்லவி

ஏசுவையே துதிசெய், நீ மனமே!
ஏசுவையே துதிசெய், கிறிஸ் தேசுவையே.

சரணங்கள்

1. மாசணுகாத பராபர வஸ்து,
நேச குமாரன் மெய்யான கிறிஸ்து-

2. அந்தர வான்தரை யுந்தரு தந்தன்,
சுந்தர மிகுந்த சவுந்தர நந்தன்,-

3. எண்ணின காரியம் யாவு முடிக்க,
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க,-

28

பல்லவி

என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!
சொல்லக்கூடாதே
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே

சரணங்கள்

1. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் நன்றாய்
மகிழ்கொண்டாடுவோம்:
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம்.

2. பாவங்கள் சாபங்கள், கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே:

தேவாதி தேவன் என் உள்ளத்தை வந்து
தேற்றியே விட்டாரே,-

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்
கருளினதாலே
நிச்சய சுவாமியைப் பற்றியே சாட்சி
பகரவேண்டியதே,-

4. வெண்ணங்கி பொன்முடிவாத்தியம் மேல்வீட்டில்
ஜெயக் கொடியுடனே:
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனைத் தோத்திரிப்போம்,-

29

திரியேகர்

1. சருவ லோகாதிபா, நமஸ்காரம்!
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே நமஸ்காரம்!

2. திரு அவதாரா, நமஸ்காரம்!
ஜெகத் துரட்சகனே, நமஸ்காரம்!
தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில் மாண்டோய் நமஸ்காரம்!

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்!
பரம சற்குருவே, நமஸ்காரம்!
அருபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே, சதா நமஸ்காரம்!

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்!
மூன்றிலொன்றோனே, நமஸ்காரம்!
கர்த்தாதி கர்த்தா, கருணாசமுத்திரா,
துத்திய திரியேகத்வா, நமஸ்காரம்!

30

பல்லவி

சீர்திரியேக வஸ்தே நமோ நமோ, நின்
திருவடிக்கு நமஸ்தே நமோ நமோ!

அனுபல்லவி

பார்படைத்தாளும் நாதா,
பரம சற்பிரசாதா
நாருறுந் தூயவேதா, நமோ, நமோ, நமோ!

சரணங்கள்

1. தந்தை பராபரனே நமோ, நமோ, எமைத்
தாங்கி ஆதரிப்போனே - நமோ, நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய்,
சொல்லரும் நலமீந்தாய்,
எந்தவிர் போக்குமெந்தாய், நமோ, நமோ, நமோ,

2. எங்கள் பவத்தினாசா நமோ, நமோ, புது
எருசலேம் நகர்ராசா நமோ, நமோ,
எங்கும் நின் அரசேறே,
எவரும் நின் புகழ்கூற,
துங்க மந்தையிற் சேர, நமோ, நமோ, நமோ.

3. பரிசுத்த ஆவி தேவா நமோ, நமோ, திட
பலமளித் தெமைக்காவா, நமோ, நமோ,
கரிசித்துத்தா நற்புத்தி,
கபடற்ற மனசுத்தி
திருமொழி பற்றும்பக்தி, நமோ, நமோ, நமோ.

31

1. சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்,
ஏர்குணனே, தோத்ரம் அடியார்க்கு
இரங்கிடுவாய், தோத்ரம், மாநேசா.

2. நேர்மிகு அருள் திரு அன்பா, தோத்ரம்
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்,
ஆர் மணனே, தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம் மா நேசா.

3. ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்,
தினம், தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்
ஆவலுடன் தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா.

4. ஆத்தும நன்மைகட்காவும், தோத்ரம்
அதிசய நடத்துதற்காவும், தோத்ரம்,
சாற்றுகிறோம் தோத்ரம், உனது
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா.

5. மாறாப் பூரண நேசா, தோத்ரம்
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்,
தாராய் துணை, தோத்ரம், இந்தத்
தருணமே கொடு தோத்ரமே, மா நேசா.

32

பல்லவி

ஆதிப் பிதாக்குமாரன் - ஆவி திரியேகர்க்கு
அன வரதமும் தோத்திரம் - திரியேகர்க்கு
அனவரதமும் தோத்திரம்

அனுபல்லவி

நீத முதற் பொருளாய் நின்றருள் சருவேசன்,
நிதமும் பணிந்தவர்கள் இருதய மலர் வாசன்,
நிறைந்த சத்திய ஞான மனோகர,
உறைந்த நித்திய வேத குணாகர,
நீடுவாரி திரை சூழ மேதினியை
மூடுபாவ இருள் ஓடவே அருள்செய் - (ஆதி)

1. எங்கணும் நிறைந்த நாதர் - பரிசுத்தர்கள்
என்றென்றைக்கும் பணிபாதர்
துங்கமாமறைப்பிர போதர் - கடைசி நடு
சோதனை செய் அதி நீதர்
பங்கில்லான், தாபம் இல்லான், பகர் அடி முடிவில்லான்
பன் ஞானம், சம்பூரணம், பரிசுத்தம், நீதி என்னும்
பண்பதாய் சுயம்பு விவேகன்
அன்பிரக்க தயாளப் பிரவாகன்
பார்தலத்தில் சிருஷ்டிப்பு, மீட்பு, பரி
பாலனத்தையும் பண்பாய் நடத்தி, அருள் - (ஆதி)

2. நீதியின் செங்கோல் கைக்கொண்டு - நடத்தினால் நாம்
நீணிலத்தில்லாமல் அழிந்து
தீதறு நரகில் தள்ளுண்டு மடிவோமென்று
தேவ திருவுளம் உணர்ந்து
பாதகர்க்குயிர் தந்த பாலன் யேசுவைக்கொண்டு
பரன் எங்கள் மிசை தயை வைத்தனர்: இது நன்று
பகர்ந்த தன்னடி யார்க்குறு சஞ்சலம்
இடைஞ்சல் வந்த போதே தயவாகையில்
பாரில் நேரிடும் அஞ்ஞான சேதமுதற்
சூரியன் முன் இருள் போலவே சிதறும் - (ஆதி)

33

பல்லவி

தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ!
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே.

அனுபல்லவி

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்.

சரணங்கள்

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதி என்னும்

நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே,
வானபரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும்.-

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார்.-

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்,
நேயம் வீட்டினில் சிறப்போடே,
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்.-

34

பல்லவி

அன்பே! அன்பே! அன்பே!
ஆருயிர் உறவே
ஆனந்தம் ஆனந்தமே.

சரணங்கள்

1. ஒரு நாளுந்தயை கண்டேனையா
அந்நாளென்னை வெறுத்தேனையா
உன் தயை பெரிதையா - என்மேல்
உன் தயை பெரிதையா-

2. பரலோகத்தின் அருமைப் பொருளே
அன்பே உருவாய் அமைந்துள்ளோரே
ஆழம் அறிவேனோ - அன்பின்
ஆழம் அறிவேனோ-

3. அலைந்தேன் பல நாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே - எனையும்
அணைத்தீர் அன்பாலே -

4. பூலோகத்தின் பொருளின் மகிமை
அழியும் புல்லின் பூவைப் போல்
வாடாதே ஐயா - அன்பு
வாடாதே ஐயா-

5. இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ - பரத்தில்
இசைக்கவும் எளிதாமோ-

35

பல்லவி

இயேசு என்ற திருநாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்.

சரணங்கள்

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது:
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது.

2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திருநாமமது:
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்திலே.

3. பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது.

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது:
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது.

5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது:
தடை முற்றுமகற்றிடும் நாமமது.

36

பல்லவி

விசுவாசியின் காதில் பட, யேசுவென்ற நாமம்
விருப்பாயவர் செவியில் தொனி யினிப்பாகுது பாசம்.

சரணங்கள்

1. துயரையது நீக்கிக் காயந்தீர்த்துக் குணப்படுத்தும்:
பயங்கள் யாவும், யேசுவென்றால், பறந்தோடியே போகும்.

2. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்,
தியக்கமுள்ள நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கும்.

3. பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே:
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்றுமந்தப் பெயரே,

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்று நிறைந்திருக்கும்
எல்லா நாளும் மாறாச் செல்வம் யேசுவென்ற பெயரே

5. என்னாண்டவர், என் ஜீவனே, என் மார்க்கமே, முடிவே
என்னால் வருந்துதியே நீரே ஏற்றுக் கொள்ளும், தேவே!

37

பல்லவி

தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்
திவ்ய மதுரமாமே: - அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர்
திருச்சபை யானோரே.

சரணங்கள்

1. காசினிதனிலே நேசமதாகக் கஷ்டத்தை உத்தரித்தே - பாவ
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்: கண்டுணர் நீ, மனமே

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத் தாமே ஈந்தவராம்:- பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு: நிதம் துதி, என் மனமே

3. காலையில் பனிபோல் மாயமாய் உலகம் உபாயமாய் நீங்கி விடும்: என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ மனமே,-

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல துணைவராம் நேசரிடம்: நீ
அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத்துனைக் காப்பார், ஆசை கொள் நீ, மனமே-

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழ்ந்து போற்று நாமம்- அதைப்
பிடித்துக் கொண்டால் தான பேரின்ப வாழ்வைப் பெறுவாய் நீ, மனமே

38

இயேசுவின் திருநாமம் அது எக்காலமும்
எனக்கினிய நற்துணையே

1. உயிர்க்குயிராகி யென் உள்ளுரை அமுதாம்
உத்தமர் தமதுள்ளம் உவந்திடும் தேனாம்
பயிலப் பயில ஜீவ பழந்தரும் தருவாம்
பக்திரசம் பெருகும் பரமநல் ஊற்றாம்

2. வானிலிருந்தது வையகம் வந்தது
வாக்கு மெய் மனதிற்கும் வாயப்பதரிதது
ஊனமுற்றிடும் நரர்க்குறுவளியளித்திடும்
உற்றார் பெற்றாரிலும் உரிமையாதாகிடும்

3. அன்பும் அருளுமது அறனும் திறனுமது
அண்டி வந்தவர்க்கெல்லாம் அடைக்கலமதுவே
துன்ப துயரமெல்லாம் துடைக்கும் நல் மருந்தே
துயிலும் காலத்திலும் என் துணையாம் மந்திரமே

39

பல்லவி

இயேசுவின் நாமமே திருநாமம் - முழு
இருதயத்தாற் தொழுவோம் நாமும்

1. காசினியி லதனுக் கிணையில்லையே: - விசு
வாசித்த வர்களுக்குக் குறையில்லையே.-

2. இத்தரையில் மெத்தவதி சயநாமம்: - அதை
நித்தமுந் தொழுபவர்க்கு ஜெயநாமம்.-

3. உத்தம மகிமைப் பிரதாபநாமம்:- இது
உண்மை யிதுஉண்மை, மனமொத்தநாமம்.-

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம்: - கடும்
வேதாளங் கண்டு பயந்தோடும் நாமம்:-

5. பட்சமுடன் ரட்சைசெயு முபகாரி, - தீய
பாவப்பிணி தவிர்க்கும் பரிகாரி.-

40

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம், இன்ப நாமம்.

1. பாவத்தைப் போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம், பக்தருக்களிக்கும்

2. பரிமள தைலமாம் இயேசுவின் நாமம்
பாரெங்கும் வாசனை வீசிடும் நாமம்

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்

4. நேற்றும் இன்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம்

5. முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாப பிசாசை துரத்திடும் நாமம்.

41

பல்லவி

இன்பமிதே பேரின்பமிதே
இயேசு நாமம் இன்பமிதே
இன்பமிதே நல் இன்பமிதே
இயேசு நாமமே

1. பாவம் போக்க வந்த நாமம்
இயேசு நாமமே
வாதைப் போக்க வந்த நாமம்
இயேசு நாமமே

2. சாவுபயங்கள் நீக்கும் நாமம்
இயேசு நாமமே
சாபம், ரோகம், நீக்கும் நாமம்
இயேசுவின் நாமமே

3. ஜீவ பாதை காட்டும் நாமம்
இயேசு நாமமே
ஜீவன் பெலன் தந்த நாமம்
இயேசுவின் நாமமே

4. நேற்றும் இன்றும் மாறா நாமம்
இயேசு நாமமே
தேனிலும் இனிய நாமம்
இயேசுவின் நாமமே

5. தேவ ராஜ்யம் சேர்க்கும் நாமம்
இயேசு நாமமே
தேவ நீதி நிறைந்த நாமம்
இயேசுவின் நாமமே

42

பல்லவி

ஏசு நாமம் ஒன்றை நம்புவீர்
பூலோகத்தாரே.

சரணங்கள்

1. ஏசு நாமம் ஒன்றை நம்பும்:
ரட்சண்யத்துக் கிதுவே ஸ்தம்பம்:
பேசும் வேறே நாமெல்லாம்
பேயின் வம்பும் தும்புமாகும்

2. பார்த்திபன் தவிது குலக்
கோத்திர கன்னிமரிபால்
நேத்திரம போலே உதித்துத்
தாத்திரி ரட்சகனான

3. பூதலக் தஞ்ஞான இருள்
போக்கவே மெய்ஞ்ஞான பெரும்
ஜோதியாய் விளங்கி நிற்கும்
நீதியின் சூரியன் ஆன-

4. பாவிகளீடேற மோட்சப்
பாக்கியம் பெறுவதற்காய்
ஜீவன் விட்டுயிர்த்தெழுந்து
சேணுலகுக்கேறிச் சென்ற-

5. விண்டலத்தவர்கள் சூழக்,
கண்டலகை பதறி வீழ,
மண்டலத்தைத் தீர்வை செய்யக்
கொண்டல் மிசை வரும் ராஜன்-

43

கிறிஸ்துவின் பிறப்பு

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித் துதி, மனமே, இன்னும்

சரணங்கள்

1. சருவத்தையும் படைத்து ஆண்ட சருவல்லவர் இங்கு
தாழ்மையுள்ள தாய்வயிற்றில் தலைசாய்க்கலானார்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவ மைந்தனார் - இங்கு
பங்கமுற்றுப் பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார்.-

3. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக - இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே.-

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர்- இங்கு
ஆக்களுடை சத்தத்துக்குள் அழுது பிறந்தார்

5. இந்தடைவாய் அன்புவைத்த எம் பெருமானை நாம்
எண்ணமுடன் போய்த் துதிக்க ஏகிடுவோமே:-

44

ஆதித்திருவார்த்தை திவ்விய அற்புதப் பாலனாகப் பிறந்தார்
ஆதந்தன் பாவத்தின் சாபத்தைத் தீர்த்திட
ஆதிரை யோரை யீடேற்றிட.

அனுபல்லவி

மாசற்ற ஜோதி திரித்துவத்தோர் வஸ்து
மானிட ரூபந்தனை எடுத்து;
மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்,

தாம், தாம், தன்னர வன்னர
தீம், தீம், தீமையகற்றிட
இங்கிர்த, இங்கிர்த, இங்கிர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட:-

சரணங்கள்

1. ஆதாம் ஓதி ஏவினார்: ஆபிரகாம் விசுவாசவித்து
யூதர் சிம்மாசத்தாளுகை செங்கோல்
ஈசாய் வங்கிஷத் தானுதித்தார்-

2. பூலோகப்பாவ விமோசனர், பூரணக்கிருபையின் வாசனர்
மேலோக இராஜாதி இராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார்.-

3. அல்லேலூயா! சங்கீர்த்தனம், ஆனந்த கீதங்கள் பாடவே,
அல்லைகள், தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார்-

45

பல்லவி

துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்
சுப மங்கள மிகு சம்பிரம சுப சோபன ஷேமம்:

சரணங்கள்

1. அதி சுந்தர நிறை கொண்டுயர் அருள் மோக்கிஷ தீபன்,
கதி உம்பர்கள் தொழும் இங்கித கருணைப் பிரதாபன்

2. மந்தைஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய அத்தனார்
நிந்தையால் ஒரு கந்தை மூடவும் வந்த மாபரி சுத்தனார்

3. திருவான் உல கரசாய் வளர்தேவ சொரூபானார்
ஒருமாதுடை வினை மாறிட நரர் ரூபமதானார்

4. அபிராம் முனி யிடமேவிய பதிலாள் உபகாரன்
எபிரேயர்கள் குலம் தாவீ தென் அரசற் கோர் குமாரன்

5. சாதா ரண வேதா கம சாத்ர சுவிஷேன்
கோதே புரி ஆதா முடை கோத்ர திரு வேஷன்

6. விண் ணாடரும் மண் ணாடரும் மேவுந் திருப்பாதன்
பண்ணோதுவர் கண்ணாம் வளர் பரமண்டல நாதன்.

46

பல்லவி

சீரேசுநாதனுக்கு ஜெயமங்களம், ஆதி
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்.

அனுபல்லவி

பாரேறு நீதனுக்குப் பரம பொற்பாதனுக்கு,
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்குச்,-

1. ஆதி சருவேசனுக்கு ஈசனுக்கு மங்களம்:
அகிலப்ரகாசனுக்கு, நேசனுக்கு மங்களம்
நீதிபரன் பாலனுக்கு நித்திய குணாளனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு உயர்மனு வேலனுக்குச்,-

2. மானாபிமானனுக்கு வானனுக்கு மங்களம்:
வளர்கலைக் கியானனுக்கு ஞானனுக்கு மங்களம்,
கானான் நற்தேயனுக்குக், கன்னிமரி சேயனுக்குக்
கோனார்சகாயனுக்குக், கூறுபெத்த லேயனுக்குச்,

3. பத்து லட்சணத்தனுக்குச், சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு, நித்தனுக்கு மங்களம்:
சத்திய விஸ்தாரனுக்குச், சருவாதிகாரனுக்குப்,
பக்தருப காரனுக்குப், பரம குமாரனுக்குச்.

47

பல்லவி

தோத்திரம் செய்வேனே, - ரட்சகனைத்
தோத்திரம் செய்வேனே.

அநுபல்லவி

பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணை வைத்த
பாத்திபனை, யூத கோத்திரனை, என்றும்-

சரணங்கள்

1. அன்னை மரி சுதனைப் - புல் மீது
அமிழ்துக் கழுதவனை,
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனை,-

2. கந்தை பொதிந்தவனை,- வானோர்களும்
வந்தடி பணிபவனை
மந்தையர்க் கானந்த மாட்சியளித்தோனை,
மான பரன் என்னும் ஞான குணவானை,

3. செம்பொன் னுருவானை,- தேசிகர்கள்
தேடும் குருவானை,
அம்பர மேவிய உம்பர் குழாங்களோ
அன்பு பெற நின்று, பைம் பொன் மலர் தூவி,-

48

பல்லவி

ஆரிவரா ராரோ? - இந்த - அவனியோர் மாதிடமே,
ஆனடை குடிலிடை மோனமாயுதித்த இவ்வற்புதப் பாலகனார்?

சரணங்கள்

1. பாருருவாகு முன்னே-இருந்த-பரம் பொருள் தானிவாரோ?
சீருடன் புவி, வான், அவை பொருள் யாவையுஞ்
சிருட்டித்த மாவலரோ?-

2. மேசியா இவர்தானோ?-நம்மை-மேய்த்திடும் நரர்கோனோ?
ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் அதி அன்புள்ள
மனசானோ?

3. தித்திக்குந் தீங்கனியோ?-நமது தேவனின் கண்மணியோ?
மெத்தவே யுலகிருள் நீக்கிடு மதிசய, மேவிய
விண்ணொளியோ?

4. பட்டத்துத் துரைமகனோ?-நம்மைப் பண்புடனாள்பவனோ?
கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக் காட்டிடுந்
தாயகனோ?

5. ஜீவனின் அப்பமோதான்?-தாகம் தீர்த்திடும்பானமோதான்?
ஆவலா யேழைகளடைந்திடு மடைக்கல மானவ ரிவர்தானோ?

49

பல்லவி

ராஜ ராஜ பிதா மைந்த தேசுலாவுசதா நந்த
யேசு நாயகனார் சொந்த மேசியா நந்தனே!

அனுபல்லவி

ஜெகதீசு ரேசுரன், சுகநேச மீசுரன்! மக-

சரணங்கள்

1. மாசிலாமணியே! மந்தர ஆசிலா அணியே! சுந்தர
நேசமே பணியே, தந்திர மோசமே தணியே:
நிறைவான காந்தனே! இறையான சாந்தனே! மறை-

2. ஆதியந்த மில்லான் அந்த மாதினுந்தியிலே முந்த
வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே:
பத ஆமனாமனா! சுதனாமனாமனா! சித-

3. மேன்மையாசனனே! நன்மை மேவு போசனனே! தொன்மை
பான்மை வாசனனே! புன்மை பாவ மோசனனே!
கிருபா கரா நரா! சருவேசுரா! பரா சிரி-

4. வீடு தேடவுமே, தந்தை நாடு கூடவுமே. மைந்தர்
கேடு மூடவுமே, விந்தையோடு பாடவுமே,
நரவேடமேவினான்: சுரராடு கோவினான்! பர-

50

1. மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க
வல்ல பராபரன் வந்தார், வந்தார், - பாவி

2. இந்நிலம் புரக்க, உன்னதத் திருந்தே
ஏகபராபரன் வந்தார் வந்தார் - பாவி

3. வானவர் பணியுஞ் சேனையின் கருத்தர்
மகிமைப் பராபரன் வந்தார் வந்தார் - பாவி

4. நித்திய பிதாவின் நேய குமாரன்
நேமி அனைத்தும் வாழ வந்தார், வந்தார் - பாவி

5. மெய்யான தேவன், மெய்யான மனுடன்
மேசியா ஏசையா வந்தார், வந்தார் - பாவி

6. தீவினை நாசர், பாவிகள் நேசர்
தேவ கிறிஸ்தையா வந்தார், வந்தார் - பாவி

7. ஜெய அனுகூலம் திவ்விய பாலர்
திரு மனுவேலனே, வந்தார், வந்தார் - பாவி

51

பல்லவி

சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து
இவர்தாம், இவர்தாம், இவர்தாம், இவர்தாம்

சரணங்கள்

1. நமதாதி பிதாவின் திருப்பாலர் இவர்
அனுகூலம் இவர், மனுவேலர் இவர், சமா

2. நேய கிருபையின் ஒரு சேயர் இவர்
பரம ராயர் இவர் நம தாயர் இவர் சமா

3. ஆதிநரர் செய்த தீதறவே,
அருளானந்தமாய், அடியார் சொந்தமாய் சமா

4. ஆரணம்பாடி விண்ணோர் ஆடவே,
அறிஞோர் தேடவே, இடையோர் கூடவே சமா

5. மெய்யாகவே மே சையாவுமே
நம்மை நாடினாரே, கிருபை கூறினாரே சமா

6. அருளானந்த மோட்ச வழி காட்டினாரே
நிலை நாட்டினாரே, முடி சூட்டினாரே சமா

52

1. சுந்தரப்பராபரனே, - பரி-சுத்தன் கிறிஸ்தெனும் நித்தியனே
மைந்தனாய்ப் பிறந்தீரோ? சுவாமி
மாய்கிஷத்தில் உருவானீரோ?

2. வானதூதர் போற்றிடவே-உம்மை-வாழ்த்திப் புகழ்ந்து
கொண்டேத்திடவே,
கானத் தொனி ஏற்றிருந்த சுவாமி
காட்டு மடத்தில் உதித்த தென்ன?

3. ஆசைமிகும் ஆபிரகாம் உருவாகும் முன் விண்தல
மீதிருந்தும்
நேசமுடன் பிள்ளை தந்தும் - அந்த
நீதிமான் வங்கிஷம் ஆனதென்ன?

4. ராஜன் தவீ தாண்டவனும் - அவன் நண்ணும்
பல தீமையில் மீண்டவனும்
தாசன் மகன் ஆனதும் ஏன்? சுவாமி
தாவீதின் சந்ததி மேவின தேன்?

5. பொய்கு பவ நாசனனே விண்ணோர், போற்றிப்
புகழுஞ் சிம்மாசனனே,

தங்குதற் கிடம் இல்லையோ? சுவாமி
தாபரிக்க ஊர் இல்லையோ.

53

பல்லவி

ஆ! அம்பர உம்பர மும்புகழுந்திரு
ஆதிபன் பிறந்தார்

அனுபல்லவி

ஆதிபன் பிறந்தார் அமலாதிபன் பிறந்தார்

சரணங்கள்

1. அன்பான பரனே? அருள் மேஷங் காரணனே! நவ
அற்செய சச்சிதா ரட்சகனாகிய
உச்சிதவரனே! ஆ

2. ஆதம் பவமற நீதம் நிறைவேற - அன்று
அல்லிராவினில் - வெல்லைவடியினிற்,
புல்லணையிற் பிறந்தார் ஆ

3. ஞானர்கள் தேட, வானவர் பாட - மிக
நன்னய, உன்னத பன்னரு மேசையா
இந்நிலம் பிறந்தார்! ஆ

4. கோனவர் நாட தானவர் கொண்டாட - என்று
கோத்திரர் தோத்திரஞ் சாற்றிடவே,
யூத கோத்திரன் பிறந்தார். ஆ

5. விண்ணோடு தோண மன்னவர் பேண, ஏரோது
மைந்தனின் சிந்தையமுந்திக் கலங்கிட
விந்தையாய்ப் பிறந்தார்:- ஆ

54

ஆண்டவரது
வாழ்க்கையும் ஊழியமும்

1. இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே,
நேச முசிப்பாறுதல், இயேசுவில் கண்டேன் யானும்.

2. பஞ்சம், பசியுடனே, மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இவையை என், தஞ்சம் ஏசிருக்கையில்

3. என்ன மதுரம் அவர், நன்னய நாமச் சுவை
என்னகத்தில் நினைத்தால், இன்னல் பறந்திடுமே

4. லோகம் என்னை எதிர்த்து போவென்று சொல்லிடினும்
சோகம் அடைவேனோ, என் ஏகன் எனக்கிருக்க.

5. என்னென்ன மாயலோகக் கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமா யேசு, என்னை நடத்திடுவார்.

6. வியாதியால் எந்தனது காயம் கெட்டுப் போயினும்
மாயத் தோற்றத்தை யேசு, நாயகன் மாற்றிடுவார்.

7. பாவத்தால் என்னில் வந்த சாபக் கறைகள் மாற்றி;
சோபித நீதியுடை, ஆபரணமாய் ஈவார்.

8. ஆசை என் மணவாட்டி, ஆக்குவேன் உன்னையெனும்:
நேச உறுதியுரை, இயேசு எனக்களித்தார்.

55

பல்லவி

மேசியா ஏசு நாயனார்: -எமை
மீட்கவே நரனாயினார்.

சரணங்கள்

1. நேசமாய் இந்தக் காசினியோரின்
நிந்தை அனைத்தும் போக்கவே

மாசிலான் ஒரு நீசனாகவே
வந்தார் எம் கதி நோக்கவே மேசியா

2. தந்தையின் சுதன் மைந்தர் பாதகம்
சமஸ்தமும் அற வேண்டியே
விந்தையால் குடில் மீது வந்தனர்
விண்ணுலகமும் தாண்டியே மேசியா

3. தொண்டர் வாழவும் அண்டரின் குழாம்
தோத்திரம் மிகப் பாடவும்
அண்டு பாவிகள் விண்ணடையவும்
ஆயர் தேடிக் கொண்டாடவும்: மேசியா

4. தேவனாம் நித்ய ஜீவனாம் ஒரே
திருச் சுதன் மனுவேலனார்
பாவிகள் எங்கள் பாவம் மாறவே
பார்த்திபன் தேவ பாலனார்.

56

பல்லவி

இவரே பெருமான் மற்றப்பேர்
அலவே பூமான், - இவரே பெருமான்

சரணங்கள்

1. கவலைக் கிடங்கொடுத் தறியார், - வேறு
பவவினை யாதுமே தெரியார், - இப்
புவனமீது நமக்குரியார்.-

2. குருடர்களுக் குதவும் விழியாம் - பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம், - தெய்வம்
இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம்.-

3. பலபிணி தீர்க்கும் பரிகாரி, - சொல்லும்
வலமையில் மிக்க விபகாரி, - எக்
குலத்துக்கும் நல்ல உபகாரி.-

4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன், - கொடு
மறம்விடு பவர்க்கருள் முத்தன், -இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன்.-

5. அலகைதனை ஜெயித்த வீரன்,- பவ
உலகை ரட்சித்த எழிற்பேரன்,- விண்
ணுலகு வாழ் தேவ குமாரன்.-

6. பொன்னுலகந் தனில்வாழ் யோகன். - அருள்
துன்ன உலகில் நன்மைத் தேகன், - நம்பால்
தன்னை யளித்த ஓர் தியாகன்.

57

பல்லவி

ஏசு ராசா, - எனை ஆளும், நேசா

சரணங்கள்

1. மாசிலா மணி ஆன முச்சுடர்
மேசியா அரசே, - மனு
வேலே, மாமறை நூலே தேவ செங்
கோலே, இங்கெனின் மேலே அன்பு செய்-

2. தாவீ தரசன் மைந்தா, - நின்
சரணம், சரணம், எந்தா! - சதா
னந்தா வா னந்தா, உ
வந்தாள்: மிக வந்தனம், வந்தனம்!

3. ஐயா என் மனம் ஆற்றி, - உன
தடிமை என்றெனைத் தேற்றிக் - குண
மாக்கி, வினை நீக்கிக் கை
தூக்கி மெய்ப் பாக்கியம் கொடு-

4. சுத்த திரித்துவ வஸ்துவே - சுவி
சேட மகத்துவ கிறிஸ்துவே, -பரி
சுத்தனே கரி சித்தெனை இ

ரட்சித் தடிமை கொள்: நித்தியம் ஸ்தோத்திரம்!-

5. மங்களம் ஈசாவே - வள மிகும்
சங்கையின் ராசாவே, - நரர்
வாழ்வே, மன் னாவே மெய்த்
தேவே, உமக் கோசன்னாவே!-

58

பல்லவி

இரத்தம் சிந்தி நம்மையவர்
முத்தி சேர்க்கப் பிறந்தார்.

அனுபல்லவி

நித்தம் அவரோடு வாழச் சத்ய வழி திறந்தார்
கர்த்தரே தம் பக்தர் பாவம் மறந்தார்.-

சரணங்கள்

1. மோசத்துக்குள்ளான - என்னை
யேசு சுவாமி பார்த்தார்;
நாசத்திருந் தோடி வந்த
நீசனையே சேர்த்தார்;
நேச மீட்பர் பாசமாகக் காத்தார்-

2. கெஞ்சி வந்த பாவிகட்காய்த்
தஞ்சமாக நின்றார்:
மிஞ்சி மோசஞ் செய்யு மந்தக்
கஞ்சற் பேயைக் கொன்றார்;
கொஞ்சமுமே அஞ்சிடாமல் வென்றார்,-

3. பொன்னுலகத் தின்பங்களை
என்னுள்ளத்தில் தந்தார்;
தன்னுடன்நற் பங்கு பெற
மன்னர் என்மேல் உகந்தார்:
சின்னப்பட இந்நிலத்தில் வந்தார்.-

4. துன்பம் வரும் வேளையினில்
இன்பமே கொண்டாடுவோம்;
தம்பிரானும் என் மேல் வைத்த
அன்பின் நேசம் பாடுவோம்;
அம்பரத்தில் நண்பருடன் கூடுவோம்,-

59

கிறிஸ்துவின் அன்பு

பல்லவி

இயேசு நேசிக்கிறார், - இயேசு நேசிக்கிறார்
யேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மாதவமோ?

சரணங்கள்

1. நீசனாமெனைத்தான் யேசு நேசிக்கிறார்,
மாசிலாத பரன் சுதன்தன் முழு
மனதால் நேசிக்கிறார்.-

2. பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நரராமீனரை நேசிக்கிறாரென
நவில லாச்சரியம்.-

3. நாதனை மறந்து நாட்கழித் தலைந்தும்
நீதன் யேசெனை நேசிக்கறிாரெனல்
நித்தமாச்சரியம்.-

4. ஆசை யேசுவென்னை அன்பாய் நேசிக்கிறார்
அதை நினைந்தவ ரன்பின் கரத்துளே
ஆவலாய் பறப்பேன்.-

5. இராஜன் யேசுவின் மேல் இன்ப கீதஞ் சொலில்
ஈசன் யேசெனைத் தானே சித்தாரென்ற
இணையில் கீதஞ் சொல்வேன்.-

60

1. அன்பரென் நேசரே உம்மண்டையில்
இன்பமாக உந்தன் பாதை ஓட - நீரே வழியும்
சத்தியமும் ஜீவனுமே.

2. துன்பக் பெருக்கிலே சோர்ந்திடனே என் அன்பர்
அறியாமல் வந்திடாதே-கண்மணிப்போல் நீர்
காத்திடுவீர் கனிவுடனே

3. சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடனும்-வியாகுலம்
என்னை விரட்டிடினும்- ஆ! நேசரே
உம் இன்ப சத்தம் ஈந்திடுமே

4. ஈனச்சிலுவையில் ஏறிட்டீரோ-எந்தனுக்காய்
கஷ்டப்பட்டிட்டீரோ-துன்ப மூலமாய்
ஏகிடுவேன் இன்பக் கானான்

5. மாயையான இதே லோகமதில்-மாய்ந்தழியும்
இந்த மாந்தரன்பு, நேற்றுமின்றென்றும்
மாறிடிரே என் நேசரே

6. வஞ்சனையான இப்பார்தலமே-வஞ்சிக்குமே
மிக தந்திரமாய் வாஞ்த்திடேனே
மோசமான இப்பார் தலத்தை

61

கிறிஸ்துவின் பாடு மரணம்

பல்லவி

பரிசுத்த பரனே ஸ்துதியுமக்கு
பரலோகம் விட்டவரே, ஸ்துதியுமக்கு

சரணங்கள்

1. நரர்சிறை விடுக்க சுரர்புகழ் வெறுத்த
திருமறை முடிவே ஸ்துதியுமக்கு.-

2. திருச்சித்தம் செய்ய நரரூபாய் வந்தவா
கருணையின் கடலே ஸ்துதியுமக்கு.-

3. தலை தானும் வைக்க நிலையின்றித் திரிந்ததாய்,
நிலையே நிதியே ஸ்துதியுமக்கு.-

4. கெத்செமனேயிலதி துயர்கொண்டாய்,
அதிசய அன்பே ஸ்துதியுமக்கு.-

5. அன்னாசின் மனையில், கன்னத்திலறையச்
சின்னப்பட்டவரே ஸ்துதியுமக்கு.-

6. முகத்தினில் துப்பி முதுகினிலடித்தார்!
அகத்தைப் படைத்தவா ஸ்துதியுமக்கு.

7. நெடுங்குருசேறிக் கொடுந்துயர்கொண்டு,
மடிந்த வென்சிரசே ஸ்துதியுமக்கு.-

8. மரணத்தை வென்ற, கரணத்திலாலிந்த
தருணத்தில் மிகுந்த ஸ்துதியுமக்கு.-

62

பல்லவி

பாவி நான் என்ன செய்வேன், - கோவே,
ஜீவன் நீர்விட்டதற்காய்?

அனுபல்லவி

தேவ கோபத்தினால் மேவிச் சிலுவையில்
தாவி உயிர் விட்டு, ஜீவித்த தென்கொலோ?

சரணங்கள்

1. நாடி என்னைத் தயவாய் மணஞ்செய்யத்-தேடி வந்தீர், அரசே
ஆடுகளுக்காக நீடி உயிர் தரப்
பாடுபட்டுக் குரு சூடிறந்தீர் அன்றோ?

2. பொன்னுல காதிபனே, -தேவரீர்- என்ன செய்தீர், ஐயனே?
சின்னப் படுத்தவும் கன்னத்தடிக்கவும்
சென்னியின் முண்முடி தன்னை அழுத்தவும்

3. வாரால் அடிக்கப்பட்டுக் - குட்டுண்டு - வாதைப்பட்
டெண்ணம், அற்றீர்:
சீரா மனுடவ தாரா, சருவாதி
காரா, பரம குமாரா, ஓலோலமே!-

4. வாதை உமக்கெதினால்-உண்டாயிற்று? பாதகிபாவத்தினால்
வேதம் நிறைவுற, ஆதி பவம் அற,
நீதி தரும் ஏசு நாத சுவாமியே,-

5. குற்றமற்ற மீட்பர், பவக்கடன் முற்றும் அறத்தீர்ப்பர்:
கொற்ற வர்க்கும், கல்வி கற்றவர்க்கும் சுரர்
மற்ற வர்க்கும் அள வற்ற கிருபையே.-

63

பல்லவி

கொல்கதா போகிறாரே - குருசெடுத்துக்
கொல்கதா போகிறாரே - நம் நேசமீட்பர்

அனுபல்லவி

பொல்லார் சொல்லுமவதூ றெல்லாம் பொறுத்தவராய்

சரணங்கள்

1. அங்கமெல்லாம் புண்ணாக அடிகள் பட்டாரே நோக
பங்கமில்லாத சீலன் பாவிகள் அனுகூலன்-

2. ரத்தம் தேகத்தில் ஓட மெத்தவும் முகம் வாடப்
பித்த யூதர்கள் சேர்ந்து கத்திக் துரத்தச் சோர்ந்து-

3. வள்ளலை மெய்வருத்தக் கள்ளனைப் போல் நடத்த
எள்ளளவும் பேசமால் மெள்ள மெள்ள நடந்து-

4. பெற்ற மனங்கலங்க உற்றாருள்ளம் குலுங்க
மற்ற மாதருமேங்கி மார்படித்துப் புலம்ப

5. பாவ வினையைப் போக்கச் சாபமனைத்தும் நீக்கத்
தேவ கோபத்தை முற்றும் தாமே சுமந்து தீர்க்க

64

பல்லவி

எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர்?

சரணங்கள்

1. எங்கே சுமந்து போகிறீர் இந்தக் கானலில் உம
தங்கம் முழுதும் நோக, ஐயா, என் ஏசுநாதா?

2. தோளில் பாரம் அழுந்தத் தூக்கப் பெலம் இல்லாமல்
தாளுந் தத்தளிக்கவே, தாப சோபம் உற, நீர்.-

3. வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாகப்,
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர

4. தாயார் அழுதுவரச், சார்ந்தவர் பின்தொடர
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர.

5. வல்ல பேயைக் கொல்லவும் மரணந்தனை வெல்லவும்
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும்:

6. வண்டக் கள்ளர் நடுவில் மரத்தில் தொங்குவதற்கோ?
சண்டாளர்களைத்தூக்கும் தலையோட்டு மேட்டுக்கோ?

7. மாசணுகாத சத்ய வாசகனே, உமது
தாசர்களைக்காக்கவும் தாங்காச் சுமை எடுத்து,

65

பல்லவி

பாவம் போக்கும் ஜீவநதியைப்
பாராய்? வந்து பாராய், - பாவி!

அனுபல்லவி

தீவினை தீர்க்கும் தேவமறியின்
திருரத்த மிந்த ஆறாம், - பாவி! பாவம்

சரணங்கள்

1. கல்வாரி மலைச் சிகர மீதுற்றுக்
கண்கள் ஐந்து திறந்து, - அதோ!
மல்கிச் சிலுவை யடியில் விழுந்து
வழிந் தோடுது பாராய், பாவி! பாவம்

2. பாவச் சுமையால் நொந்து சோர்ந்து
பதறி விழுந் தலறி நிதம்
கூவியழுத அனந்தம் பேரிதில்
குளித்தே யுளங் களித்தார், - பாவி! பாவம்

3. பக்தருளத்தி விடை விடாமல்
பாய்ந்து வளமீந்து - அதை
நித்தமும் பரிசுத்த குணத்தில்
நிலை நாட்டுது பாராய், - பாவி-! பாவம்

4. முன்பின் ஓன்றையும் யோசியாமல்
முழுகாயோ நீ பாவி!- இந்த
அன்பின் நதியில் விசுவாசம் வைத்தால்
அதுவே போதும் பாவி, ஆ!ஆ! - பாவம்

5. நித்தியந்தனில் கலந்துறையுஞ் செந்
நீரார் நதியிதிலே - தங்கள்
வஸ்திரந் தோய்த்த சுத்தர் சபையில்
வாழ்ந்து கீதம் பாடாய் - பாவி! பாவம்

66

1. இளைப்புண்டோ சொல்லு, தவிப்புண்டோ சொல்லு
எவ்வித கஷ்டமுண்டோ?
என்னிடம் வாருங்கள் என்று அழைப்பது
எல்லாருக்கும் உண்டே

2. எனது வழி காட்டியாயிருக்க
என்ன அடையாளம்?
இருகரம் கால்கள் விலாதனிலும்
எத்தனையோ காயம்

3. அரசனாகில் அவர் அணிந்தது
அழகிய மூடியோ?
அது நிஜந்தான் ஓர் முட்கிரிடமல்லோ
அவர் அணிந்திருந்தார்

4. அவரைக் கண்டு அடி தொடர்ந்தால்
ஆதாயம் என்னவுண்டு?
அநேக சஞ்சலம் அநேக கஷ்டங்கள்
அங்கலாய்ப்பு கண்ணீரே

5. இறுதிவரையில் நெருங்கிச் சென்றிடில்
என்ன நன்மை கிடைக்கும்?
ஏங்கலும் தவிப்பும் கண்ணீரும் எல்லாம்
ஏகிடும் நம்மை விட்டு

6. ஏற்றுக் கொள்ளும் என்று கேட்டால்
மாட்டேன் என்பாரோ?
இப்புவி வானம் எல்லாம் ஒழியினும்
ஏற்கேன் என்றாரோ?

7. அண்டி அடங்கி சுவதிப்பட்டிடில்
ஆசீர் வதிப்பாரோ?
அப்போஸ்தலர் பக்தர் இரத்தச் சாட்சி தீர்க்கர்
ஆம் என்கிறார்.

67

பல்லவி

குருசினில் தொங்கியே குருதியும் வடியக்
கொல்கதா மலைதனிலே - நம்

குருவேசு சுவாமி கொடுந் துயர், பாவி
கொள்ளாய்க் கண் கொண்டு.

சரணங்கள்

1. சிரசினில் முண்முடி உறுத்திட, அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ! தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத்திரள் சூழ.

2. பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன் போல் தொங்க யூத
பாதகர்கள் பரிகாசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை,-

3. சந்திர சூரிய, சகல வான் சேனைகள்
சகியாமல் நானுதையோ! தேவ
சுந்தர மைந்தனுயிர் விடுகாட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ?

4 ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே - அவர்
தீட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூற்றோடுது, பார்,-

5. எருசலேமாதே, மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ?- நின்
எருசலையதிபன் இள மணவாளன்
ஏற்றகோல மிதோ?-

68

பல்லவி

கருணையுள்ள தேவ சுதன் கனத்த சிலுவை பாரத்தாலே
எருசலேமின் மதில் கடந்து ஏகினார் கொல்கதா மலையில்

சரணங்கள்

1. கெத்செமனே தோட்டத்திலே கதறிஅழும் பேரோசையின்னும் எத்திசையும் தொனிக்கிறது, எங்கள் மனம் திகைக்கிறது

2. சீயோன் நகர் மாதர்தங்கள் சிரம் கவிழ்ந்து புலம்புந்தொனி தூயன் செவிக்கேறிடவே, தேற்று மொழி பகர்ந்தனரே.

3. சென்னிதனில் உதிரம் வடிய செறிமுண்முடி அணிந்தவராய் சின்னமுற்று ரட்சை செய்ய சிந்தை கொண்ட விந்தையென.

4. நடுச்சிலுவை மீதிலேறி, நவின்ற ஏழு நன் மொழிகள் கடுகுலகை தோல்வியுற்று, கதறியழச் செய்கின்றன.

5. மீட்பர் பட்ட காயந்தனில் பொங்கி வரும் திவ்ய இரத்தம் பாய்ந்து ஓடும் காட்சி காணப் பதைக்கிறதே எங்கள் உள்ளம்

69

உயிர்த்தெழுதல்

பல்லவி

ஆமென், அல்லேலூயா மகத்துவத் தம்பராபரா!
ஆமென், அல்லேலூயா, ஜெயம்! ஜெயம்! அனந்த
ஸ்தோத்திரா.

அனுபல்லவி

ஆம் ஆனாதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே!-

சரணங்கள்

1. வெற்றிகொண் டார்ப்பரித்துக் கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து - முறித்து:
பத்ராசனக் கிறிஸ்து - மரித்து
பாடுபட்டுத்தரித்து - முடித்தார்-

2. வேதம் நிறைவேற்றி, - மெய் தோற்றி,
மீட்டுக் கரையேற்றிப், - பொய் மாற்றிப்
பாவிகளைத் தேற்றிக், - கொண்டாற்றிப்
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார்,-

3. சாவின் கூர் ஒடிந்து மடிந்து
தடுப்பு சுவர் இடிந்து - விழுந்து
ஜீவனே விடிந்து - தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது.-

4. தேவ கோபந் தீர்ந்து, - அலகையின்
தீமை எலாஞ் சோர்ந்து, முடிந்தது
ஆவலுடன் சேர்ந்து, - பணிந்து கொண்
டாடும், களி கூர்ந்து மகிழ்ந்து,-

70

பல்லவி

யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார், நரகை ஜெயித்தெழுந்தார்.

சரணங்கள்

1. வேதாளக்கணங்கள் ஓடிடவே
ஓடிடவே உருகி வாடிடவே.-

2. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பரனைத் துதித்திடவே.-

3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன.-

4. எழுந்தார் என்றதொனி யெங்கும் கேட்குதே:
எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே.-

5. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்,
அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார்,-

6. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை இனி மரிப்பதில்லை.-

7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்
பாதம் பணிவோம் பதத்தைச் சிரமணிவோம்.

71

பல்லவி

எழுந்தாரிறைவன் - ஜெயமே ஜெயமெனவே
எழுந்தாரிறைவன்.

சரணங்கள்

1. நாவலர் ஜெயிக்கவி சாற்ற - ஏழைப்
பாவிகளைக் கரையேற்ற - இவர்
தேவ சேயனெனப் போற்ற

2. செத்தவர் மீண்டுமே பிழைக்க - உயிர்
நித்திய ஜீவனை அளிக்கத் - தேவ
பக்தர் யாவரும் களிக்க

3. கருதிய காரியம் வாய்க்கத் - தேவ
சுருதி மொழிகளெல்லாம் காக்க - நம்
இரு திறத்தாரையும் சேர்க்க -

4. சாவின் பயங்கரத்தை ஒழிக்கச் - கெட்ட
ஆவியின் வல்லமையை அழிக்க - இப்
பூவின் மீதுசபை செழிக்க -

5. ஏதுந் தீவினை செய்யாத் தூயன் - எப்
போதுமே நன்மைபுரி நேயன் - தப்
பாது காத்திடும் நல்லாயன்-

பல்லவி

கீதம் கீதம் ஜெய ஜெய கீதம்
கைக்கொட்டிப் பாடிடுவோம்

அனுபல்லவி

இயேசு ராஜன் உயிர்த்தெழுந்தார் - அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம் - ஆ, ஆ, கீதம்

சரணங்கள்

1. பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார்- அங்கு
போட்ட முத்திரை காவல் நிற்குமோ
தேவபுத்திரர் சந்நிதிமுன் - ஆ, ஆ, கீதம்

2. வேண்டாம் வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுங்கள் தாம்
கூறின மாமறை விட்டனர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு - ஆ, ஆ, கீதம்

3. அன்னா காய்பா ஆரியர் சங்கம்
அதிரடி கொள்ளுகின்றார் - இன்னா
பூதகணங்கள் இடிஒலி கண்டு
பயந்து நடுங்குகின்றார் - ஆ, ஆ, கீதம்

4. வாசல் நிலைகளை உயர்த்தி நடவுங்கள்
வருகிறார் ஜெயவீரன் - உங்கள்
மேள வாத்தியம் கைமணி பூரிகை
எடுத்து முழங்கிடுங்கள் - ஆ, ஆ, கீதம்

73

இரண்டாம் வருகை

பல்லவி

மேகமீது தூதரோடிதோ, இதோ
மேசியா கிறிஸ்தேசையா எனதாசை நேசையா
வாரார் வாரார், மகிழ் கெம்பீரமாய்.

சரணங்கள்

1. மேகத்தோடு போனவரிவர், இவர்
திரும்பவும் பதினாயிரம் பரிசுத்தர் சூழ்ந்திட
சீக்கிரம், சீக்கிரம், ஜெகத்தை நோக்கியே.

2. ஆரவாரம் கேட்குதே, அதோ, அதோ ஆட்டுக்
குட்டியின் பாட்டோ டெக்காளம் அதிர்ந்தொலிக்குதே
அல்லேலூயா அருமை ரட்சகா.

3. ஒலிவமலை விட்டேகினார், அப்போ, அப்போ,
உருவத்தோடிங்கு திரும்புவாரதை உற்று நோக்குவோம்
ஓடிப்பாடி உவந்து போற்றுவோம்.

4. யேசுராஜன் புறப்பட்டார், ஜெயா, ஜெயா
ஜெகமலை கடலுள நல்லோர் உயிர்த்தெதிர்சென்றேகிறார்
சீக்ரம், சீக்ரம், ஜெகத்தை நோக்கியே

5. மனுவேல் ராஜன் புறப்பட்டார் வொரே, வொரே,
மலை நடுங்கிட புவியதிர்ந்திடக் கடல் கலங்கிட
வானோர், பூவோர் வணங்கி நிற்கிறார்.

74

1. சாலேமின் ராஜா, சங்கையின் ராஜா, ஸ்வாமி, வாருமேன்
ஸ்வாமி, வாருமேன்: - இந்தத்
பார்தலமீதினில் ராச்சியஞ் செய்திட ஜல்தி வாருமேன்-

லோகமதனில் தூதசேனையோ தோழ
டேகிமா மகிழாகி வாழலாம்,

77

பரிசுத்த ஆவியானவர்

பல்லவி

ஐயையா, நான் ஒரு மா பாவி; - என்னை
ஆண்டு நடத்துவீர், தேவாவி.

சரணங்கள்

1. மெய் ஐயா, இது தருணம், ஐயா: - என்தன்
மீதிலிரங்கச் சமயம், ஐயா
ஐயையா, இப்போ தென்மேல் இரங்கி - வெகு
அவசியம் வரவேணும், தேவாவி.-

2. எனதிருதயம் பாழ்நிலமாம் - ஏழை
என்னைத் திருத்தி நீர் அன்பாகத்
தினமும் வந்து வழிநடத்தும், - ஞான
தீபமே, உன்னத தேவாவி,-

3. ஆகாத லோகத்தின் வாழ்வை எல்லாம் - தினம்
அருவருத்து நான் தள்ளுதற்கு
வாகான சுத்த மனம் தருவீர், - நீர்
வல்லவராகிய தேவாவி -

4. பக்தியின் பாதை விலகாமல், - கெட்ட
பாவத்தில் ஆசைகள் வையாமல்
சத்திய வேதப்படி நடக்க, - என்னைத்
தாங்கி நடத்திடும் தேவாவி

5. அன்பு, பொறுமை, நற் சந்தோஷம்,- என்
ஆண்டவரின் மேல் விசுவாசம்
இன்பமிகு மெய்ச் சமாதானம்: - இவை
யாவும் தருவீரே, தேவாவி.-

6. இயேசு கிறிஸ்துவில் நான் சார்ந்து, - அவ
ரிடத்திலேயே நம்பிக்கை வைக்க
மாசில்லாத்துய்யனே, வந்துதவும்: - நீர்
வாராமல் தீராதே, தேவாவி.-

78

பல்லவி

வல்ல ஆவியே எங்கள் மீதிலே,
வந்திறங்கி வரம் தாரும் தேவ ஆவியே.

சரணங்கள்

1. பெந்தெகோஸ்தெனும் நாளில் வந்த ஆவியே
எந்தன் மேலே வந்திறங்கும் சுத்த ஆவியே.-

2. பாந்தமுடனே பரிசுத்த ஆவியே
சார்ந்தெங்களை யுத்தத்திற்கு உயிர்ப்பியுமேன்,-

3. சென்ற காலத்தில் ஜெயம் பெற்றிடச் செய்த
ஜெபத்தின் ஆவியை எங்களகத்தி லூற்றும்

4. அன்புடன் தாழ்மை சமாதானம் பொறுமை
இன்பமும் எங்களுக்குள்ளே பெருகிடவே.

79

சத்திய வேதம்

பல்லவி

வேத புத்தகமே, வேத புத்தகமே
வேத புத்தகமே, விலைபெற்ற செல்வம் நீயே.

சரணங்கள்

1. பேதைகளின் ஞானமே, பெரிய திரவியமே
பாதைக்கு நற்றீபமே, பாக்கியர் விரும்புந் தேனே

2. யேசுவின் திருரத்தம் எனக்குச் சொந்தம் என்றாயே
காசுபணமுமின்றிக் கடவுளருளுமீவே-

3. என்னை எனக்குக் காட்டி என் நிலைமையை மாற்றிப்
பொன்னுலகத்தைக் காட்டிப் போகும் வழி சொல்வாயே-

4. துன்பகால மாறுதல் உன்னாலுண்டு: சாகுதல்
இன்பமாகு மென்றாயே என்றும் நம்பின பேர்க்கே

5. அக்கினி கந்தகமும் அழிவில்லாப் புழுக்களும்
துக்கமும் பங்கென்றாயே துர்க்குண முள்ளவர்க்கே

80

பல்லவி

வானாதி தாள் காட்டும் - நல்ல
வாத்தி சுவிசேஷம்

அனுபல்லவி

கோன்ஆதி ஏசு கிறிஸ்து மொழிந்த தோர்
கோதில்லா நீதி நிறைந்த சுவிசேஷம்

சரணங்கள்

1. ஆதி ஒளி தோண, - நல்ல - அறிவு மிகக் காணச், சத்ய
நீதியின் வேர் ஊண - அதை - நீனிலத்தோர் பூண,
ஜாதிகளான சகல மனிதரும்
சத்ய மறை என்று துத்யம் புரியவும் -

2. அன்பு நிறைந்திடவும், - கெட்ட - ஆசை குறைந்திடவும் மோட்ச
இன்பம் சிறந்திடவும் - பாவ - இருள்கள் மறைந்திடவும்,
முன்பு நடந்த முரட்டாட்டத்தை விட்டு
முற்றிலும் நற்குண சுத்தம் பெருகவும்

81

மனிதர் எவர்க்கும் ஒரே சுவிசேஷம்
பரலோகம்தந்த ஒரே விசேஷம்

1. பாவ மன்னிப்பு தரும் சுவிசேஷம்
கடவுள் பலியாக வந்த விசேஷம்
இயேசுவே அந்த நற்சுவிசேஷம்
ஏற்றுக்கொள் உனக்கு உகந்த விசேஷம்.

2. சுத்த இதயம் தரும் சுவிசேஷம்
கடவுள் தொடர்பு வழங்கும் விசேஷம்
சுவைக்கச் சுவைக்க நற் சுவிசேஷம்
ஏற்றுக்கொள் உனக்கு உகந்த விசேஷம்.

3. பரலோக பாக்கியம் தரும் சுவிசேஷம்
மரண மங்களம் என்ற விசேஷம்
தருணம் இதுவே நற் சுவிசேஷம்
ஏற்றுக்கொள் உனக்கு உகந்த விசேஷம்.

82

பல்லவி

குணப்படு, பாவி: - தேவ
கோபம் வரும் மேவி - இப்போ

அனுபல்லவி

கணப்பொழுதினில் காயம் மறைந்துபோம்:
காலமிருக்கையில் சீலமதாக நீ-

சரணங்கள்

1. வேதத்தில் உன்தனைப் பார்; அந்த
வேத விதிப்படி நேர்
நீதியைச் செய்தவனார்? - தூய
நின்மலன் வாக்கதோ கூர்;

தீதுறும் பாவியின் தீமையறிந்துகொள்;
நாதன் கிறிஸ்து இப்போதே உரைக்கிறார். -

2. துக்கமடையாயோ? பாவி
துயரமாகாயோ?
மிக்க புலம்பாயோ? - மனம்
மெலிந்துருகாயோ?
இக்கணம் பாவக் கசப்பை யுணராயோ?
தக்க அருமறைப் பக்கந் தொடராயோ?

3. தாவீ தரசனைப்போல், - தன்னைத்
தாழ்த்தும் மனாசேயைப்போல்,
பாவி மனுஷியைப்போல், - மனம்
பதைத்த பேதுருபோல்
தேவனுக்கேறாத தீமைசெய்தேனென்று
கூவிப் புலம்பு நல் ஆவியின் சொற்படி. -

4. உன்னை நீ நம்பாதே:- இவ்
வுலகையும் நம்பாதே;
பொன்னை நீ நம்பாதே: - எப்
பொருளையும் நம்பாதே:
தன்னைப் பலியிட்டுத் தாரணி மீட்டவர்
நின்னையும் ரட்சிப்பார், அன்னவரைப்பற்று: -

83

பல்லவி

பாவி! பரம சுதன் தாவி உன்னைத் தயவாய்க்
கூவி அழைக்கிறார் நீ வாராயோ? ஓகோ.

அனுபல்லவி

பூவின் பாவப் பாரத்தை மேவிச் சுமந்து தீர்த்த
தேவாட்க்குட்டி இவர் பார்! பார்! பார்! ஓகோ

சரணங்கள்

1. ஜென்மப் பாவத்தினோடு கன்மப் பாவமுமுன்னைச்
சின்னப்படுத்தினதைப் பார்! பார்! பார்!-உன்னில்
நன்மையாது மில்லாத துண்மை யறிந்துணர்ந்து
நல்மனதோ டேசுவைச்சேர்! சேர்! சேர்!-ஓகோ-

2. சிற்றொளி வீசும் தீபம் சுற்றிப் பறந்து நிற்கும்
சிற்றுயிர் புட்கள்தனைப் போலவே-உனைச்
சுற்றி உலகழிக்கும் சிற்றின்பமாகச் சுகம்
தோற்றி பாவி நீ கெட்டாய் சாலவே,-ஓகோ-

3. எத்தனை தான தர்மம் நித்தம் பூசை பலிகள்
அத்தனையாலும் பாவம் தீராதே - பரி
சுத்தன் ஏசுவின் திரு ரத்தத்தினாலே எமைச்
சுத்திகரிக்கும் நீ சோராதே,-ஓகோ-

4. தந்தை பிதா தனது சொந்தக் குமாரனையே
தந்து உலகில் அன்பு கூர்ந்தாரே - நீயும்
சொந்தச் சேயனாவே உந்தன் விசுவாசத்தால்
சொந்தமுண்டாமெனப் பகர்ந்தாரே,-ஓகோ-

5. தேடிய பாவ மன்னிப்போடு மெய்ப்பரிசுத்தம்
நீடிய ஜீவனும் உன் பங்காமே - இன்பம்
நாடி ஜீவகிரீடம் சூடிப் பராபரனைப்
பாடி மகிழ்வ துனக்கழகாமே,-ஓகோ-

84

பல்லவி

வா, பாவீ! மலைத்து நில்லாதே, வா

சரணங்கள்

1. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென்
றெண்ணித் திகையாதே

உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே
உள்ளபடி வாவேன்,-

2. உந்தனுக்காகவே நானேயடி பட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்
சிந்திய என்திரு ரத்தத்தால் உன் பாவந்
தீர்த்து விட்டேன், பாவி, வா,-

3. கொடிய பாவத்தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ?
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்,
ஒன்றுக்கும் அஞ்சாதே, வா-

4. விலக யாதொரு கதியில்லாதவன்
உலகை நம்பலாமோ?
சிலுவை பாவிகளடைக்கலமல்லோ
சீக்கிரம் ஓடி வாவேன்.-

5. என்னிடத்தில் வரும் பாவிகளை ஒரு
பொழுதுந் தள்ளேனே;
மன்னிய மேலோக வாழ்வை யருள்வேனே,
வாராயோ, பாவி?

85

மனந்திரும்புதலும் பாவ அறிக்கையும்

பல்லவி

வேறு ஜென்மம் வேணும் - மனம்
மாறுதலாகிய உள்ள சுத்தி என்னும்

சரணங்கள்

1. கூறு பரிசுத்தர் மாறிலா தேவனின்
தேறுதலான விண்பேறு பெற இங்கே -

2. பாவச்சுபாவமும் ஜீவியமும் மாறித்
தேவனின் சாயலை மேவுவதாகிய -

3. மானிடரின் அபிமானத்தினாலல்ல
வானவரின் கிருபா தானமாய் வரும் -

4. ஒன்றான ரட்சகர் வென்றியை நம்பி
மன்றாடுவோருக்கு ஒன்றுவதாகிய -

5. மைந்தர் கெடாது உகந்து ஈடேறவே
சொந்த மகன்தனைத் தந்த பிதா அருள் -

6. மண்ணினில் பக்தராய் நண்ணி நடக்கவும்
விண்ணினில் சுத்தராய்த் தண்ணளி கொள்ளவும் -

86

பல்லவி

இந்நேரம் வந்தென்னைச் சுத்தம் செய்யும்
சுத்தம் செய்யும் - தேவா சுத்தம் செய்யும்

சரணங்கள்

1. பாவத் துக்கமெல்லாம் நீங்கிடவே,
நீங்கிடவே - சுவாமி - நீங்கிடவே -

2. உள் வினை யாவையும் போக்கிடவே,
போக்கிடவே - சுவாமி - போக்கிடவே -

3. உம் வாக்கை நம்பி நான் இப்போ வாறேன்,
இப்போ வாறேன் - சுவாமி - இப்போ வாறேன -

4. கல்வாரி ஜீவாறு ஓடுதிப்போ,
ஓடுதிப்போ - எனக்காய் - ஓடுதிப்போ -

5. இயேசுவின் ரத்தத்தால் சுத்தம் செய்யும்,
சுத்தம் செய்யும் - சுவாமி - சுத்தம் செய்யும் -

87

பல்லவி

உலகில் பவப் பாரத்தால் சோரும் - இளைப்
பூர்ந்த நரரே, வந்து சேரும்.

அனுபல்லவி

அலைசடிப் பட்டவரே, வாரும் - என்றன்
ஆறுதலாய் அவற்றைத் தீரும்: - பொல்லா

சரணங்கள்

1. பாவி என்றெண்ணித் திகைப் போரும் - என்றன்
பாவம் தீராதென் றிருப்போரும்
ஆவலாய் ஓடி வந்து சேரும்; - நான்
ஆகாமியர்க்காக வந்த தோறும், - பொல்லா

2. இளமை என்றே எண்ணி நில்லாதே, - சாவும்
இளமை என்று சொல்லிச் செல்லாதே
வளமாய் வருவதைத் தள்ளாதே: - கெட்ட
வழக்க மதையே கைக்கொள்ளாதே, - பொல்லா

3. வாலிபப் பிராய மீதில் நாளும் - இன்ப
வாழ்வு சுகிக்க வென்று மாளும்;
சீலரே, இன்றென் னுரை கேளும்; அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும், - பொல்லா

4. காலம் கடந்த கிழவோரே - வீணாய்க்
காலமே கழித்தே உழல்வோரே,
காலமே தேட மறந்தோரே, உங்கள்
கலவையைத் தீர்ப்பேன், அறிவீரே, - பொல்லா

88

பல்லவி

பரிசுத்தர் பரிசுத்தரே! ஏசையா, உம்மைப்
பாடுவேன் பாடுவேன் நானே.

அனுபல்லவி

கடைக் கண்ணால் பாரும் என்னைப்
படைத்த பராபரனே, - பரிசுத்தர்

சரணங்கள்

1. திசையறியாமல் தயங்கி, ஏசையா சுவாமி,
தெருக்களெல்லாம் அலைந்தேனான்,
மனங்கசந்தழுகையில் மாளிகை காட்டினாரே,-

2. பாவச் சுமைகள் சுமந்தேன், ஏசையா சுவாமி,
பாரிதிலே வெகு நாளாய்ப்
பாவி நான் வந்தேனென்றன் பாரம் குறைத்து விடும், -

3. கட்டுகளோடே வந்தேன் நான், ஏசையா சுவாமி,
திட்டிவாசல் திறவுமே
பட்ட துயர் நினைத்தால் எட்டினதற்புதமே,-

4. விரைவுடன் வழிநடக்க, ஏசையா சுவாமி,
உலகிடர் படை நடுவானேன்
எதிர்த்தாலினி விடுமோ ஏகன் கிருபை தந்தால்,-

5. தரிசிக்க வழி வேறில்லை, ஏசையா சுவாமி,
பரகதி தரும் குரு நீரே
விரைவுடன் வந்து என்னைச் சுகமிடம் சேர்த்தருளும்.-

89

பல்லவி

பாவியாகவே வாறேன்; பாவம் போக்கும்
பலியாம் என் ஏசுவே, வாறேன்,

சரணங்கள்

1. பாவக்கறை போமோ என் பாடாய்? உன் பாட்டாலன்றிப்
போவதில்லை! என்றே பொல்லாத பாவியே நான் -

2. நீ வா, உன்பாவம் என்னால் நீங்கும், என்று சொன்னீரே;
தேவா! உன் வாக்கை நம்பிச் சீர்கேடேன் நீசனும் நான் -

3. பேய்மருள் உலகுடல் பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு போரில் அயர்ச்சியாய் நான்

4. ஜீவ செல்வ ஞான சீல சுகங்கள் அற்றேன்,
தாவென்று வேண்டிய சாவில் சஞ்சரித்த நான் -

5. துன்பங்கள் நீக்கி உன்னைத் தூக்கி அணைப்பேன், என்றீர்
இன்ப வாக்குத்தத்தத்தை இன்றைக்கே நம்பியே நான் -

90

பல்லவி

இரங்கும் இரங்கும் கருணைவாரி,
ஏசு ராஜனே - பவ - நாச - நேசனே,

சரணங்கள்

1. திறம்கொண்டாவி வரங்கொண்டுய்யச்
சிறுமை பார், ஐயா; ஏழை-வறுமை தீர், ஐயா.-

2. அடியன் பாவக் கடி விஷத்தால்
அயர்ந்துபோகின்றேன்;- மிகப் பயந்து சாகின்றேன்-

3. தீமை அன்றி வாய்மை செய்யத்
தெரிகிலேன், ஐயா, தெரிவை-புரிகலேன் - ஐயா,

4. பாவி ஏற்றும் கவி மன்றாட்டைப்
பரிந்து கேள், ஐயா; தயை-புரிந்து மீள், ஐயா,-

91

1. பாதகனாய் நானலைந்தேன், பாவி யென்றுணராதிருந்தேன்
தத்தளிக்கும் ஏழை வந்தேன்; சத்தியரே யாவுந் தந்தேன்.

2. உந்தன்பாடு கஸ்திபதால், வந்ததெந்தன்பாக்யமெல்லாம்
இம்மை செல்வம் அற்பப்புல்லாம், உம்மைப்பெற
விட்டேனெல்லாம்

3. கெத்செமனே தோட்டத்திலே, கஸ்திபட்ட என் அண்ணலே!
அந்த ஆவி உள்ளத்திலே வந்தால் வெல்வேன்யுத்தத்திலே

4. சிரசுக்கு முள்ளால் முடி, அரசின் கோல் நாணல் தடி,
நீர் குடிக்கக்கேட்டால் ஓடி; ஓர் பாதகன் தந்தான் காடி,

5. மன்னா உந்தன் விண்ணை விட்டு, மண்ணில் வந்து பாடுபட்டு
மரித்தடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தீர் என்னைவிட்டு

6. ஆவி ஆத்மா திரேகம்முழுதும், தாவிப் படைத்தேன் உமக்கே
ஜீவித்தாலும் மரித்தாலும், தேவனே உமக்கே சொந்தம்

7. பச்சமரத்துக்கு அந்த பாடெல்லாம் வந்ததென்றால்
பட்ட மரம் என்ன செய்வேன், பட்சம் வையும் ஏசுதேவா

8. பரிசுத்த ஆவிபெறத் தாகமுடன் காத்திருக்கிறேன்,
திரி ஏகர் முத்ரைதந்து தேற்றிடும் ஏசுதேவா.

92

பல்லவி

விண்விட்டு வந்த எங்கள் இயேசு விண்ணாதிபா!

அனுபல்லவி

கண்கெட்ட மானிடர்க்காய்க் கருணைபரி பாலித்தாய்!

சரணங்கள்

1. நான் குருடன் செவிடனூமை நாடி வந்தேன் கேளையா!
ஏனென்று கேட் டிரங்குதற்கு ஏற்ற இது நாளையா!

2. முடமடக்குச் சூம்பினகை மோடனெனைப் பாரையா!
திடங்கொள் மகனேயென்றசொல் தெரியஉரைகூறையா!

3. வானத்தைப்பாராதவண்ணம் வளைந்த கூன னானையா!
ஆயென் பெல வீனமற அழகுகைவைத் தாளையா!

4. அஞ்ஞானப் பேய்பிடித்து அலைக்கழிக்குதே ஐயா!
பஞ்சமாச்சோ இவனை விட்டுப்போவென்ற சொல் ஓ ஐயா!

5. பாவியான பெண்மணிக்குப் பத்துப்பங்கு நானையா!
தாவித்தாவிப் பாதமுத்தந்திட வந்தேனையா!

6. வலதுகள்ள னுக்குகுரு வானகள்ள னானையா!
புலைக்கள்ள னென்று என்னைப்புறம்பேதள்ளாதையா!

7 பாவப்பட்டுக் கையிலே பலவருட மாகநான்!
சாவப்படுத்தி ருக்குந் தன்மைதவிர் தேவனே!

93

பல்லவி

ஐயையா, நான் பாவி, - என்னை ஆளும் தயாபரனே.

சரணங்கள்

1. பொய்யாம் உலக உல்லாசத்தினால் மனம் போனவழி
நடந்தேன், - ஏ
சையா, அபயம்! அபயம்! இரங்கும்; மே சையா,
என் தாதாவே

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள், எத்தனை தீதுகளோ
என தத்தனே? என் பிழை அத்தனையும்பொறுத்
தாண்டருளும், கோவே -

3. வஞ்சகமோ, கரவோ, கவடோ, மாய் மாலமோ, ரண்டகமோ,
- மனச்
சஞ்சலம் நீக்கி எனக்கருள் செய்யும், சமஸ்த நன்மைக்
கடலே,-

4. பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும், பொறாமையும்
ஆணவமும், - விட்
டுய்யும்படி அருள் செய்யும். அனாதி ஓர் ஏக திரித்துவனே,

5. உன்னை எல்லாத்திலும் பார்க்கச் சிநேகித் துனதடியார்
களையும் - நான்,
என்னைச் சிநேக்கிறாற் போல் சிநேகிக்க ஏவும், பராபரனே

பல்லவி

ஐயையா நான் வந்தேன்;- தேவ
ஆட்டுக்குட்டி வந்தேன்.

சரணங்கள்

1. தூயன் நீர் சோரி பாவி எனக்காய்ச் சிந்தித்
துஷ்டன் எனை அழைத்தீர், - தயை
செய்வோம் என்றே, இதை அல்லாது போக்கில்லை;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்:-

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன், என்று - நில்லேன்
தெள் உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்:
தேவாட்டுக்குட்டி, வந்தேன்:

3. எண்ணம், வெளியே போராட்டங்கள், உட்பயம்
எத்தனை எத்தனையோ! - இவை
திண்ணம் அகற்றி எளிஞனை ரட்சியும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்.

4. ஏற்றுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும் - மனம்
தேற்றிக் கொண்டேன் உந்தன் வாக்குத்தத்தங்களால்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்

5. மட்டற்ற உம் அன்பினாலே தடை எதும்
மாறி அகன்றதுவே; - இனி
திட்டமே உந்தன் உடமை யான் என்றென்றும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்:-

95

பிராயச்சித்தம்

பல்லவி

மரித்தாரே கிறிஸ்தேசு
உனக்காகப் பாவி.

சரணங்கள்

1. திரித்துவத் துதித்தோர் தெய்வீக சேயே,
தீன தயாளத்வ மனுவேலே பாராய்;-
2. லோகத்தின் பாவத்தைத் தேகத்தில் சுமந்தே
லோலாயமாய்ச் சிலுவையிலே பாராய்;-
3. மகத்தான தண்டனை நிவிர்த்திப்பதற்கே
மாபாடுபட்டுத் தரித்ததே பாராய்;-
4. மன்னிப்புண்டாக்கவே மத்யஸ்தராக
மாவாதைக்குள்ளானார் தாமே நீ பாராய்;-
5. பாவியான உன்னைப் பாதுகாப்பாரே
பாவத்தை விட்டிவர் பாதத்தைத் தேடு;-

96

பல்லவி

ஆத்ம நாதன் திருவடியே - நமக்
காதாரம் சிலுவைக் கொடியே

அனுபல்லவி

தோத்திரம் புகழ் துதியே - சங்
கீர்த்தனம் பண் பதம் பாடியே -

சரணங்கள்

1. புத்தியுள்ள கன்னியரே - பரி
சுத்தராய் விளங்கினரே

நித்திரை மிகச் செய்தவரே - பின்
கத்திக் கத்திப் புலம்பினரே -

2. ஐங்காயத்தி லடைக்கலமே - நம்மை
ஆதரிப்பது அவர் கரமே
நங்கூரமில்லா மரக்கலமே - திசை
நான்கிலு மோடி அழிந்திடுமே -

3. ஏன் கலங்குகிறாய் நெஞ்சமே - கிறிஸ்
தேசு வானவர் தான் தஞ்சமே
மாநிலம் முழுவதும் வஞ்சமே - வீண்
மாயை யாவும் பிரபஞ்சமே -

4. ஏசுக்கிறிஸ்துவை விசுவாசி - எப்
போதுமே அவரை நேசி
வேத வசனம் தினம் வாசி - இது
வேண்டாமென்பவன் மாதோஷி -

97

இரட்சிப்பின் நிச்சயம்

பல்லவி

எப்போதுமே (3 தடவை) இன்பவாழ்வே
யேசையா என்னோடிருப்பதாலே

1. எப்பொருளும் குப்பை போன்றனவே - மாந்தர்
எல்லோரும் ஓர் நாளில் தூசிதானே,
என்னருமை நேச யேசு -
எனக்கெல்லாம் அவர் பின்னே - இனி ஏது குறை

2. மாதா பிதா உற்றார் மாண்டிட்டாலும் - பின்னும்
மற்றுள்ள இஷ்டர் மறந்திட்டாலும்
மன்னர் கிறஸ்தேசு மங்கா நேசர்
எனக் கென்ன குறை எனக்கேது பீடை.

3. காவற்காரர் யேசு கண்ணுறங்கார் - என்மேல்
ஆவல் மிகுந்தோர் அன்பு மிகுந்தோர்
பட்டயத்தார் பக்கத்தாயிரம் ஆயினும் -
பயந்திடேன் சற்றும் அயர்ந்திடேன்.

98

பல்லவி

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்ன குறைவுண்டு? நீ சொல், மனனே

சரணங்கள்

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுல குயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே, சுகபத்திர மருளும்;

2. பாபமோ, மரணமோ, நரகமோ, பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்;
சஞ்சலமினியேன்? நெஞ்சமே, மகிழாய்,-

3. ஆசிசெய்திடுவார், அருள்மிக வளிப்பார்
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்:
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்:
மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும்,-

4. கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கடைசிமட்டும் கைவிடாதிருப்பார்
பாவமன்னிப் பளிப்பார் பாக்கியம் கொடுப்பார்;
பரம பதவியினுள் என்தனை எடுப்பார்,-

99

பரிசுத்தமாகுதல்

பல்லவி

தீய மனதை மாற்ற வாரும் தூய ஆவியே, - கண
நேய மேவியே.

சரணங்கள்

1. தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே;-
திருக்கு நெஞ்சமே; மருள் தீர்க்கும் தஞ்சமே -

2. பரத்தை நோக்க மனம் அற்றேனே, பதடிதான், ஐயா;-
பதடி தான் ஐயா; ஒரு பாவி நான், ஐயா,-

3. புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே -
புதுப்பித்தாக்கவே, - அதைப் புகழ்ந்து காக்கவே,-

4. ஏக்கத்தோடென் மீட்பைத்தேடி, இரந்து கெஞ்சவே,-
இரந்து கெஞ்சவே, - தினம் இதயம் அஞ்சவே,-

5. கிறிஸ்து மீது நாட்டம் கொண்டு கீதம் பாடவே,-
கீதம் பாடவே, - அவர் கிருபை தேடவே.-

6. தேவ வசனப் பாலின்மீது தேட்டம் உன்னவே,-
தேட்டம் உன்னவே, - மிக தெளிவு துன்னவே.-

7. ஜெபத்தின்தாகம் அகத்தில் ஊறி ஜெபித்துப் போற்றவே,-
ஜெபித்துப் போற்றவே, - மிகச் சிறப்பாய் ஏற்றவே.-

100

உயிர் மீட்சி

பல்லவி

தாகத்தைத் தீருமையா - அபி
ஷேகத்தைத் தாருமையா - எங்கள்

சரணங்கள்

1. ஆகமமுன்னே அறிவித்த வண்ணம்
ஆவியாலடியாரை நிறைத்தீரல்லோ
ஏக கர்த்தாவே ஏழைகள் மீதே
இறங்கிடு மிப்போதே - எம்மில்

2. வேதத்தின் பொருளை விளக்கிட வல்ல
போதகராமாவி யானவரே!
பாதத்தில் வீழ்ந்து பணிந்திடுவோமே
பரிசுத்த மாவோமே - நாங்கள்

3. சத்துருவாலே சகிக்க வொண்ணாத
எத்தனையோ இடர் வந்ததையா!
அத்தனே உமது அருட் பெலத்தாலே
நித்தமும் ஜெயங்கொள்வோம் - நாங்கள்

4. சுத்த ஜீவியமும் தூயஊழியமும்
கர்த்தனுக்கேற்ற நற்காணிக்கையாம்
சித்தங் கொண்டெமைநீர் பாவிப்பதாலே
மெத்தவும் பலன் காண்போம் - நாங்கள்

101

பல்லவி

ஆவியை மழைபோலே யூற்றும்; - பல
சாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்

அனுபல்லவி

பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே:
பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும்,-

சரணங்கள்

1. அன்பினால் ஜீவனை விட்டீர்:- ஆவி
அருள் மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்;

இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராளமான ஜனங்களைச் சேரும்.-

2. சிதறுண்டலைகிற ஆட்டைப் - பின்னும்
தேடிப் பிடித்து நீர் தூக்கிச் சுமந்து,
பதறாதே நான் தான் உன் பர்த்தாவாம் யேசு
பாக்கியரென்னும் நல் வாக்கையருளும்.-

3. சாத்தானின் கோஷ்டம் அதிகம் - அவன்
தந்திரக் குணங்களின் சேஷ்டை அதிகம்;
கர்த்தன் கிறிஸ்துவின் காயத்தினாலே
கலகக் குணங்களை ஒழிந்திடச் செய்யும்.-

4. காத்திருந்த பல பேரும்மனங்
கடினங்கொள்ளா முன்னே உம் பாதம் சேரும்;
தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து
சுத்தலோகம் வரத் தூயாவி யூற்றும்.-

5. ஸ்தோத்திரக் கீதங்கள் பாடி - எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாத்திரராக அநேகரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள்மாரிப் யூற்றும்

102

விசுவாசம்

பல்லவி

கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே; - நல்ல
கேடகத்தைப் பிடி நீ; விசுவாசக்
கேடகத்தைப் பிடி நீ;

அனுபல்லவி

வஞ்சனையாகவே பேய் எதிர்த்துன்றனை
வன்னிக் கணைதொடுத் தெய்கின்ற வேளையில்,
நெஞ்சில் படாமல் தடுக்க அது நல்ல
நிச்சயமான பரிசை அறிந்து நீ -

சரணங்கள்

1. பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்கப்
பத்தியில் தெளிக்கவும், - நித்ய
ஜீவனைப் பிடிக்க லோகத்தை ஜெயிக்கத்,
திறமை அளிக்கவும்,
சாவே, உன் கூர் எங்கே? பாதாளமே உன்
ஜயம் எங்கே? என்று நீர் கூவிக்களிக்கவும்,
தேவன் உகந்துனைத் தான் அங்கீகரிக்கச்
செய்யுமே அது திவ்ய நல் ஆயுதம்;-

2. பண்டையர் அந்தப் பரிசையினால் அல்லோ,
கண்டடைந்தார் பேறு? - நல்ல
தொண்டன் ஆபேல் முதலான வைதீகரைத்
தொகுத்து வெவ்வேறு
விண்டுரைக்கில் பெருகும்; தீ அணைத்ததும்
வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்
கண்டிதமாய் வெற்றி கொண்டது மாம்பல
காரியங்களையும் பார்: இது மா ஜெயம்.-

3. ஊற்றமுடன் இப்பரிசைப் பிடித்திட
உன் செயல் மா பேதம்; - அதின்
தோற்றமும் முடிவும் ஏசுபரன் செயல்,
துணை அவர் பாதம்;
ஏற்றர வணைக்கவே பணிவாக
இரந்து மன்றாடி; அவர் மூலமாகவே
ஆற்றல் செய் தேற்றரவாளி பரிசுத்த
ஆவி உதவியை மேவி, அடைந்து நீ.-

103

பல்லவி

நாதா உனை நம்பினேனே - என்
நாதா உனை நம்பினேனே - யேசு

சரணங்கள்

1. தீதான வுலகத்தில் தீயவுருவெடுத்த
பாதகனெனைத்தேடிப் பண்பாய் ரட்சிக்கவந்த
வேதா! உனை விடுவேனோ? -

2. எத்தனையோ நரர்களித்தல மீதிருக்கப்
பித்தனெனைப் பிடித்துப் புத்திரனாக்கினதுன்
சுத்தக் கிருபை யல்லவோ? -

3. ஏவை மகன் அடியான் ஈனன் மாக கொடிய
பாவிக்காய்ப் பாவமாகிப் பாடு சகித்த வுன்றன்
சாவை மறக்கக்கூடுமோ?

4. உச்சிதமான ஈவும் உன்னத வரங்களும்
ரட்சையும் நிச்சயமும் பட்சமாய் நீ யளிக்கப்
பிச்சையாய்ப் பெற்ற பாவி நான் -

5. நீயே என் சத்தியமும் நீயே ஜீவனுமானாய்
நீயே மோட்சமதற்கு நீயே வழியுமானாய்
ஆயே! எல்லாமும் நீயானாய்-

6. உன்னை ருசித்தவர்க்கு உண்டோ குறை எதுவும்
உள்ளமகிழ்ந்து என்றும் உன்றனையே துதிப்பார்
என்ன! ஆனந்தம் இது காண்!-

104

பல்லவி

நம்பிவந்தேன், மேசையா, நான் நம்பிவந்தேனே: திவ்ய
சரணம்! சரணம்! சரணமையா, நான் நம்பிவந்தேனே

சரணங்கள்

1. தம்பிரான் ஒருவனே தம்பமே தருவனே;- வரு
தாவீது குமரகுரு பரமனுவேலே, நம்பி வந்தேனே - நான்

2. நின்பாத தரிசனம் அன்பான கரிசனம்; - நித
நிதசரி தொழுவதிதம் எனவும் உறுதியில் நம்பிவந்தேனே - நான்

3. நாதனே கிருபைகூர், வேதனே, சிறுமைதீர்;- அதி
நலம் மிகு உனதிரு திருஅடி அருளே, நம்பிவந்தேனே - நான்

4. பாவியில் பாவியே, கோவியில் கோவியே; கன
பரிவுடன் அருள்புரி, அகல விடாதே; நம்பிவந்தேனே - நான்

5. ஆதி ஓலோலமே, பாதுகா காலமே; உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த, நம்பிவந்தேனே - நான்

105

தற்பிரதிஷ்டை

பல்லவி

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்,
ஏற்றுக் கொள்ளும், ஏசுவே.

அனுபல்லவி

அன்னை தந்தை யுந்தன் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்த மல்லாது, இப்போது,-

சரணங்கள்

1. அந்தகாரத்தி னின்றும் பாவப் பேய்
அடிமைத்தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன்,-

2. ஆத்ம சரீரமதை யுமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்;
பாத்ரமதா யதைப் பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன்; கருணைசெய், தேவா

3. நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டே னுமக்கு:

ஜோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்தன் சரீரத்தை,-

106

பல்லவி

மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ? மோட்ச
வாழ்வைத் தருவேன், இது பாராயோ?

சரணங்கள்

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே,- பாவ
அழுக்கை நீக்கி யருள் கொடுப்பேனே,-

2. உன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே,- அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே,-

3. பாவம் அனைத்தும் விட்டோடாயோ? - நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ?

4. உலக வாழ்வினை விட் டகல்வாயே,- மகா
உவப்பாய்க் கதி ஈவேன்: மகிழ்வாயே.-

5. உன்தன் ஆத்துமத்தை நீ படைப்பாயே,- அதில்
ஊக்கமாய் வசிக்க இடங் கொடுப்பாயே.

107

பல்லவி

நீயுனக்குச் சொந்தமல்லவே, மீட்கப்பட்ட பாவி,
நீயுனக்குச் சொந்தமல்லவே.

அனுபல்லவி

நீயுனக்குச் சொந்தமல்லவே
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்.-

சரணங்கள்

1. சிலுவை மரத்தில்தொங்கி மரித்தாரே: திருரத்தம் ரத்தம்
திரு விலாவில் வடியுது பாரே:
மிகுந்த பரிசத்தால் கொண்டாரே.
மோட்ச மகிமை உனக்கீவாரே-

2. இந்த நன்றியை மறந்து போனாயோ? யேசுவை விட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுனதிதயங் காயமும்,
சுவாமி கிறிஸ்தினுடையதல்லவோ?-

3. பழைய பாவத்தாசை வருகுதோ? பசாசின் மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அற்ப நிமிஷத்தாசை காட்டியே,
அக்கினிக்கடல் தள்ளுவானேன்?-

4. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயோ; உலகைவிட்டு
மரிக்கினும் அவர்க்கே மரிப்பாயே;
மரித்து உயிர்த்த யேசுநாதரின்
மலரடி எந்நாளும் நிலைப்பாய்.-

108

பல்லவி

தந்தேன் என்னை யேசுவே
இந்த நேரமே உமக்கே.

அனுபல்லவி

உந்தனுக்கு ஊழியஞ்செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும்!-

சரணங்கள்

1. ஜீவகாலம் முழுதும்
தேவபணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும்! உந்தன் கரத்தினில் வைத்து-

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய்ச் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா, வெல்லுவேன்-

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
யேசுவே, அங்கே இதோ! போகிறேன்.-

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்டதிக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும்!-

5. ஒன்றுமில்லை நான் ஐயா!
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்!
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்று அடியேனை நிரப்பும்!-

109

பல்லவி

விந்தைக் கிறிஸ்தேசு ராசா!
உந்தன் சிலுவை என் மேன்னை.

அனுபல்லவி

சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்,-

சரணங்கள்

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி,
செல்வாக்குகள் மிக விருப்பினும்,
குருசை நோக்கிப் பார்க்க எனக்,
குரிய பெருமை யாவும் அற்பமே.-

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம், வற்றா ஜீவ நதியாம்;
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்து மேன்மையாகினேன்.-

3. சென்னி, விலா, கை, கானின்று
சிந்துததோ! துயரோடன்பு;
மன்னா, இதைப்போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன்.-

4. இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன்.-

110

1. அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புத நாதா உம் கரத்தில்

அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

அனைத்தும் கிறிஸ்துவுக்கே - எந்தன்
அனைத்தும் அர்ப்பணமே
என் முழுத்தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

2. என் எண்ணம்போல் நான் அலைந்தேனே
என்னைத் தடுதிட்ட தாருமில்லை
உம் சிலுவை அன்பைச் சந்தித்தேன்
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில்

3. ஐம்புலன்கள் யாவும் அடங்கிட
ஐம்பெருங் காயங்கள் ஏற்ற நாதா
வான்புவிக் கிரகங்கள் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர்

4. என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய்
எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த ஈவு வரங்கள் யாவும்
உம் பணி சிறக்க முற்றும் தந்தேன்

111

பரிசுத்த நடக்கை

பல்லவி

ஏசுவைப் பார்த்து நட! என் நேசா!
ஏசுவைப் பார்த்து நட, கிறிஸ்தேசுவை.

சரணங்கள்

1. நமது பாவங்களுக்காக மரித்து
நாம் நடந்திட வழிகாட்டி முன்சென்ற.-

2. பாடுபடுகையில் பயமுறுத்தலையே
பயங்கர சாபங்கள் ஒன்றுஞ் சொல்லவில்லையே.-

3. தீமைக்குத் தீமையைச் செய்தாரோ? தமைச்
சிலுவையில் அறைந்தோர்க்காய் ஜெபித்தாரல்லோ?-

4. சண்டை கூக்குரல் செய்யாரே, தம்
சத்தத்தை வீதியில் காட்டாரே.-

5. நெரிந்த நாணலை முறியாரல்லோ? மங்கி
எரிந்ததிரியை அவியாரல்லோ?

6. உருக்க இரக்கங்கள் உள்ளாரே,
ஊமை, செவிடர், குருடரைத் தள்ளாரே,-

7. அகந்தை பெருமைகள் அவரிடமில்லை,
அன்பிலான் அவரை அறிவதுமில்லை,-

8. நன்மை செய்வதிலவர் ஓய்ந்ததுமில்லை,-
நாட்களை வீணில் கழித்ததுமில்லை,-

9. பரிசுத்த மார்க்கம் காட்டினரே,
பாவச் சோதனை யாவையும் வென்றனரே,

10. இந்த நல்வழியில் இடறுதல் ஏது?
ஏகிடலாம் வல பாரிசமீது,-

112

நல் நம்பிக்கை

பல்லவி

உனக்கொத்தாசை வரும் நல் உயர் பருவதம், இதோ!

அனுபல்லவி

தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவோனே,-

சரணங்கள்.

1. வானம் புவி திரையும் வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ?

2. காலைத் தள்ளாட வொட்டார். கரத்தைத் தளரவொட்டார்
மாலை யுறங்கமாட்டார்; மறதியாய்ப் போகமாட்டார்-

3. கர்த்தருன்னைக் காப்பவராம், கரமதில் சேர்ப்பவராம்;
நித்தியமு முந்தனுக்கு நிழலாயிருப்பவராம்.-

4. பகலில் வெயிலெனிலும் இரவில் நிலவெனிலும்
துயர் தருவதுமில்லை, துன்பஞ் செய்வதுமில்லை.-

5. தீங்கு தொடராதுன்னை, தீமை படராதுன்மேல்;
தாங்குவார் தூதர் கோடி, தாளிடறாதபடி.-

6. போக்கும் ஆசீர்வாதமாம், வரத்தும் ஆசீர்வாதமாம்;
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பிவிடுமே,-

7. துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்
இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே.-

113

பல்லவி

கண்களை ஏறெடுப்பேன் - மாமேரு நேராய் என்
கண்களை ஏறெடுப்பேன்.

அனுபல்லவி

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து
எண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும்.-

சரணங்கள்

1. காலைத் தள்ளாடவொட்டார் - உறங்காது காப்பவர்
காலைத் தள்ளாட வொட்டார்.
வேலையில்நின் றிஸ்ரவேலரைக் காப்பவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர்.-

2. பக்தர் நிழல் அவரே - என்னை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே
எக்கால நிலைமையில் எனைச் சேதப்படுத்தாது
அக்கோலம் கொண்டானை அக்காலம் புரியவே.-

3. எல்லாத் தீமைகட்கும் - எனனை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்.
பொல்லா உலகினில் போக்கு வரத்ததையும்
நல்லாத்து மாவையும் நாடோறும் காப்பவர்.-

114

பல்லவி

அன்பே பிரதானம் - சகோதர
அன்மே பிரதானம்

சரணங்கள்

1. பண்புறு ஞானம் - பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம் - இவைகளி லெல்லாம்

2. பலபல பாஷை - படித்தறிந்தாலும்
கலகல வென்னும் - கைம்மணியாமே-

3. என் பொருள் யாவும் - ஈந்தளித்தாலும்
அன்பிலதாமா - னாற்பயனில்லை-

4. துணிவுட னுடலைச் - சுடக்கொடுத்தாலும்
பணிய வன்பிலாற் - பயனதிலில்லை-

5. சாந்தமும் தயவும் - சகல சற்குணமும்
போந்த சத்தியமும் - பொறுமையுள்ள-

6. புகழிறு மாப்பு - பொழிவு பொறாமை
பகைய நியாயப்பாவமுஞ் செய்யா-

7. சினமடையாது - தீங்கு முன்னாது,
தினமழியாது - தீமை தராது-

8. சகலமுந் தாங்கும் - சகலமும் நம்பும்
மிகைபட வென்றும் - மேன்மை பெற்றோங்கும்.-

115

ஜெபம்

பல்லவி

ஜெபத்தின் ஆவியைத் தாருமே - திருச்சுதன் போல்
ஜெபம் செய்ய வரந் தாருமே - பரமதேவா
ஜெபத்தின் ஆவியைத் தாருமே.

அனுபல்லவி

சபைத்திரள் சன்மனசோர் - சகத்தில் பக்தியுள்ளதோர்
ஜெபித்து ஜெபித்துப் போற்றும் - திரித்வமகத்வ தேவா

சரணங்கள்

1. அன்பின் ஜெபம் செய்தறியேன்-சுயநலத்தை
அல்லாமல் ஜெபித் தறியேன்-அபயமெனத்

துன்பத்தில் ஜெபம் புரிவேன்-துயர் நீங்கியபின்
துதி செய்ய மறந்திடுவேன்
வம்பு பரிவினைகள்-வன்மம் பிறரைச் சாடல்
சம்ப்ர தாய ப்ரசங்க சாதுர்ய ஜெபம் செய்வேன்.-

2. பகிரங்க ஜெபம் பெருக்கம்-அந்தரங்கத்தில்
பண்ணும், ஜெபமோ சுருக்கம்-வந்திக்கும் வேளை
மிக்க சங் கட நெருக்கம்-பந்துத்வ ஜெபம்
இளைத்திடா தென்ன வுருக்கம்
இன்ப நித்திரை விட்டு-இரவெல்லாம் ஏக்கமுற்று
அன்பன் மலையிற் செய்த-அரிய ஜெப மறியேன்-

3. ஊரார் பாவத்துக் கழுதார்-பிறர் குறைகள்
ஒழிந்து போக ஜெபித்தார்-பாவக் கறையை
நேராயறிந்து அழுதார்-பரமனோடு
நெருங்கிப் பரிந்து ஜெபித்தார்
சீரிலினத் தவர்க்கோ-தீயபாவி யெனக்கோ
கோரிக் கண்ணீர் சொரிந்து-கூவி ஜெபித்தறியேன்.

4. ஜெபமே கவசமாகக்-சாதனை முற்றும்
செய்தாருன் மீட்புக்காக-வேதத்தி லெங்கும்
ஜெபமே ஜெயமதாக-வாக்குத் தத்தமும்
தந்திட்டா ருனக்காக
ஜெபத்தி லவர் சாயலாய்த்-தீயனா னுருவாகி
ஜெய பக்தருடன் சேர்ந்துன்-பாதம் பணிந்து கொள்ள.

116

பல்லவி

கிருபை புரிந்தெனை ஆள் - நீ, பரனே;
கிருபை புரிந்தெனை ஆள் - நிதம்.

சரணங்கள்

1. திரு அருள் நீடு மெய்ஞ்ஞான திரித்து
வரில் நரனாகிய மாதுவின் வித்து.-

2. பண்ணின பாவமெலாம் அகல்வித்து,
நிண்ணயமாய் மிகவும் தயை வைத்து,-

3. தந்திரவான் கடியின் சிறை மீட்டு.
எந்தை, மகிழ்ந் துன்றன் அன்பு பாராட்டு.-

4. தீமை உறும் பல ஆசையை நீக்கி,
ஸ்வாமி, என்னை உமக் காலயம் ஆக்கி,-

5. தொல் வினையால் வரு சாபம் ஒழித்து
நல் வினையே செய் திராணி அளித்து

6. அம்பர மீதுறை வானவர் போற்ற,
கெம்பீரமாய் விசுவாசிகள் ஏற்ற.-

117

பல்லவி

ஏசுவே, கிரு பாசனப்பதியே, கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்.
ஏசுவே, கிரு பாசனப்பதியே

சரணங்கள்

1. காசினியில் உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா;
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து
நித்தனே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி,-

2. பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க் கன்மி ஆயினேன்;
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற் றுதிரம் விட்ட
தேவனே, எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி

3. சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்டஅதி
தீரமுள்ள எங்கள் உப கார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா? எனைச்சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்று முடியக் கண் பார்த்து.

4. பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை;
புண்ணியனே, உன் சரணம் நண்ணி அண்டினேன்,
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து-

118

பல்லவி

தேவனே, நான் உமதண்டையில்-
இன்னும் நெருங்கிச் சேர்வதே என் ஆவல் பூமியில்

அனுபல்லவி

மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும்
ஆவலாய் உம்மண்டை சேர்வேன்;

சரணங்கள்

1. யாக்கோபைப் போல், போகும் பாதையில்-
பொழுது பட்டு இராவில் இருள் வந்து மூடிட,
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும்
என் கனாவில் நோக்கியும்மைக்கிட்டிச் சேர்வேன்
வாக்கடங்கா நல்ல நாதா!

2. பரத்துக்கேறும் படிகள் போலவே-
என் பாதை தோன்றப் பண்ணும் ஐயா,
எந்தன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம்
உமதண்டை அருமையாய் என்னை அழைக்கும்
அன்பின் தூதராகச் செய்யும்.

3. நித்திரையினின்று விழித்துக் - காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்;
இத்தரையில் உந்தன் வீடாய் என் துயர்க்கல்
நாட்டுவேனே,

எந்தன் துன்பத்தின் வழியாய் இன்னும்
உம்மைக் கிட்டிச் சேர்வேன்.

4. ஆனந்தமாம் செட்டை விரித்துப்-
பரவசமாய் ஆகாயத்தில் ஏறி போயினும்
வான மண்டலங் கடந்து பறந்து
மேலே சென்றிடினும்,
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக்
கிட்டிச் சேர்வேன்.

119

கர்த்தரின் பந்தி

பல்லவி

அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும்? - அதிசய
அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும்?

அனுபல்லவி

துன்ப அகோரம் தொடர்ந்திடும் நேரம் - அதிசய

சரணங்கள்

1. வியாழனிரவினில் வியாகுலத்தோடே
விளம்பின போதகம் மறந்திடலாமோ?-

2. பிரிந்திடும் வேளை நெருங்கினதாலே,
வருந்தின சீஷர்க்காய் மருகி நின்றாரே,-

3. இதுவென் சரீரம், இதுவென்றன் ரத்தம்,
எனை நினைத்திடும்படி அருந்துமென்றாரே,-

4. செடியும் கொடியும்போல் சேர்ந்து தம்மோடே
முடிவு பரியந்தம் நிலைப்பீரென்றாரே.-

5. பக்தர்கட்காகப் பரமனை நோக்கி
மெத்தவும் ஊக்கமாய் வேண்டிக்கொண்டாரே.

120

பல்லவி

கர்த்தரின் பந்தியில் வா, - சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா.

அனுபல்லவி

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணிக்

சரணங்கள்

1. ஆபேலின் ரத்தம் அல்ல, - நீ செய்த
அநியாயத்தைச் சொல்ல,
சாபம் எல்லாம் வெல்ல, - சிந்துண்ட
தயையை நான் என்ன சொல்ல?
கோபம் இல்லாமல் உன் மா பாவம் தீர்த்திடக்
கூறி பிதாவின் முன் ஏறின ரத்தமே.-

2. ஜீவ அப்பம் அல்லோ?- கிறிஸ்துவின்
திருச் சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ?- உனக்காய்ப்
பகிரப்பட்ட தல்லோ?
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திடக்-

3. தேவ அன்பைப் பாரு; - கிறிஸ்துவின்
சீஷர் துயர் தீரு;
பாவக் கேட்டைக் கூறு;- ராப்போஜன
பந்திதனில் சேரு;
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே;-

4. அன்பின் விருந்தாமே; கர்த்தருடன்
ஐக்கிய பந்தி யாமே;

துன்பம் துயர் போமே- இருதயம்
சுத்த திடனாமே;
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா;-

121

சுவிசேஷ ஊழியம்

பல்லவி

தாசரே, இத்தாரணியை அன்பாய்
யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்

அனுபல்லவி

நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்
வெளிச்சம் வீசுவோம்.

சரணங்கள்

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,
உரித்தாய் யேசு பாவப் பாரத்தை
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே

2. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து
யேசு கனிந்து, திரிந்தனரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்கவொண்ணா கஷ்டத்திற்குள்,
நிஷ்டூரத்திற்குள், படுகுழிக்குள் விழுந்தனரே

4. இந்ததேச மாது சிரோமணிகள்
விந்தை யொளிக்குள் வரவழைப்போம்;
சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து,
நிர்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்;
ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம்.

122

பல்லவி

புறப்படுங்கள், தேவ புதல்வனின் ஊழியரே

சரணங்கள்

1. கறைப்படா ஏசு நாமம் கதித்து மகிமைப் பெறப்,
பிறப்பினிலே யுங்களைப் பிரித்த தயை நினைந்து - புற

2. மாமிச ரத்தத் தோடு மயங்கி யோசிப்பதாலே
தாமதம் செய்ய வேண்டாம்; தரித்தெங்கும் நிற்கவேண்டாம்
புற

3. அழிவன் பாதையில் செல்லும் அநேகரைக் கண்டித்தும்
பழி சுமராதபடி பரனுரையைப் பகரப் - புற

4. சிலவை மரத்தில் தொங்கி ஜீவனை விட்ட கர்த்தர்
வலுவான அன்பை உங்கள் மனதினிலேயணிந்து - புற

123

1 உலக மாய்கையிலே உன் சிந்தனையே வேண்டாம்
ஈலோகம் மாறிடுமே இயேசுவை சேர்ந்திடாயோ.

பல்லவி

உன் இயேசுவை அண்டிக்கொள் அண்டிக்கொள்
உன் நேசர் பாதம் தேடிக்கொள் தேடிக்கொள்
உன் மேல் தன் கண்ணை வைத்து
இன்பப் பாதை காட்டிடுவார்.

2. இளைத்து தவித்த உன்னை வருந்தி அழைக்கிறாரே
அலைந்து திரிந்த உன்னை விரும்பி கேட்கிறாரே

3. சஞ்சலமுற்றோருக்குத் தஞ்சம் கொடுப்பாரே
சாப பாவம் போக்கி ஈடேற்றி நடத்துவாரே

4. ஆறுதல் வாழ்வு ஜீவன் அன்பாலே ஈந்திடுவார்
அப்பாலே மோட்ச வாழ்வும் தயாளர் தந்திடுவார்

5. பாவி நீ ஓடிவந்து தாவிப்பிடித்திடுவாய்
பூவினின் வாழ்வை விட்டு ஆவியில் நிறைந்திடுவாய்

6. வாக்குத்தத்தம் செய்தவர் வாக்குத் தவறிடாரே
மானிடர் மாறிடுவார் பரன் இயேசு மாறிடாரே

124

புது வருடம்

பல்லவி

இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத்தரிப்போமாக

அனுபல்லவி

நம்மை ரட்சிக்க வந்து தம்மைப் பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும் அற்புதமாகவும்

சரணங்கள்

1. காலம் சொல் போல் கழியும் தண்ணீரைப் போல் வடியும்
கனாவைப் போலேயும் ஒழியும்

வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்,
மண்ணின் வாழ் வொன்றும் நிற்க மாட்டாது:
கோலப் பதுமைக்கும் நீர்க் குமிழிக்கும் புகைக்குமே
கொண்ட உலகத்தில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன்

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்
பரம பாதையைத் தொடர்ந்தோம்:
வலிய தீமையை வென்றோம், நலியும் ஆசையைக்
கொன்றோம்

வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி என்ற தெல்லாம் விண்டோம், கர்த்தாவின் மீட்பைக்
கண்டோம்

காய்ந்த மனதோடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்து கெடவும் ஆராய்ந்து நெறியுடன்

3. கன தேசம் வருவிக்கும் கேடுகட்கோர் முடிவு
தந்து, நொறுங்கினதைக் கட்டி,
கன சபையை ஆதரித்தன்பாய் ஆசீர்வதித்து,
கண் நோக்கி எல்லார் மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து, தமது தேவ
சிந்தை யினோடதி விந்தையதாய் உயிர்
மைந்தனால் எங்களை இந்த விநோதமாய்

125

திருமணம்

பல்லவி

ஏசு நாயகா, வந்தாளும்;- எந்நாளும் திவ்ய
ஏசு நாயகா, வந்தாளும்.

அனுபல்லவி

ஆசீர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக-

சரணங்கள்

1. சுந்தரம் மிகும்படி முன் அந்த மண வீட்டில்
உந்தன் அருள் தந்த தயை போலே, அன்பாலே

2. உத்தம சன்மார்க்க நெறி, பக்தி, விசுவாசம்,
நித்திய சமாதானம் உற்று வாழ, மிக வாழ,

3. துங்கம் மிகும் நன் கனம் விளங்கி, வளமாக
மங்களம் தோங்க, நலம் தாங்க, நலம் தாங்க.

4. நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகிப்
புத்திர சந்தானமே செழிக்க, தழைக்க.

126

பல்லவி

மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மங்கள வாழ்வு வாழ்வினில் வாழ்வு
மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

1. துணை பிரியாது, தோகையிம்மாது
சுப மண மகளிவர் இதுபோது
மண முறை யோது வசனம் விடாது
வந்தனர் உமதருள் பெறவேது - நல்ல - மண

2. ஜீவதயாபரா, சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாமண அலங்காரா,
தேவ குமாரா திருவெல்லையூரா,
சேர்ந்தவர்க்கருள் தராதிருப்பீரா - நல்ல - மண

3. குடித்தன வீரம், குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்
அடக்கமா சாரம், அன்பு, உதாரம்,
அம்புவி தனில் மனைக்கலங்காரம் - நல்ல - மண

4. மன்றல் செய்தேவி. மணாளனுக்காவி,
மந்திரம் அவர்க்குரை மேதாவி,
அன்றியிப் பூவில் அமிர்த சஞ்சீவி:
அவனை யில்லாதவ னொருபாவி - நல்ல - மண

127

பல்லவி

மங்களம் செழிக்க கிருபையருளும்
மங்கள நாதனே (2)

சரணங்கள்

1. மங்கள நித்திய மங்கள நீ,
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ, எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய, நித்திய தத்துவ, மெத்த மகத்துவ
அத்தனுக்கத்தனாம் ஆபிராம் தேவ நீ - மங்களம்

2. மணமகன் ....
மணமகள் ....
மானுவேலர்க்கும், மகானுபாவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும் நித்தியனே உன்னை
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும் - மங்களம்

128

பல்லவி

1. ஆசீர்வதியும் கர்த்தரே, ஆனந்தமிகவே
நேசா உதியும் சுத்தரே, நித்தம் மகிழவே
வீசிரோ வானஜோதி கதிரிங்கே
மேசியா எம்மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர்வதித்திடும்.

2. இம்மண மக்களோடென்றும் என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின்சென்றும் ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோடன்பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித் தரிக்க
ஊக்கமருளுமே.

3. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சாய்ந்துமே, பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏக ராஜனாய்
உற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே.

4. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந்துதித்தும்மை பிரஸ்தாபிக்க
ஆ! தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமே.

129

துன்ப காலம்

பல்லவி

சிலுவையின் நிழலில் அனுதினம் அடியான்
சாய்ந்திளைப்பாறிடுவேன் ... ஆ ... ஆ

அனுபல்லவி

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில்
அடைகிறேன் ஆறுதல் மனதில்

சரணங்கள்

1. பாவ பார சுமையதால் சோர்ந்தே
தளர்ந்த தென் ஜீவியமே - ஆ... ஆ
சிலுவையண்டை வந்ததனால்
சிறந்த சந்தோஷம் கண்டதினால்
இளைப் படையாது மேலோகம்
ஏகுவேன் பறந்தே வேகம்

2. எவ்விதக் கொடிய இடருக்கும் அஞ்சேன்
இயேசுவைச் சார்ந்து நிற்பேன்- ஆ... ஆ
அவனியில் வியாகுலம் வந்தால்
அவரையே நான் அண்டிக்கொண்டால்
அலைமிக மோதிடும் அந்நாள்
ஆறுதல் அளிப்பதாய்ச் சொன்னார்

3. இன்பம் சுரந்திடும் திருமொழிக் கேட்டே
இன்னல்கள் மறந்திடுவேன்- ஆ... ஆ
திருமறை இன்னிசை நாதம்
தேனிலுமினிய வேதம்
தருமெனக் கானந்த சந்தோஷம்
தீர்க்குமென் இதயத்தின் தோஷம்

130

பல்லவி

தருணமே, பரம சரீரி; எனைத்
தாங்கி அருள், கருணைவாரி

அனுபல்லவி

உரிமை அடியர் அனுசாரி, - உயர்
எருசலை நகர் அதிகாரி, அதி - தரு

சரணங்கள்

1. வரர்[1] அடி தொழும் வெகு மானி,[2] - பரன் - மகிமை
ஒளிர் தேவ சமானி,
நரர் பிணை ஒரு பிரதானி, - ஏசு - நாயகன்
என தெஜமானி, அதி - - தரு

2. ஆதாரம் உனை அன்றி யாரே? - எனை - அன்பாய்த்
திருக்கண் கொண்டு பாரே;
பாதார விந்தம்[3] கதி சேரே, - இஸ்ரேல் -
பார்த்திபன் தவிது
வங்கிஷ வேரே, அதி - - தரு

3. நித்த நித்த மாக என்றன் மேலே - வருவ - தெத்தனை
துன்பங்கள் ஒருக்காலே;
அத்தனையும் நீக்குதற்குன் காலே - எனக் -
குத்தம துணைதான்,
மனுவேலே, அதி - - தரு

4. கங்குல்[4] பகலும் துயரம், கோவே; வரும்
கலக்கம் ஒழித்தெனைத் தற் காவே
பங் கெனக்குத் தந்த மெய்ம் மன்னாவே,-
ஏழை - பாவியை
ரட்சியும், ஏசு தேவே! அதி -

1. வானோர் 2. பெரியோர் 3. பாதமாகிய தாமரை 4. இரவு

131

பல்லவி

வந்தே கடைக்கண் பாருமேன்; சர்வேசுரனே,
வந்தே கடைக்கண் பாருமேன்

சரணங்கள்

1. வந்தே கடைக்கண் பாரும் மானிடர் மீதிரங்கி,
எந்தா, துயரம் யாவும் எவ்விதமும் நீக்க - வந்தே

2. கொள்ளை நோய் மிகுந்ததின் கொடுமை பெருக்கமாச்சே;
வள்ளலுன் சகாயத்தால் மாற்றும் கருணைத் தேவே!
- வந்தே

3. எண்ணா வேளை வாலரும் இறந்துபோறார், ஐயோ!
கண்ணீர் சொரியும் மாந்தர் கலக்கம் அனைத்தும் போக்க,
- வந்தே

4. எங்கே விரைந் தோடுவோம், இறைவா? உமை அல்லாமல்
எங்கள் தஞ்சம் வேறாரும் இல்லை; சரணம், ஐயா!
- வந்தே

5. மானிடர் துயரத்தால் மறுகியே திரிகின்றோம்;
ஏன் இந்தக் கஸ்தி யாவும் எந்தையே? கண்பாருமேன்
- வந்தே

6. எந்த மட்டும் இந்நோயால் ஈனர் எமை வாதிப்பீர்
அந்தி, சந்தி அலறும் ஆதுலர் மீதிரங்கி, - வந்தே

7. வாரும், கரு ணாகரா; வந்தே கொள்ளை நோயதைத்
தீரும் இவ்வேளை தானே தீனர் எம்மீதினின்றே - வந்தே

132

பல்லவி

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே
வாஞ்சித்து கதறுதே

அனுபல்லவி

தஞ்சமே நீர், அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர், என்றும் காப்பீர்

1. தேவன் மேல் ஆத்துமமே
தாகமாயிருக்கிறதே

தேவனின் சன்னிதியில் - நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே.

2. ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அவரின் இரட்சிப்பினால் - தினமும்
துதித்துப் போற்றிடுவாய்

3. யோர்தான் தேசத்திலும்
எர் மோன் மலைகளிலும்
சிறு மலைகளிலிருந்தும் - உம்மைத்
தினமும் நினைக்கிறேன்.

4. தேவரீர் பகற்காலத்தில்
கிருபையைத் தருகின்றீர்
இரவில் பாடும்பாட்டு - எந்தன்
வாயினிலிருக்கிறது.

133

பல்லவி

வாரா வினை வந்தாலும். சோராதே மனமே;
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே

சரணங்கள்

1. அலகை சதித்துன் மீது வலை வீசினாலும்,
அஞ்சாதே; ஏசுபரன் தஞ்சம் விடாதே.

2. உலகம் எதிர்த்துனக்கு மலைவு செய்தாலும்
உறுதிவிட்டயராதே, நெறி தவறாதே

3. தேகம் மோகம் மிஞ்சி வேகங்கொண்டாலும்,
திடமனதாயிருந் தடல் புரிவாயே

4. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே!
பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே

5. தன் உயிர் ஈந்திட்ட உன் ஏசுநாதர்
தள்ளுவரோ? அன்பு கொள்ளவர் மீதே

6. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,
மருள விழாதே, நல் அருளை விடாதே.

134

மோட்சம்

பல்லவி

ஆனந்தமே பரமானந்தமே - இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

சரணங்கள்

1. இந்தப் புவி ஒரு சொந்தம் அல்ல என்று
இயேசு என்நேசர் மொழிந்தனரே!
இக்கட்டுந் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும்.

2. கர்த்தவே நீர் எந்தன் காருண்யக் கோட்டையே
காரணமின்றிக் கலங்கேனே யான்
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே.

3. என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்க்
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது?
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெயகீதம் பாடி மகிழ்ந்திடலாம்

4. கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ?
கைவேலையல்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ?

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையைத்
துன்பத்தினூடே அனுப்பிடுவார்

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குறேனே!
என்நேசர் தன்முக ஜோதியதே யல்லால்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை

135

பல்லவி

இன்ப துன்ப நேரத்திலும்,
உன் அன்புள்ள யேசுவைப் பார்.

சரணங்கள்

1. இன்பத்தினால் அகமகிழ்ந்து, கிலேசத்தினால் துக்கித்துச்
சிற்றின்பப் பேருலகில் சிக்கிக்கொண்டு இருக்கும்போதும்

2. சோதனையால் பிடிப்பட்டு, இடுக்கண்ணில் இருக்கும்போதும்,
சாத்தான் உன்னை மேற்கொள்ளும் போதும்
அக்கினி யாஸ்திரம் எறியும்போதும்.

3. தோழரால் பகைக்கப்பட்டு, மனக்கிலேசம் அடையும்போதும்
உலகம் உன்னை இகழ்ச்சி செய்து
உன் இடம் விட்டோடும்போதும்

4. அவர்தாமே சோதிக்கப்பட்டு, பாடு நமக்காய்ப்பட்டதினால்
அவர் சோதிக்கப் படும்நமக்கு, உதவிசெய்ய வல்லவராம்

5. வறுமையினால் யாசித்துப், பாடுமிகப் படும்போதும்.
சாத்தான் உன்னைப் பகடி செய்து
உன் விசுவாசத்தைக் குறைக்கும்போதும்.

6. கடு நோயால் பெலன் குன்றிப் பெலவீனத்தால் தள்ளாடி,
ஜீவன் உனக்குக் கசப்பாகிச், சாவை நீ விரும்பும்போதும்,

7. பகைஞரால் கல்லெறி யுண்டு, மரண நேரம் கிட்டும்போதும் பக்தன் ஸ்தேவானைப்போல, தைரியமாய் உன் யேசுவைப் பார்

8. நான் என் யேசுவின் தரிசனத்தை நிமிஷந்தோறும் காண்கிறதால்,- "நான் தான் பயப்படாதிருங்கள்" என்றவர் என்னைத் தேற்றுகிறார்.

136

பல்லவி

இன்பகானானுக்குள் ஏழை செல்ல
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்.

சரணங்கள்

1. பரம சுகங்களின் இனியரசம்
பரமேச னோடுயான் பானஞ்செய்வேன்

2. சத்துரு சேனைகள் அங்கே இல்லை
யேசுவின் புத்திரர் மாத்திரமே.

3. தேவாட்டுக் குட்டியின் திருமனை
சிறப்புட னிலங்கிடுந் தேசமது.

4. சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாதே
சொர்க்கலோக நாட்டுக்கோர் இணையில்லையே

5. பரம பிதாவெந்தன் கண்ணி னின்று
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்

6. ஜீவ விருட்சமங் காற்றருகில்
மாதந் தோறும் புதுக் கனி தருமே.

7. நவரத்ன நிர்மித பட்டணத்தில்
இராப்பகல் சூரியன் இயேசு தாமே.

137

பல்லவி

என்ன சுகம் என் ரட்சகரின் சமூகம்
பேரானந்தம் பரமானந்த மோட்ச சுகானந்தம்
அதைப் பெற்று அனுபவித்தால் என்ன சுகம்

1. பொன்னகர் மேடையில் எந்நேரம் பாடலாம்,
கின்னரம் தம்பூர் வீணை இன்னிசை மீட்டலாம்

2. ஜீவநதியில் களித்துக் குளிக்கலாம்,
ஜீவவிருட்சத்தின் கனியும் புசிக்கலாம்.

3. தங்ககிரீடம் தலையில் தரிக்கலாம்,
சிங்காசனத்தின்று ஜெயகீதம் பாடலாம்,

4. பக்தர்கள் கூட்டத்தில் பாடிக்களிக்கலாம்,
பரமபிதாவின் பணிவிடை செய்யலாம்.

5. துன்பம் ஒழிந்துமே இன்பமடையலாம்,
துயரின் சமூகத்தில் துதிகொண்டாடலாம்.

138

பல்லவி

மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம் - பரன்
மகிமையுற்றுமே மகிழ்வோம்.

அனுபல்லவி

மகிழ்வோம் மகிழ்வோம் மகிழ்வோம்
மகிமையில் மகிழ.

சரணங்கள்

1. வானில் யாவரும் மகிழ. இயேசு
வாரும் என்றுமே பகர,
மாறுவோர்க்கொரு சிகரம் - மன

தாரத் தற்பரனருள
மகிமை கனமும் மகிமையில் மிகவும் மகிழ

2. சுத்த ஜீவியமுடைய - தேவ
புத்திரர் துலங்கிடவே
சர்வ சிருஷ்டிகளுடைய - மா
கர்மங்களகன்றகல
மகிழும் தினமும் மகிபரின் தினமும் வரவே

3. வானம் பூமியுமகல - நவ
வானம் பூவுமே நிகல
சாபம் பாவமும் சகல - கடும்
ரோக மோடியே விலக
சுகமும் ஜெயமும் சகலரும் சுகித்து மகிழ

4. பளிங்கு போல் ஜீவ நதியே - இரு
கரையும் ஜீவனின் மரமே
பசியும் தாகமுமில்லையே - அங்கு
புசிக்க ஜீவனின் கனியே
புசிப்போம் ருசிப்போம் இயேசுவில் நித்தியம் மகிழ

5. சுத்த ஆவியும் சுதனும் - செய்த
மீட்பின் செயலைப் பரனும்,
மற்றும் தூதர் கணமும் - அங்கு
உற்று உள்ளம் மகிழ,
போற்றி புகழ்வோம் நூதன செயலில் மகிழ

139

பாலர் பாடல்கள்

1. நல்ல தேவனே, ஞான ஜீவனே,
வல்ல உமது கருணை தன்னை
வாழ்த்தி போற்றுவேன்.

2. போன ராவிலே பொல்லாங்கின்றியே,
ஆன நல்ல அருளினாலே
அன்பாய்க் காத்தீரே.

3. இன்று நானுமே இன்பமாகவே
உந்தன் வழியில் நடக்கக், கருணை
உதவவேணுமே!

4. ஒளியின் பிள்ளையாய் ஊக்கமாகவே,
எளியன் இன்றும் நடக்க, ஆவி
ஈந்தருளுமே!

5. கையைக் காவுமே. கண்ணைக் காவுமே!
மெய்யைக் காத்து என்றன் மனதை
மிகவும் காவுமே!

140

பல்லவி

ஓசன்னா பாடுவோம். ஏசுவின் தாசரே,
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!

சரணங்கள்

1. முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்ன பாலர் பாடினார்,
அன்று போல இன்றும் நாமும் அன்பாய்த் துதிபாடுவோம்

2. சின்ன மறி மீதில் ஏறி, அன்பர் பவனி போனார்
இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்

3. பாவமதைப் போக்கவும் இப் பாவியைக் கைதூக்கவும்
பாசமுள்ள ஏசையாப் பவனியாகப் போகிறார்.

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்.
ஜாலர் வீணையோடு பாடித் தாளை முத்தி செய்குவோம்.

5. குருத்தோலை ஞாயிற்றில் நம் குருபாதம் பணிவோம்
கூடி அருள் பெற்று நாமும் த்ரியோகரைப் போற்றுவோம்.

ஞான பாடல்கள்

1

கடவுள் வாழ்த்து
Let us with a gladsome

S.S. 765
G.B. 24

1 களிப்புடன் கூடுவோம்,
கர்த்தரை நாம் போற்றுவோம்;
அவர் தயை என்றைக்கும்
தாசரோடு தங்கிடும்.

2 ஆதிமுதல் தேவனே
நன்மை யாவுஞ் செய்தாரே;
அவர்தயை என்றைக்கும்
மாந்தர் மேலே சொரியும்.

3 இஸ்ரவேலைப் போஷித்தார்
நித்தம் வழிகாட்டினார்;
அவர் தயை என்றைக்கும்
மன்னாபோலே சொரியும்.

4 வானம், பூமி, புதிதாய்ச்
சிஷ்டிப்பாரே ஞானமாய்;
அவர் தயை என்றைக்கும்
அதால் காணும் யாருக்கும்.

2

O God, our help in ages past

S.S. 513
G.B. 346

1 கர்த்தாவே, அடியாருக்கு
அடைக்கலம் நீரே;
சகாயம் செய்யும்படிக்கு
எழுந்தருள்வீரே.

2 உமது சன்னிதானத்தில்
மகிழ்ச்சி அடைவோம்,

உமது கையை நீட்டுகில்
அஞ்சாமல் நடப்போம்.

3. மலைகள் தோன்றும் முன்னமே
அநாதி காலமாய்ச்
சுயம்புவாய் இருந்தீரே,
இருப்பீர் நித்யமாய்.

4 ஆயிரம் ஆண்டு உமக்கு
ஓர் நாளைப்போல் ஆமே
யுகங்கள் தேவரீருக்கு
ஓர் இமைக்கொப்பாமே.

5 சாவுக்குள்ளான மானிடர்
நிலைக்கவே மாட்டார்,
உலர்ந்த பூவைப்போல் அவர்
உதிர்ந்து போகிறார்.

6 கர்த்தாவே, அடியாருக்கு
அடைக்கலம் நீரே;
சகாயம் செய்யும்படிக்கு
எழுந்தருள்வீரே.

3

Praise my soul

S.S. 1
G.B. 32

1 ஆத்மமே, உன் ஆண்டவரின் திருப்பாதம் பணிந்து,
மீட்பு, சுகம், ஜீவன், அருள் பெற்றதாலே துதித்து,
அல்லேலூயா, என்றென்றைக்கும் நித்திய நாதரைப்போற்று.

2 நம் பிதாக்கள் தாழ்வில் பெற்ற தயை நன்மைக்காய்த் துதி;
கோபங்கொண்டும் அருள் ஈயும் என்றும் மாறாதோர் துதி;
அல்லேலூயா, அவர் உண்மை மா மகிமையாம், துதி.

3 தந்தைபோல் மா தயை உள்ளோர்; நீச மண்ணோர் நம்மையே
அன்பின் கரம்கொண்டு தாங்கி மாற்றார் வீழ்த்திக் காப்பாரே;
அல்லேலூயா, இன்னும் அவர் அருள் விரிவானதே.

4 என்றும் நின்றவர் சமுகம் போற்றும் தூதர் கூட்டமே;
நாற்றிசையும் நின்றெழுந்து பணிவீர் நீர் பக்தரே;
அல்லேலூயா, அனைவோரும் அன்பின் தெய்வம் போற்றுமே.

4

8,7,8,7,7,7
All Saints

1 அலங்கார வாசலாலே
கோவிலுட் பிரவேசிப்பேன்
தேவ வீட்டில் நன்மையாலே
ஆத்துமத்தில் பூரிப்பேன்
தேவா, உம்தன் சமூகம்
நல்கும் திவ்ய வெளிச்சம்

2 கர்த்தரே, உம்மண்டை வந்த
என்னண்டை நீர் வாருமேன்
நீர் இறங்கும் போதனந்த
இன்பத்தாலே மகிழ்வேன்
ஏழை என்தன் நெஞ்சமும்
தேவ ஸ்தலமாகிடும்.

3 பயத்தில் உமண்டை சேர
என் மன்றாட்டும் துதியும்
நல்ல பலியாக ஏற
உமதாவியைக் கொடும்;
தேகம், ஆவி யாவையும்
சுத்தமாக்கியருளும்

4 விசுவாசத்தை விடாமல்
அதில் பலப்படவும்
ஒருக்காலும் தவறாமல்
உம்மை நான் பின் செல்லவும்
அருட்சக்தியை நீரே
எனக்கீயும், கர்த்தரே

5 நாதா, பேசும், தாசன் கேட்பேன்
நீர் இப்பாழ் நிலத்திலே
பெய்யப்பண்ணும் மன்னா சேர்ப்பேன்
நல்தியானத்துடனே;
தாரும் ஜீவ பானத்தை,
தீரும் பசி தாகத்தை

5

G.B.40

Now thank we all our God

1. சர்வத்தையும் அன்பாய்,
ஆதரிக்குங் கர்த்தாவை,
அநேக நன்மையால்
ஆள்கொண்ட எம்பிரானை
இப்போது, ஏகமாய்
எல்லாரும் போற்றுவோம்,
மா தயை பெற்றதால்
நாம் நன்றி சொல்லுவோம்.

2. தயாள தேவனே
நீர் என்றும் பாதுகாரும்
கடாட்சங் காண்பித்து
நற் சமாதானந் தாரும்
மயங்கும் வேளையில்
நீர் அன்பாய்த் தாங்கிடும்
இம்மை மறுமையில்
மெய்ப் பாக்யம் ஈந்திடும்.

3. வானாதி வானத்தில்
என்றென்றும் அரசாளும்
திரியேக, மண்ணோர் எல்லாரும்
இப்போதும், எப்போதும்
ஆதியில் போலவே
புகழ்ந்து ஸ்தோத்திரம்
செலுத்துவார்களே.

6

மாலை ஆராதனை

All people that on earth do dwell

G.B. 10
S.S. 9

1. பூலோகத்தாரே, யாவரும்
கர்த்தாவில் களிகூருங்கள்:
ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம்
செலுத்திப் பாட வாருங்கள்

2. யெகோவா தாம் மெய்த்தேவனே,
நாம் அல்ல, அவர் சிருஷ்டித்தார்:
நாம் ஜனம், அவர் ராஜனே,
நாம் மந்தை, அவர் மேய்ப்பனார்.

3. கெம்பீரித்தவர் ஆலய
ப்ராகாரத்துள்ளே வாருங்கள்,
மகிழ்ந்து அவர் திவ்விய
நல் நாமத்தைக் கொண்டாடுங்கள்.

4. கர்த்தர் தயாளர், இரக்கம்
அவர்க்கு என்றும் உள்ளதே:
அவர் அநாதி சத்தியம்
மாறாமல் என்றும் நிற்குமே.

7

At even ere the sun was set

S.S. 79
G.B. 602

1. வியாதியஸ்தர் மாலையில்
அவஸ்தையோடு வந்தாரே:
தயாபரா உம்மண்டையில்
சர்வாங்க சொஸ்தம் பெற்றாரே.

2. வியாதி சஞ்சலத்தினால்
அநேகர் கிலேச முற்றனர்:
மெய்ப்பக்தி அன்பின் குறைவால்
அநேகர் சோர்வடைந்தனர்.

3. பிரபஞ்சம் வீண் என்றறிந்தும்
பற்றாசை பலர் கொண்டாரே,
உற்றாரால் பலர் நொந்தாலும்
மெய் நேசர் உம்மை தேடாரே

4. மாசற்ற தூய தன்மையை,
பூரணமாய்ப் பெருமையால்,
எல்லோரும் சால துக்கத்தை
அடைந்தோம் பாவப்பாசத்தால்

5. ஆ கிறிஸ்துவே மன்னுருவாய்
மா துன்பம் தீரும் அடைந்தீர்
எப்பாடும் பாவமும் அன்பாய்
ஆராய்ந்து பார்த்து அறிவீர்.

8

Meet again in Jesus Name

1. கூடி மீட்பர் நாமத்தில்
அவர் பாதம் பணிவோம்,
இயேசுவை இந்நேரத்தில்
கண்டானந்தம் அடைவோம்

பல்லவி

ஆ! இன்ப இன்ப ஆலயம்!
நல்மீட்பர் கிருபாசனம்!
கண்டடைவோம் தரிசனம்
இன்ப இன்ப ஆலயம்!

2. இரண்டு மூன்று பேர் ஒன்றாய்
கெஞ்சும் போது வருவார்:
வாக்குப் போலத்தயவாய்
ஆசீர்வாதம் தருவார்.

3. சொற்பப் பேராய் கூடினும்
கேட்பதெல்லாம் தருவார்!

வாக்குப்படி என்றைக்கும்
இயேசு நம்மோடிருப்பார்.

4. வாக்கை நம்பி நிற்கிறோம்.
அருள் கண்ணால் பாருமேன்!
காத்துக் கொண்டிருக்கிறோம்,
வல்ல ஆவி! வாருமேன்.

9

Abide with me S.S. 297
G.B. 601

1. நீங்காதிரும், என் நேச கர்த்தரே,
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே:
மற்றோர் ஒத்தாசை அற்றுப்போயினும்
நீர், மெய்ச் சகாயரே, நீங்காதிரும்.

2. நீர்மேலே குமிழ்போல் என் ஆயுசும்
இம்மையின் இன்பவாழ்வும் நீங்கிடும்:
கண் கண்ட யாவும் மாறிப்போயினும்
மாறாத கர்த்தரே, நீங்காதிரும்.

3. நீர் கூடநின்று தாங்கிவாருமேன்,
அப்போது தீமைக்கு நான் தப்புவேன்,
நீர், என் துணை என் பாதை காட்டியும்,
என் இன்பதுன்பத்தில் நீங்காதிரும்.

4. நான் அஞ்சிடேன் நீர் கூடத் தாங்கினால்:
என் க்லேசம் மாறும் உம் ப்ரசன்னத்தால்:
சாவே, எங்கே உன்கூரும் ஜெயமும்?
என்றாரவாரிப்பேன்: நீங்காதிரும்.

5. நான் சாகும் அந்தகாரநேரமே
நீர் ஒளியாய் விண் காட்சி காட்டுமே:
பேரின்பஜோதி வீசச் செய்திடும்:
வாணாள் சாங்காலிலும் நீங்காதிரும்.

10

Sun of my soul !

S.S. 302
G.B. 599

1. மெய் ஜோதியாம் என் நேசரே,
நீர் தாங்கினால் ராவில்லையே:
என் நெஞ்சுக்கும்மை மறைக்கும்
மேகம் வராமல் காத்திடும்.

2. உம் நேசமார்பில் என்றுமே
நான் சாய்ந்து வாழ்தல் இன்பமே
என்றென்தன் படுக்கையிலும்
சிந்திக்க ஏவியருளும்.

3. என்னோடு தங்கும் பகலில்,
சுகியேன் நீர் இல்லாவிடில்,
என்னோடு தங்கும் ராவிலும்
நீர்தாங்கின் அஞ்சேன் சாவிலும்.

4. இன்றைக்குத் திவ்விய அழைப்பை
அசட்டை செய்த பாவியை
நீர் கைவிடாமல், இப்போதே
இழுத்துக்கொள்ளும், மீட்பரே.

5. நோயுற்றோரைக் கண்ணோக்கிடும்
வறியோரை விசாரியும்:
துக்கிப்போர் சிசு போலவே
அமர்ந்து தூங்கச் செய்யுமே.

6. விழிக்கும் போதென்னருகில்
நீர் வந்து என்தன் வேலையில்
உம் அருள் தந்து காத்திடும்
என் ஆயுள் காலம் முழுவதும்.

11

களிப்பும் துதியும்
All hail the power of Jesus name

S.S. 203
G.B. 4

1. எல்லாருக்கும் மா உன்னத
கர்த்தாதி கர்த்தரே:
மெய்யான தேவ மனிதன்
நீர் வாழ்க. யேசுவே!

2. விண்ணில் ப்ரதானியான நீர்
பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்:
நீர் வாழ்க யேசுவே!

3. பிசாசு, பாவம், உலகம்,
இச்சத்துருக்களே
அழிந்துபோக மிதியும்:
நீர் வாழக் யேசுவே!

4. நீர்வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்:
நீர் வாழ்க யேசுவே!

5. விண்ணோர்களோடும் மண்ணுளோர்
என்றைக்கும் வாழ்கவே,
பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க யேசுவே!

12

Praise Him! Praise Him!

S.S. 208
G.B. 45

1. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்ப்,
பாரிலேயும் நாமசங்கீர்த்தனம் செய்ய,
மாந்தர் யாரும், வாரும் ஆனந்தமாய்:
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
யேசு நாதர் நம்மையும் தாங்குவார்.

போற்றும், போற்றும்! தேவகுமாரனைப் போற்றும்!
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்.

2. போற்றும். போற்றும்! தேவகுமாரனைப் போற்றும்!
பாவம்போக்கப் பாரினில் ஜென்மித்தார்:
பாடுபட்டுப் ப்ராணத் தியாகமுமாகி
வான லோக வாசலைத் திறந்தார்:
மா கர்த்தாவே, ஸ்தோத்திரம் என்றும் என்றும்!
வாழ்க, வாழ்க, ஜெகத்து ரட்சகா:
அருள் நாதா, மாசணுகா பரஞ்சோதி!
வல்ல தேவா, கருணை நாயகா!

3. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்,
போற்றும், போற்றும்,. மீட்பர் மகத்துவமாக!
ஆட்சி செய்வார் நித்திய காலமும்:
ஏக ராஜா, மாட்சிமையோடு வந்து,
யேசு ஸ்வாமி, பூமியில் ஆளுமேன்:
லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்.

13

G.B. 503
St. Theodulf

1. என் உள்ளமே, கர்த்தாவை
ஆவலாய்த் துதித்து,
என் ஆவியே, தெய்வன்பை
எப்போதும் போற்றிடு;
உன் பாவத்தை மன்னித்து,
உன்கேட்டை நீக்கினார்
உன் ஜீவனை ரட்சித்து
நற்சீர் அளிக்கிறார்.

2. மகா இரக்கமான
சகாயர் கர்த்தர்தான்,

நொறுங்குண்டோருக்கான
அருளின் ஊற்றேயாம்:
கோபத்தை என்றென்றைக்கும்
என் தேவன் கொள்ளாரே,
மனம் நருங்குண்டோர்க்கும்
கிருபை செய்வாரே.

3. தந்தை தன் மைந்தருக்கு
இரங்கும் வண்ணமாய்
கர்த்தர் தம் தாசருக்கு
இரங்குவார் மெய்யாய்:
நாம் இன்ன உருவென்று
நன்றாக அறிவார்.
நாம் தூளும் மண்ணும் என்று
அறிந்திருக்கிறார்.

4. கர்த்தரின் வேதம் சொல்லும்
ப்ரமாணப்படியே
இசைந்து அவர் காட்டும்
அன்புக்கு ஏற்கவே
நடந்துகொள்ளுவோர்க்குக்
கடாட்சம் அருள்வார்.
பரமானந்தத்துக்கு
ஆளாக்கி ரட்சிப்பார்.

14

My God, the spring of all my joys

G.B. 393

1. என் களிப்புக்குக் காரணம்
என் நல்ல தேவனே
பகலில் நீர் என் மகிமை,
ராவில் என் ஜோதியே.

2. இருளிலே நீர் தோன்றினால்
என் மனம் மகிழும்:
நீர் விடிவெள்ளி, ஆனதால்
என்னில் ப்ரகாசியும்.

3. யேசுவைத் தந்த தயவு
என்செல்வமானதால்
என் ஆத்துமா சந்தோஷித்து
மகிழும் வாழ்வினால்

4. நரகத்துக்கும் சாவுக்கும்
அஞ்சாமல் இருப்பேன்:
தேவன்பும் விசுவாசமும்
கொண்டு நான் வெல்லுவேன்.

15

Be glad in the Lord and rejoice S.S. 207

1. ஏகோபித்துச் சேருங்களேன்
கர்த்தாவில் ஆனந்திக்கவும்
விசாரம் விட்டோயுங்களேன்
கெம்பீரித் தாராதிக்கவும்.

பல்லவி

செய்வோம்! செய்வோம்!
த்ரியேகரைத் துதிசெய்வோம்!
செய்வோம்! செய்வோம்!
த்ரியேகரைத் துதிசெய்வோம்!

2. பராபரன் மெய்வஸ்துவாம்
தயாபரர் ஆண்டவரே
வந்தார் வையகத்திலேயாம்
இரட்சிக்க வல்லவரே.

3. பிசாசின் உபாயங்களால்
பயங்கர மோசமுண்டாம்
ஆனாலும் தேவாவியினால்
ஒத்தாசையும் ஜெயமுமாம்.

4. தரித்திரமே யாயினும்
சந்தோஷம் விடாதிருப்போம்.
மா கல்வி இல்லாவிடினும்
ஓயாமலே ஸ்தோத்திரிப்போம்.

5. ஏகோபித்துப் பாடுங்களேன்
மகோற்ச வானந்தத்தினால்,
த்ரியேகரைப் போற்றுங்களேன்
கெம்பீரச் சங்கீதத்தினால்.

16

O Lord my God

1. என் தேவனே, உம் மகிமைப் பிரஸ்தாபம்
பிரபஞ்சமெங்கும் தோன்றுகின்றது.
வானில் விண் மீன் இடி முழக்கங் கண்டு
என் உள்ளம் உம்மைப் போற்றுகின்றது.

பல்லவி

களிப்புடன் நான் உம்மைப் போற்றுவேன்
மா தேவனே, மா தேவனே
களிப்புடன் நான் உம்மைப் போற்றுவேன்
என் ரட்சகா, மா தேவனே.

2. காடுகளில் நடுவில் போகும்போது
பட்சிகளின் இன்னோசை கேட்கிறேன்.
உயர்ந்த மலைச் சிகரத்தினின்று,
அழகிய அருவி காண்கிறேன்.

3. மகிழ்ச்சியாய் என் ஸ்தானம் ஏற்றுக்கொண்டு:
தேவசுதன் இப்புவியில் வந்தார்.
சிலுவையில் என் பாவங்கள் சுமந்து,
மரித்தாரே என் இயேசு ரட்சகர்.

4. கிறிஸ்து வந்து அந்நாளில் ஏற்றுக்கொள்வார்
களிப்புடன் என் உள்ளம் மகிழும்.
அவர் முன்பு என் இதயம் திறந்து,
மா தேவனே, மா தேவனே என்பேன்.

17

Jesus. the very thought of Thee

S.S. 60
G.B. 134

1. யேசுவே, உம்மைச் சிந்தித்தால்
   என் உள்ளம் கனியும்:
   கண்ணார உம்மைக் காணுங்கால்,
   பேரின்பம் சுரக்கும்.

2. மானிட மீட்பர் யேசுவின்
   சீர் நாமம்போலவே
   இங்கீத நாதம் ஆய்ந்திடின்,
   உண்டோ இப்பாரிலே?

3. துன்புற்ற நெஞ்சின் தஞ்சமும்
   அன்பர்க்கு இன்பும் நீர்
   கேட்போர்க்குச் சால வள்ளலும்
   பேர் வாழ்வும் தேவரீர்.

4. கண்டடைந்தோரின் பாகத்தை
   யார் கூற வல்லவர்?
   உம்தாசர் அல்லால் பேரன்பை
   யார் ருசி பார்த்தவர்?

5. யேசுவே, எங்கள் முக்தியும்
   மகிழ்ச்சியும் நீரே:
   இப்போதும் நித்ய காலமும்
   நீர் எங்கள் மேன்மையே.

18

To God be the glory

S.S. 23
G.B. 36

1. மெய்த் தேவனைத்துதி: பெருநன்மை செய்தார்;
   குமாரனைத் தந்துனையே நேசித்தார்,
   உன் பாவத்துக்காய் யேசுவே மரித்தார்,
   நீ மோட்சத்திற் சேர ஆருயிர் தந்தார்.

பல்லவி

போற்றுவோம்! போற்றுவோம்! ஜீவநாயகரை
நம்புவோம்! நம்புவோம்! லோக ரட்சகரை
இம்மீட்பரின் மூலம் நற்கதி உண்டாம்,
பிதாவின் சமூகம் கண்டடையலாம்.

2. சம்பூரண மீட்பைச் சம்பாதித்தனர்
நல்லாசை உள்ளோர்க்கு ஈவேன் என்றனர்
எப்பாவியானாலும் விஸ்வாசம் வைத்தால்
அந்நேரமே மன்னிப்புண்டாம் யேசுவால்.

3. பேரன்பின் சொரூபி! மெய்த் தாசருக்கே
ஒப்பற்ற சந்தோஷத்தை அளித்தீரே.
ஆனாலும் பேரின்பத்திற் சேரும்போதோ
உண்டாகும் மகிழ்ச்சிக்கு வரம்புண்டோ?

19

திரியேகர்

G.B. 288
Alstone

1. பராபரனே, உமது
ராஜாசனத்தின் அண்டைக்குப்
பணிந்து தாழ்மையாய் வரும்
இப்பாவியைத் தள்ளாதேயும்.

2. பிதாவே என்னை தேவரீர்
உம் சாயலாய்ச் சிருஷ்டித்தீர்
நீர்தான் என் ஜீவன் உம்மையே
அல்லாமல் மாண்டு போவேனே.

3. தெய்வீக மைந்தன் யேசுவே,
வற்றாத அன்பின் ஆழியே
அடியேன் உய்ய தேவரீர்
பலியாய் ஜீவனை விட்டீர்.

4. தேவாவியே என் நெஞ்சை நீர்
திருப்பிப் புதிதாக்கினீர்:
என்னென்ன நன்மை என்னிலே
உண்டோ, அதும்மால் வந்ததே.

5. நீர் சோதனையில் தாங்குவீர்,
எத் துன்பத்திலும் கைவிடீர்
உம்மால் திடனும் வெற்றியும்
மனமகிழ்ச்சியும் வரும்.

20

பரம பிதா

Holy, holy, holy Lord God S.S. 22
G.B. 51

1. தூய, தூய தூயரே! த்ரியேக தேவா,
உமக்கே எந்நாளும் சங்கீதம் ஏறுமே:
தூய தூய துயரே! சர்வவல்ல நாதா!
காருண்யரே, ஆனந்த கடலே!

2. தூய, தூய தூயரே! அன்பர் சூழ நின்று
தேவ ஆசனமுன்னர் தம் க்ரீடம் வைப்பாரே:
கேருபீன் சேராபீன் தாழ்ந்து போற்றப்பெற்று,
இன்றென்றும் வீற்றாள்வீர், அநாதியே!

3. தூய, தூய தூயரே! ஜோதிப்ரகாசா,
பாவக்கண்ணால் உம்தன் மாண்பைக்காண யார் வல்லோர்?
நீரே பரிசுத்தர் மனோவாக்குக்கெட்டா
மாட்சிமை, தூய்மை, அன்பும் நிறைந்தோர்.

4. தூய, தூய தூயரே! த்ரியேக தேவா,
வானம், பூமி, ஆழி, உம்மைத் துதிசெய்யுமே,
தூய, தூய, தூயரே! சர்வவல்ல நாதா!
காருண்யரே, தூய த்ரியேகரே!

21

The Lord's my Shepherd S.S. 562 G.B. 414

1. கர்த்தர் என் மேய்ப்பரானவர்
நான் தாழ்ச்சியடையேன்
பசும்புல் அமர்ந்த தண்ணீர்
அண்டை நடத்துவார்.

2. அவர் என் ஆத்மாவைதேற்றி
தம் நாமத்தினிமித்தம்
நீதியின் பாதையிலென்னை
நடத்திக் காக்கிறார்.

3. மரண் இருள் பள்ளத்தில்
நான் நடந்தாலுமே
நீர் என்னோடே இருக்கிறீர்
கோல் தடியுந் தேற்றும்.

4. என் சத்துருக்களுக்கு முன்
பந்தி ஏற்படுத்தி
என் தலையை எண்ணெயினால்
அபிஷேகம் செய்வீர்.

5. என் ஜீவனுள்ள நாளெல்லாம்
நன்மை கிருபை செல்லும்
நான் கர்த்தர் வீட்டில் நீண்ட நாள்
நிலைத்து இருப்பேன்.

கடவுளின் அன்பு

22

I am so glad that our Father in heaven S.S. 38 G.B. 685

1. தேவன்பைக் காண்கிறோம் ஆனந்தமே
அவர் தாம் கொடுத்த வேதத்திலே;
வேதத்தின் மாட்சிமை யாவிலுமே
இயேசுவின் அன்புதான் பேரின்பமே.

பல்லவி

ஆனந்தம்! இயேசு அன்பு வைத்தார்
என்மேலுமே அன்ப வைத்தார்
ஆனந்தம்! இயேசு அன்பு வைத்தார்
என் மேலுமே வைத்தார்.

2. அவ்வன்பை மறந்து திரிந்தாலும்
எங்குமே அதென்னைத் தொடர்ந்திடும்
மீட்பரின் பாசத்தை நினைக்கவே
ஓடுவேன் அன்பரின் கரத்துக்கே.

3. மா ராஜன் மகிமைக் காடசி காண்பேன்;
நித்தியம் அவர்மேல் பாடிடுவேன்
ஒப்பில்லா ஓரின்ப கீதத்தையே
"ஆனந்தம் என் நாதர் அன்பு" என்றே.

4. மீட்பரை அன்புதான்கொண்டுவந்தே
மாளவும் செய்ததே குருசிலே;
என்னையும் நேசித்தார் நிச்சயமே!
இவ்வன்பரை நேசிப்பேன் எந்நாளுமே.

5. தேறுதல் அடைந்தேன் நிச்சயத்தால்
பாக்கியம் பெறுவேன் நம்பிக்கையால்;
சாத்தானும் ஓடினான் என்னைவிட்டே
இயேசுவின் அன்பை நான் கூறவுமே.

23

Hark, my soul ! It is the Lord S.S. 365
G.B. 403

1 பாவி, கேள் உன் ஆண்டவர்,
அறையுண்ட ரட்சகர்
கேட்கிறார், "என் மகனே,
அன்புண்டோ என் பேரிலே?"

2 "நீக்கினேன் உன் குற்றத்தைக்,
கட்டினேன் உன் காயத்தைத்

தேடிப் பார்த்து ரட்சித்தேன்,
ஒளி வீசப்பண்ணினேன்."

3 "தாயின் மிக்க பாசமும்
ஆபத்தாலே குன்றினும்,
குன்றமாட்டாதென்றுமே,
ஒப்பில்லா என் நேசமே."

4 "எனதன்பின் பெருக்கும்,
ஆழம் நீளம் உயரமும்
சொல்லி முடியாது, பார்;
என்னைப் போன்ற நேசரார்?"

5 "திவ்ய ரூபம் தரிப்பாய்,
என்னோடரசாளுவாய்;
ஆதலால் சொல், மகனே,
அன்புண்டோ என் பேரிலே,"

6 யேசுவே, என் பக்தியும்
அன்பும் சொற்பமாயினும்,
உம்மையே நான் பற்றினேன்
அன்பின் ஸ்வாலை ஏற்றுமேன்!

24

கிறிஸ்துவின் நாமம்

How sweet the name of Jesus sounds S.S. 112 G.B. 393

1 நல் மீட்பர் யேசு நாமமே
என் காதுக்கின்பமாம்;
புண் பட்டநெஞ்சை ஆற்றவே
ஊற்றுண்ட தைலமாம்

2 அந் நாமம் நைந்த ஆவியை
நன்றாகத் தேற்றுமே;
துக்கத்தால் தொய்ந்த உள்ளத்தைத்
திடப்படுத்துமே.

3 பசித்த ஆத்துமாவுக்கு
மன்னாவைப் போலாகும்;
இளைத்துப்போன ஆவிக்கு
ஆரோக்யம் தந்திடும்.

4 என் ரட்சகா, என் கேடகம்
என் கோட்டையும் நீரே;
நிறைந்த அருட் பொக்கிஷம்,
அனைத்தும் நீர் தாமே.

5 மா நேசர், மேய்ப்பர், பர்த்தாவும்
என் ஜீவனும் நீரே;
என் தீர்க்கரும் என் ராஜாவும்
ஆசாரியருமே.

6 என் ப்ராண நாதா ஆண்டவா
நான் உம்மைப் போற்றுவேன்
என் வாழ் நாளெல்லாம், ரட்சகா
பேரன்பைச் சாற்றுவேன்

7 என் ஜீவன் போகும் நேரமும்
உம் நாமம் பற்றுவேன்;
எப்போதும் அதைப் பாடவும்
விண் கரையேறுவேன்.

25

All hail the power of Jesus' name S.S. 203 G.B. 4

1 யேசுவின் இன்ப நாமத்தை
எல்லாரும் போற்றுங்கள்
விண்ணோர்கள் போல அவரை
"நீர் வாழ்க!" என்னுங்கள்

2 பிசாசினின்று மாந்தரை
மீட்டோரைப் போற்றுங்கள்
ஒப்பற்ற நேசர் அவரை
"நீர் வாழ்க!" என்னுங்கள்

3 எல்லோரும் அருள் நாதரை
மகிழ்ந்து போற்றுங்கள்;
ஜீவாதிபதி அவரை,
நீர் வாழ்க!" என்னுங்கள்.

4 நாம் விண்ணில் சேரும்பொழுது
ஓயாமல் போற்றுவோம்,
நம் மீட்பர் பாதம் பணிந்து,
"நீர் வாழ்க!" என்னுவோம்.

26

கிறிஸ்வின் பிறப்பு

While shepherds watched their flocks S.S. 33 G.B. 114

1 ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
தம்மந்தை காத்தனர்;
கர்த்தாவின் தூதன் இறங்க,
விண் ஜோதி கண்டனர்.

2. அவர்கள் அச்சம் கொள்ளவும்
விண் தூதன்: "திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்."

3. "தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் க்றிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்."

4. "இதுங்கள் அடையாளமாம்,
முன்னணை மீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்."

5. என்றுரைத்தான்: அஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்.

6. மா உன்னதத்தில் தேவனே,
நீர் மேன்மை அடைவீர்;
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கு ஈகுவீர்.

27

Once in royal David's city

S.S. 32
G.B. 120

1. ராஜன் தாவீதூரிலுள்ள
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே.
மாதா, மரியம்மாள் தான்;
பாலன், யேசு க்றிஸ்துதான்.

2. வானம் விட்டுப் பூமி வந்தார்
மகா தேவ தேவனே,
அவர் வீடோ மாட்டுக் கொட்டில்,
தொட்டிலோ முன்னணையே.
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்

3. ஏழையான மாதாவுக்குப்
பாலனாய்க் கீழ்ப்படிந்தார்.
பால்ய பர்வம் எல்லாம் அன்பாய்ப்
பெற்றோர்க்கு அடங்கினார்.
அவர்போல் கீழ்ப்படிவோம்,
சாந்தத்தோடு நடப்போம்.

4. பாலர்க்கேற்ற பாதை காட்டப்
பாலனாக வளர்ந்தார்;
பலவீன மாந்தன்போலத்
துன்பம், துக்கம் சகித்தார்.
இன்ப துன்ப நாளிலும்
துணை செய்வார் நமக்கும்.

5. நம்மை மீட்ட நேசர் தம்மைக்
கண்ணால் கண்டு களிப்போம்;
அவர்தாமே மோட்சலோக
நாதர் என்று அறிவோம்
பாலரை அன்பாகவே
தம்மிடத்தில் சேர்ப்பாரே.

6. மாட்டுத் தொழுவத்திலல்ல,
தேவ ஆசனத்திலும்,
ஏழைக் கோலமாக அல்ல,
ராஜ க்ரீடம் சூடியும்
மீட்பர் வீற்றிருக்கின்றார்,
பாலர் சூழ்ந்து போற்றுவார்.

28

D.C.M

O little town of Bethlehem

1. ஓ பெத்லெகேமே சிற்றூரே
என்னே உன் அமைதி!
அயர்ந்தே நித்திரை செய்கையில்
ஊர்ந்திடும் வான் வெள்ளி
விண் வாழ்வின் ஜோதி தோன்றிற்றே
உன் வீதியில் இன்றே,
நல்லோர் நாட்டம் பொல்லார் கோட்டம்
உன் பாலன் இயேசுவே.

2. கூறும் ஓ விடி வெள்ளிகாள்!
இம்மைந்தன் ஜன்மமே;
விண் வேந்தர்க்கு மகிமையே,
பாரில் அமைதியாம்;
மா திவ்விய பாலன் தோன்றினார்
மண் மாந்தர் தூக்கத்தில்,
விழித்திருக்க தூதரும்
அன்போடு வானத்தில்

3. வேண்ட நற் சிறு பாலரும்
இத் தூய பாலனை,
அழைக்க ஏழை மாந்தரும்
இக் கன்னி மைந்தனை,
விஸ்வாசமும் நம் பாசமும்
வரவைப் பார்க்கவே
இராவை நீக்கித் தோன்றுவார்
இம்மாட்சி பாலனே.

4. பெத்லெகேம் தூய பாலனே
இறங்கி வருவீர்;
ஜனிப்பீர் எங்களில் இன்றும்
எம் பாவம் நீக்குவீர்
நற்செய்தி இவ்விழாதன்னில்
ஆ வாரும்; வந்து தங்கிடும்
இம்மானுவேலரே.

29

Oh come, all ye faithful — S.S. 31, G.B. 117

1. பக்தரே, வாரும் ஆசை ஆவலோடும்;
நீர் பாரும், நீர் பாரும் இப்பாலகனை.
வானோரின் ராஜன்
க்றிஸ்து பிறந்தாரே!
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும் யேசுவை.

2. தேவாதி தேவா, ஜோதியில் ஜோதி,
மானிட தன்மை நீர் வெறுத்திலீர்;
நித்ய குமாரன்
ஒப்பில்லாத மைந்தன்!
சாஷ்டாங்கம் செய்ய வாரும் யேசுவை.

3. மேலோகத்தாரோ, மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடிப் போற்றுமேன்;
"விண்ணில் சந்தோஷம்
மண்ணில் சமாதானம்"
சாஷ்டாங்கம் செய்ய வாரும் யேசுவை.

4. யேசுவே, வாழ்க! இன்று ஜென்மித்தீரே;
புகழும் ஸ்துதியும் உண்டாகவும்;
அன்பின் சொரூபி
அருள் அவதாரம்!
சாஷ்டாங்கம் செய்ய வாரும் யேசுவை.

30

G.B. 115

Christians awake

1. 'மெய் பக்தரே, நீர் விழித்தெழும்பும்,
சந்தோஷமாய் இந்நாளை வாழ்த்திடும்;
இன்றைக்கு லோக மீட்பர் ஜென்மித்தார்
விண்ணோர் இவ்விந்தையைச் கொண்டாடினார்;
கர்த்தாதி கர்த்தர் மானிடரானார்,
ரட்சணிய கர்த்தாவாகத் தோன்றினார்!

2. 'இதோ! நற்செய்தி கேளும்; இன்றைக்கே
இம்மானுவேல் தாவீதின் ஊரிலே
பூலோக மீட்பராகப் பிறந்தார்
எல்லோருக்கும் சந்தோஷம் நல்குவார்!
என்றே ஓர் தூதன் பெத்லேம் மேய்ப்பர்க்கே
இராவில் தோன்றி மொழிந்திட்டானே.

3. அந்நேரம் வானோர் கூட்டம் மகிழ்ந்து
ஆனந்தப் பாட்டைப் பாடி இசைந்து
'விண்ணில் கர்த்தாவுக்கு மா துதியும்,
மண்ணில் நல்லோர்க்குச் சமாதானமும்'
என்றல்லேலூயா பாடி வாழ்த்தினார்,
தெய்வீக அன்பின் மாண்பைப் போற்றினார்.

4. இச்செய்தி கேட்ட மேய்ப்பர் ஊருக்கு
அற்புத காட்சி காண விரைந்து
யோசேப்புடன் தாய் மரியாளையும்
முன்னணை மீது தெய்வ சேயையும்
கண்டே, தெய்வனைப் எண்ணிப் போற்றினார்,
ஆனந்தமாய் தம் மந்தைக் கேகினார்.

5 கெட்டுப்போனோரை மீட்ட நேசமாம்
உன்னத அன்பைச் சிந்தை செய்வோம் நாம்;
தம் ஜென்ம முதல் சாவு மட்டுக்கும்
அப்பாலன் செய்த தெய்வ வாழ்க்கையும்
அன்போடு தியானம் செய்து வருவோம்,
நம் மீட்பர் பின்னே செல்ல நாடுவோம்.

31

Silent night Holy night

1. ஒப்பில்லா - திரு இரா!
இதில் தான் மா பிதா
ஏக மைந்தனை லோகத்துக்கு
மீட்பராக அனுப்பினது
அன்பின் அதிசயமாம்-
அன்பின் அதிசயமாம்.

2. ஒப்பில்லா - திரு இரா!
யாவையும் ஆளும் மா
தெய்வ மைந்தனார் பாவிகளை
மீட்டு விண்ணுக்குயர்த்த தம்மை
எத்தனை தாழ்த்துகிறார்;
எத்தனை தாழ்த்துகிறார்!

3. ஒப்பில்லா-திரு இரா!
ஜென்மித்தார் மேசியா;
தெய்வ தூதரின் சேனைகளை
நாமும் சேர்ந்து, பராபரனை

பூரிப்பாய் ஸ்தோத்தரிப்போம்
பூரிப்பாய் ஸ்தேத்தரிப்போம்.

32

Away in a Manger!

1. பார், முன்னணை ஒன்றில் தொட்டில் இன்றியே
பாலனாம் நம் இயேசு கிடந்தனரே;
வெளியில் புல்மீது தூங்கும் பாலன் தாம்
காண மின்னிட்டதே வான் வெள்ளிகள் தாம்.

2. மா, மா, எனும் சத்தம் கேட்டு விழிப்பார்,
ஆயின் பாலன் இயேசு அழவே மாட்டார்;
நான் நேசிக்கும் நாதா, நீர் நோக்கிப் பார்ப்பீர்
தூக்கத்தில் நீர் தங்கி ராவெல்லாம் காப்பீர்.

3. என் நாதா, என்றும், நீர் என்னை நேசிப்பீர்,
என்னோடு தரித்தே அன்பாய் அணைப்பீர்;
உம் பாலர்தம்மை நீர் ஆசீர்வதித்தே
சேர்த்திடும் விண் வீட்டில் தூயோராக்கியே.

33

கிறிஸ்துவின் வாழ்க்கையும் ஊழியமும்

The great Physician now is near

S.S. 89

1. பேரன்பர் யேசு நிற்கிறார்:
நாம் அண்டிக் கொள்ளுவோமே;
கடாட்சமாகப் பார்க்கிறார்
நல் நாமம் போற்றுவோமே.

பல்லவி

விண்ணில் மேன்மை பெற்றதே;
மண்ணோர் இன்பமாகவே
பாடிப் போற்றும் நாமமே;
யேசு என்னும் நாமம்.

2. உன் பாவம் யாவும் மன்னித்தேன்;
அஞ்சாதே என்கிறாரே
சந்தேகங் கொண்டு சோர்வதேன்?
மெய்ப்பாக்கியம் ஈகிறாரே.

3. நல் மீட்பர் யாவர் பேரிலும்
கடாட்சம் வைக்கிறாரே
தம்மண்டை சிறியோரையும்
தள்ளாமல் சேர்க்கிறாரே.

4. மா மேன்மை யேசு ஸ்வாமிக்கே
நம்மால் உண்டாவதாக
ரட்சண்ய க்ரியைக்காகவே
நாம் வாழ்த்தல் செய்வோமாக.

5. ரட்சண்ய வல்ல நாமத்தால்
விசாரம் நீங்கிப் போகும்;
அவ்வின்ப நாமம் கேட்பதால்
சந்தோஷமும் உண்டாகும்.

6. ஆனந்தமாகப் பாடுவோம்,
பேராவலோடு வாரும்!
ஏகோபித்தார வாரிப்போம்,
மெய்ப்பக்தர், தாசர் யாரும்.

7. பேரின்ப மோட்ச லோகத்தில்
மாண்பாகக் கூடுவோமே
ரட்சண்ய நாதர் பாதத்தில்
சாஷ்டாங்கம் பண்ணுவோமே.

34

In tenderness He sought me S.S. 59
G.B. 360

1. காணமற்போன என்னை
நல் மேய்ப்பர் தேடினார்
தம் தோளின்பேரில் போட்டுக்

கொண்டன்பாய் ரட்சித்தார்,
மேலோக தூதர் கூடினார்;
ஆனந்தம் பொங்கிப் பாடினார்.

பல்லவி

நேசர் தேடி வந்தார்
ரத்தஞ்சிந்தி மீட்டார்,
என்னைச் சொந்தமாகக் கொண்டனர்,
பேரன்போடு சேர்த்துக் கொண்டனர்.

2. என்பாவ காயங்கட்டி
வீண் பயம் நீக்கினார்
"என் சொந்தமாக உன்னைக்
கொண்டேனே, பார்," என்றார்.
அவ்வின்ப சத்தம் கேட்கவே
என் உள்ளம் பூரிப்பாயிற்றே.

3. பேரன்பரகத் தோன்றி,
ஐங்காயம் காட்டினார்,
முட்கிரீடஞ் சூடினோராய்
என்னோடு பேசினார்.
இப்பாவியினிமித்தமே
படாதபாடு பட்டாரே.

4. இப்போது இன்பமாக
என் மீட்பர் பாதத்தில்
ஒப்பற்ற திவ்ய அன்பைத்
தியானஞ் செய்கையில்,
ஆனந்தம் பொங்கிப் பூரிப்பேன்;
மேன்மேலும் பாடிப் போற்றுவேன்.

5. ஆட்கொண்ட நாதர்பின்பு
பிரசன்னமாகுவார்
தம் ஞான மணவாட்டி
சேர்த்தென்றும் வாழ்விப்பார்
எம்மாசும் தீங்கும் நீங்கிப்போம்,
பேரின்பம் பெற்று வாழுவோம்.

35

There's not a friend like the lowly Jesus G.B. 358

1. யேசுவைப் போலச் சகாயஞ் செய்வார்
இல்லையே! இல்லையே!
ஆத்மாவின் ரோகமும் நோவும் தீர்ப்பார்
இல்லையே! இல்லையே!

பல்லவி

இன்பவாரி! இயேசு ஸ்வாமி!
அன்பரில் நீர் பேரன்பரே
நல்லோரும் வல்லோரும் உம்மைப்போல
இல்லையே! இல்லையே!

2. மீட்பரைப் போல் மாசில்லாதோர், மேலோர்
இல்லையே! இல்லையே!
கிறிஸ்துவைப் போல் மனத் தாழ்மையுள்ளோர்
இல்லையே! இல்லையே!

3. இயேசுவினால் வராத இன்பம்
இல்லையே! இல்லையே!
ஆண்டவர் நீக்கமாட்டாத துன்பம்
இல்லையே! இல்லையே!

4. நாதர் கைவிட்ட மெய்ப்பக்தர் உண்டோ
இல்லையே! இல்லையே!
மீட்கப்படாத மா பாவி உண்டோ?
இல்லையே! இல்லையே!

5. இயேசுவைப் போலக் கைதாங்குவாரும்
இல்லையே! இல்லையே!
மோட்ச பேரின்பம் கடாட்சிப்பாரும்
இல்லையே! இல்லையே!

36

Saviour like a shepherd lead us S.S. 1164
G.B. 335

1. ரட்சா பெருமானே, பாரும்
புண்ய பாதம் அண்டினோம்;
சுத்தமாக்கிச் சீரைத் தாரும்,
தேடிவந்து நிற்கிறோம்.
யேசு நாதா, யேசு நாதா,
உந்தன் சொந்தமாயினோம்.

2. மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்;
ஜீவத் தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்;
யேசு நாதா, யேசு நாதா,
மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்.

3. நீதி பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்
மோசம் பயமுமில்லாமல்
தங்கச் செய்து தாங்குவீர்,
யேசு நாதா, யேசு நாதா,
ஒரு போதும் கைவிடீர்.

4. ஜீவ கால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்;
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்
யேசு நாதா, யேசு நாதா,
ஊழிக்காலம் வாழ்விப்பீர்.

37

The King of love my shephered is S.S. 89
G.B. 390

1. என் மேய்ப்பர் யேசுகிறிஸ்துதான்
நான் தாழ்ச்சியடையேனே;

ஆட் கொண்டோர் சொந்தமான நான்
குறையடைகிலேனே.

2. ஜீவாற்றில் ஓடும் தண்ணீரால்
என் ஆத்ம தாகம் தீர்ப்பார்;
மெய் மன்னாவாம் தம் வார்த்தையால்
நல் மேய்ச்சல் எனக்கீவார்.

3. நான் பாதை விட்டு ஓடுங்கால்
அன்பாகத் தேடிப் பார்ப்பார்;
தோள்மீதில் ஏற்றிக் காப்பதால்
மகா சந்தோஷங் கொள்வார்.

4. சா நிழலில் பள்ளத்தாக்கிலே
நான் போக நேரிட்டாலும்,
உம் அன்பின் கோலைப் பற்றவே
அதே என் வழி காட்டும்.

5. இவ்வேழைக்கும் ஓர் பந்தியைப்
பகைஞர்கெதிர் வைத்தீர்;
உம்மாவியால் என் சிரசைத்
தைலாபிஷேகம் செய்வீர்.

6. என் ஆயுள் எல்லாம் என் பாத்ரம்
நிரம்பி வழிந்தோடும்;
ஜீவாற்றின் நீரால் என்னுள்ளம்
நிறைந்து பொங்கிப் பாயும்.

7. என் ஜீவ காலம் முற்றிலும்
கடாட்சம் பெற்று வாழ்வேன்;
கர்த்தாவின் வீட்டில் என்றைக்கும்
நான் தங்கி பூரிப்பாவேன்.

கிறிஸ்துவின் அன்பு
There is no like the love of Jesus

S.S. 42
G.B. 257

1. நல்மீட்பர் போல் வல்ல நேசர் உண்டோ?
உன்னத நேசம் பார்!
மெய் ஆறுதல் அடைந்து வாழ்ந்திட
நம்மை நடத்துவார்.

பல்லவி

மட்டில்லா, நீங்கிடா,
யேசுவின் அன்பைப் பார்;
அவ்வன்பின் பாதத்தை அண்டுவாய்
பாவி! வா என்கிறார்.

2. பேரன்பைக் காட்டின யேசு போல
பாவியின் நேசர் யார்?
நம் உள்ளத்தின் கவலை யாவையும்
அவர் கண்டறிவார்.

3. நல்நேசர் இயேசுவின் நேத்ரம் போல
பேரருள் கண் உண்டோ?
அக்கண்ணுக்கு மறைய முயன்றும்
அது கூடியதோ?

4. நல் மீட்பர் சத்தத்தைப் போலும் இல்லை
இனிய ஓசையும்
மா மதுரமாய்க் காதுக்கின்பமாய்
அது தொனித்திடும்.

5. அவ்விண்பச் சத்தம் அன்போடு கேட்டு
இணங்கிச் செல்லுவோம்.
பின்மோட்சத்தில் யேசுவின் மார்பினில்
சுக வாழ்வடைவோம்.

39

More about Jesus S.S. 571 G.B. 385

1. இயேசுவின் அன்பில் மூழ்கவும்
நேசத்தின் ஆழம் பார்க்கவும்
இன்னமும் தீரா வாஞ்சையே
என்னில் உண்டாகின்றதே.

பல்லவி

ஆட்கொண்டவர் நேசம்
ஈடேற்றின நேசம்
இன்னும் மேன்மேலும் வாஞ்சிப்பேன்;
உன்னத அன்பைப் போற்றுவேன்.

2. இயேசுவின் சொல்லும் சித்தமும்
ஆசையுள்ளோனாய் செய்யும்
தேவ ஒத்தாசை நம்புவேன்
ஆவியின் பேரில் சாருவேன்.

3. நாதரின் இன்ப சத்தமும்
வேதத்தில் கேட்டு நித்தமும்
ஆத்தும நன்மை நாடுவேன்;
நீதியின் பாதை செல்லுவேன்.

4. இயேசுவின் ராஜரீகமும்,
ஆசித்த மா செங்கோன்மையும்
விண்ணிலே தோன்றும் வண்ணமாய்,
மண்ணிலுண்டாகும் மேன்மையாய்.

40

Love divine, all loves excelling S.S. 242 G.B. 362

1. அன்பினரூபி மோட்சானந்தம்
பாரில் ஈய வந்தீரே;
எங்கள் ஏழை நெஞ்சில் வாசம்
பண்ணி மருள் தீர்ப்பீரே.

யேசுவே நீர் பரிதாபம்
அன்புமாய் இருக்கிறீர்;
பார துக்கங் கொண்ட உள்ளம்
வந்து தேற்றல் செய்குவீர்.

2. உமது நல் ஆவி தாரும்
எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மில் சார நீரே வாரும்
சுத்த நேச வடிவாய்;
பாவ ஆசை எல்லாம் நீக்கி
அடியாரை ரட்சியும்,
விசுவாசத்தைத் துவக்கி
முடிப்பவராய் இரும்.

3. சர்வ வல்லவரே, வாரும்
நாங்கள் உமதாலயம்;
எங்களுக்குத் தயை தாரும்
என்றும் விலகாதேயும்;
என்றும் உம்மை ஸ்தோத்திரித்து,
வானோர் போல சேவிப்போம்
குறைவற்ற அன்பைப் பெற்று
ஓழியாமல் துதிப்போம்.

4. நாங்கள் மோட்ச வீட்டில் சேர்ந்து
கறை திரை இன்றியே
உம்தன் சாயல் பெற்று வாழ்ந்து,
தேவ அன்பில் மூழ்கியே
எங்கள் க்ரீடம் உம்தன் பாதம்
வைத்துப் போற்றும் வரைக்கும்
நாதா, அடியாரை நித்தம்
மறு ரூபமாக்கிடும்.

41

I stand all bewildered

1. நான் பிரமித்து நின்று பேரன்பின்
பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்

என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்.

பல்லவி

மா தூய உதிரத்தால்
என் பாவம் நீங்கக் கண்டேன்;
யேசையரின் இரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்.

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் பிரயாசப்பட்டேன்;
வீண் முயற்சி நீங்கின போதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன்.

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
நீ சொஸ்தமாவாய் என்றனர்;
நான் அவரின் வஸ்திரம் தொட,
ஆரோக்கியம் அருளினார்.

4. எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரிலே வீசச் செய்வார்.

42

பாடு மரணம்

O Sacred head once wounded **S.S. 126**

1. இரத்தம் காயம் குத்தும்
நிறைந்த நிந்தைக்கே
முட்கீரித்தாலே சுற்றும்
குத்துண்ட சிரசே,
முன் திவ்ய மேன்மை கொண்ட
நீர் லச்சை காண்பதேன்?
ஐயோ! வதைந்து நொந்த
உம்முன் பணிகிறேன்.

2. நீர் பட்ட வாதை யாவும்
என் பாவப் பாரமே;
இத்தீங்கும் நோவும் சாவும்
என் குற்றம், கர்த்தரே!
இதோ என்றைக்கும் சாக
நான் பாத்திரன் ஆனேன்
ஆனாலும் நீர் அன்பாக
என்னைக் கண்ணோக்குமேன்.

3. நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி, நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காகத்
துதிப்பேன், யேசுவே.
நான் உம்மில் ஊன்றி நிற்கச்
சகாயராய் இரும்;
உம்மோடு நான் மரிக்கக்
கடாட்சித்தருளும்.

4. என் மூச்சொடுங்கும் அந்தக்
கடை இக்கட்டிலும்
இப்பாவிக்காய் இறந்த
உம்மையே காண்பியும்;
அப்போது என்னைச் சேர்த்து
உம் திவ்ய மார்பிலே
அணைத்துக்கொண்டு காத்து
ஈடேற்றும், யேசுவே.

43

All glory, laud and honour G.B. 39
7.6.7.6

ஓசன்னா பாலர் பாடும்
ராஜாவாம் மீட்பர்க்கே
மகிமை, புகழ், கீர்த்தி,
எல்லாம் உண்டாகவே

1. கர்த்தாவின் நாமத்திலே
வருங் கோமானே, நீர்
தாவீதின் ராஜ மைந்தன்,
துதிக்கப்படுவீர்.

2. உன்னத தூதர் சேனை
விண்ணில் புகழுவார்,
மாந்தர், படைப்பு யாவும்
இசைந்து போற்றுவார்.

3. உன் முன்னே குருத்தோலைக்
கொண்டேகினார் போலும்,
மன்றாட்டு, கீதம், ஸ்தோத்ரம்
கொண்டும்மைச் சேவிப்போம்.

4. நீர் பாடுபடுமுன்னே
பாடினார் யூதரும்;
உயர்த்தப்பட்ட உம்மைத்
துதிப்போம் நாங்களும்.

5. அப்பாட்டைக் கேட்ட வண்ணம்
எம் வேண்டல் கேளுமே;
நீர் நன்மையால் நிறைந்த
காருண்ய வேந்தரே.

44

Lo! He comes with clouds **S.S. 161**
G.B. 179

1. பாவிக்காய் மரித்த யேசு
மேகத்தில் இறங்குவார்
கோடி தூதர் அவரோடு
வந்து ஆரவாரிப்பார்:
அல்லேலூயா!
கர்த்தர் பூமி ஆளுவார்.

2. வெண்மையான ஆசனத்தில்
வீற்று வெளிப்படுவார்:
துன்புறுத்திச் சிலுவையில்
கொன்றோர் அவரைக் காண்பார்;
திகிலோடே
அவர் சத்தத்தைக் கேட்பார்.

3. அவர் தேகம் பட்ட காயம்
அன்றும் காணப்படுமே,
பக்தர்கள் மகிழ்ச்சியாயும்
நோக்குவார்கள் அப்போதே;
அவர் காயம்
தரும் நித்ய ரட்சிப்பை

4. உம்மை நித்த ராஜனாக
யாரும் போற்றச் செய்திடும்
ராஜரீகத்தை அன்பாக
ஏற்று ஆளும் என்றைக்கும்
ஆ, கர்த்தாவே
சீக்கிரம் வந்தருளும்.

45

1. வாழ்க, சிலுவையே, வாழ்க! 8.7.8.7
பாரமற்ற பாரமே,
உன்னை முழு மனதார
தோள் மேல் ஏற்றுக் கொள்வேன்.

2. உலகத்தின் ஜோதியான
யேசு தாமும் நிந்தைக்கே
ஏதுவாகி, ஈனமான
சிலுவையில் மாண்டாரே.

3. சிலுவை சுமந்தோராக
அவரைப் பின்பற்றுவோம்;
தீரங்கொண்டு வீரராக
துன்பம், நிந்தை சகிப்போம்.

4. சாகும்போது திறவுண்ட
வானத்தையும் அதிலே
மகிமையினால் சூழுண்ட
யேசுவையும் காண்போமே.

5. வாழ்க, சிலுவையே, வாழ்க!
மோட்சத்தின் முன் தூதனே,
நீதிமான்கள் இளைப்பாற
நேர் வழியாம் வாசலே.

46

Years I spent in vanity and pride

1. இயேசு மரித்தாரென்றெண்ணாமல்
வாழ்ந்தேன் பாவத்தின் மாய்கையிலே;
பெருமையின் குருட்டாடத்தால்,
கெட்டழிந்தேன்.

பல்லவி

கிருபை, இரக்கம், ஏராளம்
மன்னிப்பும் அங்கு எனக்குண்டு;
பாவம் நீங்கி ரட்சிப்படைந்தேன்,
கல்வாரியில்.

2. தேவ துரோகியான பாவிநான்
உடைந்து நொறுங்கியழுதேன்
வேத வாக்கியத்தின் வெளிச்சத்தால்,
கல்வாரி முன்.

3. கொடுத்தேன் என் சொந்தமனைத்தும்
ஏற்றேன் இயேசுவை என் ராஜனாய்;
களிப்புடன் கீதம் பாடுவேன்,
கல்வாரியை.

4. இரட்சிப்பின் திட்டத்தை வகுத்த
தேவ அன்பு மா பெரியது;
நானும் தேவனோடு ஒன்றானேன்,
கல்வாரியில்.

47

C.M.

1. கண்டீர்களோ சிலுவையில்
மரிக்கும் யேசுவை?
கண்டீர்களோ காயங்களில்
சொரியும் ரத்தத்தை?

2. "மன்னியும்," என்ற வேண்டலைக்
கேட்டீர்களே, ஐயோ!
"ஏன் கைவிட்டீர்," என்றார், அதை
மறக்கக் கூடுமா?

3. கண்மூடித் தலைசாயவே,
"முடிந்தது", என்றார்:
இவ்வாறு லோக மீட்பையே
அன்பாய் உண்டாக்கினார்.

4. அவ்வேண்டல் ஓலம் காயத்தால்
ஈடேற்றல் வந்ததே;
ஆ பாவி, இதை நோக்குங்கால்
உன் தோஷம் தீருமே.

5. சீர்கெட்டு மாண்டுபோகையில்
பார்த்தேன் என் மீட்பரை;
கண்டேன், கண்டேன், சிலுவையில்
மரிக்கும் யேசுவை!

48

உயிர்த்தெழுதல்

Jesus Christ is risen to-day G.B. 170

1. இன்று க்றிஸ்து எழுந்தார்
அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார்,
அல்லேலூயா!

சிலுவையில் மாண்டவர்
அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தனர்
அல்லேலூயா!

2. அவர் வெற்றி கூறுவோம்,
அல்லேலூயா!
ஸ்தோத்ரப் பாட்டு பாடுவோம்
அல்லேலூயா!
யேசு தாழ்ந் துயர்ந்தாரே
அல்லேலூயா!
வான ராஜா அவரே,
அல்லேலூயா!

3. பாடனுபவித்தவர்,
அல்லேலூயா!
ரட்சிப்புக்குக் காரணர்,
அல்லேலூயா!
விண்ணின் வேந்தன் ஆயினார்,
அல்லேலூயா!
தூதர்ப்பாட்டைக் கேட்கிறார்,
அல்லேலூயா!

49

G.B.175

1. சபையாரே, கூடிப்பாடி,
கர்த்தரை நாம் போற்றுவோம்
பூரிப்பாய் மகிழ் கொண்டாடிக்
களி கூரக்கடவோம்,
யேசு க்றிஸ்து
சாவை வென்று எழுந்தார்.

2. சிலுவையில் ஜீவன் விட்டுப்
பின்பு கல்லறையிலே
தாழ்மையாக வைக்கப்பட்டு

மூன்றாம் நாள் எழுந்தாரே.
லோக மீட்பர்
வெற்றி வேந்தர் ஆனாரே.

3. மீட்பரே, நீர் மாட்சியாக
ஜீவனோடெழுந்தால்
நாங்கள் நீதிமான்களாக
கர்த்தர் முன்னே நிற்பதால்,
என்றென்றைக்கும்
உமக்கே மா ஸ்தோத்திரம்!

4. சாவின் ஜெயம் ஜெயமல்ல:
தேகம் மண்ணாய்ப் போயினும்
எல்லாம் கீழ்ப்படுத்த வல்ல
கர்த்தர் அதை மீளவும்
ஜீவிப்பித்து
மறுரூபமாக்குவார்.

50

S.S. 376

Saviour, hasten Thine appearing

1. வாரும், யேசு நாதா, வாரும்;
பக்தர் காத்து நிற்கிறார்;
காடுபோன்ற லோகில், பாரும்
மோட்ச யாத்ரை செய்கிறார்;
உம்மைக் காண
ஆவல் கொண்டு செல்கின்றார்.

2. சர்வ சிருஷ்டி ஏகமாகக்
காத்துத் தவிக்கின்றதே!
மீட்பு தோன்ற ஆவலாக
எதிர் நோக்குகின்றதே;
நீர் வந்தாலோ
பூமி செழித்தோங்குமே.

3. லோகமெங்கும் துன்பப்பட்ட
யூதர் வந்து கூடுவார்,
காயமாகிக் குத்தப்பட்ட
திரு மேனி நோக்குவார்;
குணம் மாறி
உம்தன் தொண்டராகுவார்

4. வாரும், யேசு நாதா, வாரும்;
வானம் பூமி ஆளுவீர்;
உம்மை நம்பினோரெல்லாரும்
வாழ்வு காணச் செய்குவீர்;
பேரானந்தம்
தந்து பூரிப்பாக்குவீர்.

51

See the Conquering Hero 7.7.7.7.7.7.

1. களிகூரு சீயோனே,
ஓ மகிழ், எருசலேம்!
சமாதான கர்த்தராம்
உன் ராஜா வருகிறார்
களிகூரு சீயோனே,
ஓ மகிழ், எருசலேம்!

2. ஓசியன்னா! தாவீதின்
மைந்தனே நீர் வாழ்கவே!
உம்முடைய நித்திய
ராஜ்ஜியத்தை ஸ்தாபியும்,
ஓசியன்னா! தாவீதின்
மைந்தன் நீர் வாழ்கவே!

3. ஓசியன்னா, ராஜாவே!
வாழ்க, தெய்வ மைந்தனே!
சாந்தமுள்ள உமது
செங்கோல் என்றும் ஆளவும்!
ஓசியன்னா, ராஜாவே!
வாழ்க, தெய்வ மைந்தனே!

52

Sound of His Trumpet

1. எக்காள சத்தம் வானில் தொனிக்க
காண்போம் இயேசுவை எங்கள் முன்னே
பொறுமையுடன் காத்திருந்தோம் நாம்
பூவிலிருப்போர் தூங்கும் சிலர்.

பல்லவி

ஆத்ம மணாளன்! ஆத்ம மணாளன்
வாரும் நல் இயேசு வாழ்த்துகிறோம்
அல்லேலூயா என்ன சந்தோஷம்
பறந்தே போவோம் பாட்டுடன் நாம்

2. பக்தரை சேர்க்க கள்ளன் போல் வாரார்
சுத்தர் மட்டுமே மாறிடுவார்
வானில் தூதர்கள் ஒன்றாகக் கூடி
பாட்டுடன் எக்காளம் தொனிப்பார்

3. இமைப் பொழுதில் சுத்தர் எழுந்து
மறைந்தே போவார் இயேசுவுடன்
ஆ இன்பக் கூட்டம் மேகத்தில் கூடி
சந்திப்போம் சீக்கீரம் இயேசுவையே

4. விண்ணில் சுத்தர் கிரீடங்கள் பெற
விண்தூதர் காத்து நிற்கும் நாளில்
வெண்ணுடை பூண்டு மண வாட்டி சபை
மேன்மை பெறும் நாள் இதோ இதோ

5. அல்லேலூயா! ஆனந்தம் கொள்வோம்
அல்லேலூயா! நாம் ஆர்ப்பரிப்போம்
அல்லேலூயா! பாக்கியம் பெற்றோம்
அல்லேலூயா! ஆமென், ஆமென்.

53

பரிசுத்த ஆவியானவர்

8.7 8.7 4.7
S.S. 376

1. வாரும், தேவ ஆவி வாரும்,
எங்கள் ஆத்துமாத்திலே
எங்களுக்குயிரைத் தாரும்,
வாரும்; சுத்த ஆவியே!
ஞான தீபம்
ஸ்வாமி நீரே ஏற்றுமே!

2. எங்கள் நெஞ்சில் நல்ல புத்தி
தேவ பக்தி தோன்றவே
அதை நீர் குணப்படுத்தி
தப்பு சிந்தை யாவுமே
மாற்ற வாரும்
நல்ல தேவ ஆவியே

3. மோட்ச மார்க்கத்தில் எதிர்த்து
நிற்கும் எவ்விரோதமும்
நீங்க எங்களைத் தற்காத்து
நல்லோராக்கி அருளும்;
கால் தள்ளாடிப்
போகில், தாங்கி நடத்தும்.

4. நெஞ்சு எங்களில் கலங்கி
"நாயனே இரட்சியும்".
என்று கெஞ்சும்போதிரங்கி
ஆற்றித் தேற்றிக்கொண்டிரும்;
துன்பம் நீங்க
நீர் சகாயராய் இரும்.

54

Spirit Divine, attend our prayer

S.S. 191
G.B. 201

1. தேவாவி, மனவாசராய்
வந்தனல் மூட்டுவீர்;
உம் அடியாரின் உள்ளத்தில்
மா க்ரியை செய்குவீர்.

2. நீர் ஜோதிபோல் ப்ரகாசித்து
நிர்பந்த ஸ்திதியும்
என் கேடும்காட்டி ஜீவனாம்
மெய்ப்பாதை காண்பியும்.

3. நீர் வான அக்னி போலவே
துர் ஆசை சிந்தையும்
தீக் குணமும் சுட்டெரிப்பீர்
பொல்லாத செய்கையும்.

4. நற் பனிபோலும் இறங்கும்
இவ்வேற்ற நேரத்தில
செழிப்புண்டாகச் செய்திடும்
பாழான நிலத்தில்.

5. புறாவைப்போலச் சாந்தமாய்
நீர் செட்டை விரிப்பீர்
மெய்ச்சமாதானம் ஆறுதல்
நற் சீரும் அருள்வீர்.

6. நீர் பெருங் காற்றைப்போலவும்
வந்தசைத்தருளும்
கல் நெஞ்சை மாற்றிப் பேரன்பை
நன்குணரச் செய்யும்.

55

சத்திய வேதம்

Thou whose almighty word

S.S. 5
G.B. 618

1. ஆதியில் இருளை
அகற்றி ஒளியைப் படைத்த நீர்
வேதம் பரம்பவும்
லோகத்தார் யாவரும்
அவ்வொளி காணவும் அருள் செய்வீர்

2. கருணை, சத்தியம்,
தயவு, இரக்கம் நிறைந்த நீர்
பாவிக்கு ரட்சிப்பைப்,
பேதைக்கு ஞானத்தை
எல்லாருக்கும் ஒளியைக் கடாட்சிப்பீர்.

3. நித்திய ஆவியே!
சத்திய புறாவே! பூரணமாய்த்
தீமையை நீக்கவும்
நன்மையை நாட்டவும்
தாசரைத் தேற்றவும் வாரும் அன்பாய்.

4. ஞானமும் பெலனும்
சர்வ ஆனந்தமும் உள்ளவரே!
கடலைப் போலவும்
அறிவும் உண்மையும்
பரம்ப அருளும், த்ரியேகரே!

56

Sing them over again to me

S.S. 357
G.B. 262

1. காது குளிரப் பாடுங்கள்
கிருபா சத்தியம்
புத்திதெளியக் காட்டுங்கள்

திவ்விய வசனம்
வெல்க! சத்தியவேதம்,
வழ்க! நித்திய வேதம்.

பல்லவி

அமிர்தமே! அற்புதமே!
திவ்விய சத்தியம்
அமிர்தமே! அற்புதமே!
திவ்விய சத்தியம்.

2. நல்ல செய்தியைக் கூறுமேன்
கிருபா சத்தியம்
பாவநாசத்தைக் காட்டுமேன்
திவ்விய வசனம்.
வான வருஷமாரி
ஞான பொக்கிஷவாரி.

3. வேத நாயகர் பொழியும்
கிருபா சத்தியம்.
ஜீவ மங்கள மொழியும்
திவ்விய வசனம்.
யேசு! என்தனைப் பாரும்
நித்தம் என்தனைக் காரும்.

57

G.B. 47

Thou best of books

1. மா மேன்மை பெற்ற வேதமே!
உன் ஜோதி வீசுதே.
உன் வாக்கைக் கேட்போர் சிந்திப்போர்
மா இன்பம் காண்பாரே
ஓர் ஏற்ற வார்த்தை சொல்வாயே!
எத்தன்மையுள்ளோர்க்கும்,
ஆ! எல்லையில்லாச் செல்வமும்
உன்னாலே கிடைக்கும்.

2. மா கோபம் தப்ப ஓடிட
நீ புத்தி சொல்கிறார்.
க்ருசெடுத்துப் பின் செல்வோர்க்குப்
பேர் வாக்குக் கொடுத்தாய்-
“ஜீவாற்றில் பானம் பண்ணலாம்
மெய் வாஞ்சையுள்ளோரே!
மா சுத்தர் பாக்கியவான்காளாம்”
என்றருள்கின்றாயே.

3. உன் கண்டிப்பும் எச்சரிப்பும்
மா நன்மையானதே
மெய் வாஞ்சை ஜெபத்தோடதை
நான் ஏற்றுக்கொள்வேனே.
ஆ! மேன்மைப்பெற்ற வேதமே!
நிர்ப்பாக்கிய ராவோமே
உன் ஆறுதல் சந்தோஷமும்
மெய் வாழ்வும் இன்றியே.

58

சுவிசேஷ அழைப்பு

There is life for a look — **S.S. 123**
G.B. 250

1. யேசுநாதர் ஐங்காயத்தை நோக்கிப் பார்த்தால்
நித்ய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்:
பாவி! ப்ராணனைத் தந்துன்னை மீட்டவரை
நம்பி வந்து அண்ணாந்து பார்ப்பாய்.

பல்லவி

பார் பார்! நோக்கிப்பார்!
யேசு நாதர் ஐங்காயத்தை நோக்கியே பார்!
நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்.

2. பாவப் பாரத்தைப் தாங்கின ரட்சகரால்
உன்தன் குற்றங்கள் நீங்கினதே!
ஜீவநாயகர் சிந்தின ரத்தத்தினால்
பாவக்கடனும் தீர்ந்தாயிற்றே!

4 எந்தன் கிரியைகள் ஜெபங்கள் கண்ணீர்களும்
உன்னை ரட்சிக்கமாட்டாதே! பார்!
திரு ரத்தமே தஞ்சம் என்றோடிவந்தால்
வல்லமையீட்டாள் கடாட்சஞ் செய்வார்.

5 பிராயச்சித்தத்தின் கிரியைகள் முடிந்ததே
என்று ஆண்டவர் வாக்களித்தார்
சர்வ லோகத்தின் மீறுதல் பாவங்களைச்
சிலுவையில் நிவிர்த்தி செய்தார்.

6 பாவநாசகர் ஈயும் மா ரட்சிப்பையே
இந்த நேரமே பற்றிக்கொள்வாய்!
உன் நீதியாம் யேசுவின் புண்ணியத்தால்
பேரின்பம் பெற்றே வாழுவாய்.

59

Art thou weary art thou languid?

S.S. 401
G., 235

"துக்கபாரத்தால் இளைத்து
நொந்துபோனாயோ?
யேசு உன்னைத் தேற்றிக்கொள்வார்.
வாராயோ,?"

2 "அன்பின் ரூபகாரமாக
என்ன காண்பித்தார்?"
"அவர் பாதம் கை விலாவில்
காயம்பார்."

3 "அவர் சிரசதின் க்ரீடம்
செய்ததெதனால்?"
"ரத்தினம் பொன்னாலுமல்ல
முள்ளினால்."

4. “கண்டுபிடித் தண்டினாலும்
துன்பம் வருமே?”
“கஷ்டம், துக்கம், கண்ணீர் யாவும்
இம்மையே”

5. “அவரைப் பின்பற்றினோர்க்குத்
துன்பம் மாறுமே?”
“சாவின் கூறும் மாறிப்போகும்,
போதாதோ?

6. “பாவியேனை ஏற்றுக்கொள்ள
மாட்டேன் என்பாரோ?”
“விண் மண் ஒழிந்தாலும் உன்னைத்
தள்ளாரே”

7. போரில் வெற்றி சிறந்தோர்க்குக்
கதியா ஈவார்?”
தூதர் தீர்க்கர் தூயர் யாரும்
“ஆம்” என்பார்.

60

Sinners Jesus will receive — **S.S. 390**, **G.B. 192**

1. கெட்டுப்போன மாந்தரை
யேசு ஏற்றுக்கொள்ளுவார்.
பாவ ஆத்துமாக்களைக்
குணமாக்கி ரட்சிப்பார்.

பல்லவி

நல்ல செய்தி! கேளுமேன்!
யேசு ஏற்றுக்கொள்ளுவார்.
நம்பி வாரும்! வாருமேன்!
தள்ளிப்போடவே மாட்டார்!

2. "இளைப்பாறல் தருவேன்"
நம்பி வாரும்" என்கிறார்,
யாரானாலும் வாருமேன்!
பாவ பாரம் நீக்குவார்.

3. மாசில்லாத ரத்தத்தால்
சர்வ சுத்தமாக்குவார்
வல்ல தூய ஆவியால்
தீய ஸ்பாவம் மாற்றுவார்.

4. இந்த ஏற்ற நேரத்தில்
வந்து சேரக்கடவீர்
புண்ய நாதர் பாதத்தில்
மீட்பும் வாழ்வும் பெறுவீர்

61

St. Oswald

1. தெய்வ கிருபையைத் தேடி,
பாவி மனந் திருப்பு;
மீட்பர்தரும் ஈவை நாடித்
தூக்கம் விட்டெழுந்திரு.

2. வாசலானதோ இடுக்கம்,
தாழ்மையாகி உட்படு,
ஜீவ வழியோ நெருக்கம்,
லோக நேசத்தை விடு.

3. மாம்சம், லோகம், ஆசாபாசம்,
பாவம் யாவும் அகற்றி
யேசுவில் மெய் விசுவாசம்
வைத்து உன்னை ஒப்புவி.

4. கர்த்தர் உன்னைத் தயவாக
ஏற்றுக் கொண்ட பிறகு
ஜெபத்தோடு விழிப்பாக
அவரில் நிலைத்திரு.

5. ஜீவனுள்ள நாள் மட்டாக
மோசங்கள் இருப்பினும்
தேவ கரம் பலமாக
உன்னைக் காத்து நடத்தும்.

62

We have heard the Joyful sound

S.S. 1079
G.B. 620

1. நல்ல செய்தி! இயேசுவை
நோக்கிப்பார்! இரட்சிப்பார்!
நம்பி வந்து அவரை
நோக்கிப்பார்! இரட்சிப்பார்!
எந்தப் பாவியாயினும்
தள்ள மாட்டேன் என்கிறார்.
துரோகஞ் செய்தபோதிலும்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்!

2. எங்கும் செய்தி சொல்லுவோம்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்!
தேசா தேசம் கூறுவோம்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்!
எந்த நாடு தீவிலும்
இயேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசம் ஆகிலும்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்!

3. இன்னும் கேள்! மாநேசராம்
இயேசுவே காக்கிறார்
நம்பும் பத்தரையெல்லாம்
காக்கிறார்! காக்கிறார்!
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக் கொள்ளுவார்
கேடு பாடில்லாமலும்
காக்கிறார்! காக்கிறார்!

4. சுவிசேஷம் இதுவே!
காக்கிறார்! காக்கிறார்!
பாவம் நீக்கிப் பின்னுமே
காக்கிறார்! காக்கிறார்!
மோட்சம் சேருமளவும்
தாங்கிக்கொண்டே இருப்பார்
தீமையைச் செய்யாமலும்
காக்கிறார்! காக்கிறார்!

63

மனந்திரும்புதலும் பாவ அறிக்கயையும்

Just as I am, without one plea S.S. 473
G.B. 227

1. நான் பாவி தான், - ஆனாலும் நீர்
மாசற்ற ரத்தம் சிந்தினீர்
வா என்று என்னைக் கூப்பிட்டீர்;
என் மீட்பரே, வந்தேன்.

2. நான் பாவி தான், - என் நெஞ்சிலே
கறை பிடித்திருக்குதே;
என் கறை நீங்க, இப்போதே
என் மீட்பரே, வந்தேன்.

3. நான் பாவி தான், - பயத்தினால்
அலைந்து, பாவ பாரத்தால்
அழிந்து, மாண்டுபோவதால்
என் மீட்பரே, - வந்தேன்.

4. நான் பாவிதான். - மெய்யாயினும்
சீர் நேர்மை செல்வம் மோட்சமும்
உம்மாலே பெற்று வாழவும்,
என் மீட்பரே, வந்தேன்.

5. நான் பாவிதான், - இறங்குவீர்
அணைத்துக் காத்து ரடசிப்பீர்

அருளாம் செல்வம் அளிப்பீர்;
என் மீட்பரே வந்தேன்.

6. நான் பாவிதான், - அன்பாக நீர்
நீங்கா தடைகள் நீக்கினீர்,
உமக்குச் சொந்தம் ஆக்கினீர்
என் மீட்பரே, வந்தேன்.

64

I hear Thy welcome voice S.S. 475
G.B. 240

1. வா! நீசப் பாவி! வா,
என்றென்னைக் கூப்பிட்டீர்;
என் தோஷம் தீர ரட்சகா!
சுத்தாங்கம் பண்ணுவீர்.

பல்லவி

அருள் நாயகா!
நம்பி வந்தேனே
தூய திரு ரத்தத்தால்
சுத்தாங்கம் பண்ணுமேன்

2. சீர் கெட்ட பாவி நான்
என் நீதி கந்தையே
என்றாலும் உமதருளால்
துர்க்குணம் மாறுமே.

3. மெய்ப் பக்தி பூரணம்
தேவாவியா லுண்டாம்.
உள்ளான சமாதானமும்
நற்சீரும் பெறலாம்.

4. உண்டான நன்மையை
நீர் விர்த்தியாக்குவீர்
இப்பாவகுணத் தன்மையை
நிக்ரகம் பண்ணுவீர்.

5. ஆ! தூய ரத்தமே!
ஆ! அருள் நாயகா!
ஆ! கிருபா விசேஷமே!
ஆ! லோக ரட்சகா!

65

What can wash away my stain

S.S. 874
G.B. 146

1. என்பாவத்தை நீக்கிட
யேசுவின் ரத்தம் தானே;
என் உள்ளத்தை மாற்றிட
யேசுவின் ரத்தம் தானே.

பல்லவி

மெய்யாம் ஜீவ நதி
பாவம் போக்கும் நதி,
வேறே நதியை அறியேன்;
யேசுவின் ரத்தம் தானே.

2. என்னைச் சுத்திகரிக்க
யேசுவின் ரத்தம் தானே;
மன்னிப்பு நான் பெற்றிட
யேசுவின் ரத்தம் தானே.

3. ரட்சிப்பு வேறே இல்லை,
யேசுவின் ரத்தம் தானே;
புண்ணியத்தாலே பலனில்லை,
யேசுவின் ரத்தம் தானே.

4. என் ஆறுதலின் பலன்,
யேசுவின் ரத்தம் தானே,
நான் நன்மை செய்யப் பலன்
யேசுவின் ரத்தம் தானே.

66

There is a fountain S.S. 129
G.B. 148

1. இம்மானுவேலின் ரத்தத்தால்
நிறைந்த ஊற்றுண்டே;
எப்பாவத் தீங்கும் அதனால்
நிவிர்த்தியாகுமே

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்;
மன்னிப்பும் மோட்சானந்தமும்
அடைந்து பூரித்தான்.

3. அவ்வாறே நானும் யேசுவால்
விமோசனம் பெற்றேன்;
என் பாவம் நீங்கிப் போனதால்
ஓயாமல் பாடுவேன்.

4. காயத்தில் ஓடும் ரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் ப்ரஸ்தாபிப்பேன்.

5. விண் வீட்டில் வல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்;
என்தனை மீட்ட நேசத்தைச்
கொண்டாடிப் போற்றுவேன்.

67

ரட்சிப்பின் நிச்சயம்

Blessed assurance, Jesus is mine S.S. 873
G.B. 279

1. யேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்,
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்,

தேவகுமாரன் ரட்சைக் செய்தார்;
பாவியாம் என்னை ஏற்றுக்கொண்டார்.

பல்லவி

யேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்;
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்,
நீடுழி காலம் ஸ்தோத்திரிப்பேன்.

2. அன்பு பாராட்டிக் காப்பவராய்
எந்தனைத் தாங்கிப் பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்;
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்.

3. மெய்ச் சமாதானம் ரம்மியமும்
தூய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்துவிட்டார்;
விண்ணிலும் சேர்த்து வாழச்செய்தார்.

68

Loved with everlasting love

S.S. 386
G.B. 852

1. ஒப்பில்லாத ஸ்நேகத்தால்
என்னை நேசித்தே வந்தார்;
ஆவியின் பேரொளியால்
இதைத் தெளிவாக்கினார்;
சமாதானம் நிறைவாய்
வெள்ளம்போலத் தந்தனர்;
பிரியாச் சம்பந்தமாய்
என்னைச் சேர்த்துக்கொண்டனர்
பிரியாச் சம்பந்தமாய்
என்னைச் சேர்த்துக்கொண்டனர்.

2. திவ்ய சுகவாரியில்
இன்பமாக மூழ்குவேன்.

நீலாகாயம் புவியில்
நவக்காட்சி காண்கிறேன்
நித்தம் களிகூருவேன்
யேசுவில், ஆனந்தமாய்
அவர் அன்பில் நிலைப்பேன்
பிாயாச் சம்பந்தமாய்.

அவர் அன்பில் நிலைப்பேன்
பிரியாச் சம்பந்தமாய்.

3. க்லேசம் துன்பம், திகிலால்,
இனிமேல் நான் கலங்கேன்.
இழுப்புண்டு யேசுவால்,
திவ்ய மார்பில் சாய்கிறேன்.
தம்மோடென்றும் சுகமாய்த்
தங்க, அருள்புரிவார்.
பிரியாச் சம்பந்தமாய்
என்னைச் சேர்த்து அணைத்தார்.

பிரியாச் சம்பந்தமாய்
என்னைச் சேர்த்து அணைத்தார்

4. பிரியாத வண்ணமாய்
அவர் சொந்தமாயினேன்.
இளைப்பாறி இன்பமாய்ப்
பரவசம் அடைந்தேன்,
வானம் பூமி நீங்கினும்,
மீட்பர் என்னைக் கைவிடார்.
ஸ்திரமாய், எக்காலமும்
என்னைப் பாதுகாக்கிறார்.

ஸ்திரமாய், எக்காலமும்,
என்னைப் பாதுக்காகிறார்.

69

O happy day

S.S. 866
G.B. 369

1. என் பாவம் தீர்ந்த நாளையே
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்;
அந்நாளில் பெற்ற ஈவையே
சந்தோஷமாய்க் கொண்டாடுவேன்.

பல்லவி

இன்ப நாள்; இன்ப நாள்;
பொல்லார் நயங்காட்டினும்
சற்றேனும் இணங்கோம்.

4. வல்ல தேவ ஆவியால்
வெற்றி சிறப்போம்
லோகம் பாவம் அவரால்
மேற்கொண்டு ஜெயிப்போம்.

104

Yield not to temptation G.B. 498
SS 698

1. தீவினை செய்யாதே மா சோதனையில்
பொல்லாங்கனை வென்று போராட்டத்தினில்;
வீண் ஆசையை முற்றும் கீழடக்குவாய்
யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்.

பல்லவி

ஆற்றித் தேற்றியே காப்பார்
நித்தம் உதவி செய்வார்
மீட்பர் பெலனை ஈவார்
ஜெயம் தந்திடுவார்

2. வீண் வார்த்தைப் பேசாமல் வீண் தோழரையும்
சேராமலே நீங்கி, நல்வழியிலும்
நின் றூக்கமும் அன்பும் சற்றேனும் விடாய்
யேசையரை நம்பி வென்றேகிப்போவாய்.

3. மெய்விஸ்வாசத்தாலே வென்றேகினோன்தான்
பொற்கிரீடம் பெற்றென்றும் பேர் வாழ்வடைவான்.
மா நேசரின் பெலன் சார்ந்தே செல்லுவாய்
யேசையரை நம்பி வென்றேகிப் போவாய்.

105

Stand up stand up for Jesus S.S. 68
G.B. 50

1. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
ரட்சண்ய வீரரே!
ராஜாவின் கொடி ஏற்றிப்
போராட்டம் பண்ணுமே,
சேனாதிபதி யேசு
மாற்றாரை மேற்கொள்வார்.
பின் வெற்றிக் கிரீடஞ் சூடிச்
செங்கோலும் ஓச்சுவார்.

2. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
எக்காளம் ஊதுங்கால்
போர்க்கோலத்தோடு சென்று
மெய் விசுவாசத்தால்
அஞ்சாமல் ஆண்மையோடே
போராடி வாருமேன்
பிசாசின் திரள் சேனை
நீர் வீழ்த்தி வெல்லுமேன்.

3. நல் மீட்பர் பட்சம் நில்லும்
எவ்வீர, சூரமும்
நம்பாமல் திவ்ய சக்தி

பெற்றே ப்ரயோகியும்
சர்வாயுதத்தை ஈயும்
கர்த்தாவைச் சாருவீர்
எம்மோசமும் பாராமல்
முன்தண்டில் செல்லுவீர்.

4. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
போராட்டம் ஓயுமே!
வெம்போரின் கோஷ்டம் வெற்றிப்
பாட்டாக மாறுமே.
மேற்கொள்ளும் வீரர் ஜீவ
பொற்கிரீடஞ் சூட்டுவார்,
விண்லோக நாதரோடே
வீற்றரசாளுவார்.

106

Sound the battle cry

S.S. 703
G.B. 527

1. வீர தீரமாய் நேரும் சீருமாய்
நின்று ஏகமாய்ப் போர் செய்வோம்;
பயமின்றியும் பின் வாங்காமலும்
கீதம் பாடியும், முன் செல்லுவோம்.

பல்லவி

சோம்பும் சோர்வும் நீக்கி, வீரராக
யாரும், வாரும்! யுத்தம் பண்ணுவோம்
செல்லும்! வெல்லும்! ஆரவாரமாக
யேசுநாதர் நம்பிப் போகிறோம்.

2. கொடி ஏற்றுவோம் காளம் ஊதுவோம்,
வாளும் வீசுவோம் போர்க் கோலமாய்;
கர்த்தர் தாங்குவார் கூடப் போகிறார்;
வெற்றி சிறப்பார் கெம்பீரமாய்.

சேனைக் கர்த்தரே! யேசு நாதரே
தேவரீரையே ஸ்தோத்திரிப்போம்;
உம்மால் வல்லமை உம்மால் மகிமை,
உம்மால் வெற்றியும் கண்டடைவோம்.

107

Onward, christian soldiers

S.S. 706
G.B. 525

1\. யுத்தம் செய்வோம், வாரும் கிறிஸ்து வீரரே;
யேசு சேனை கர்த்தர் பின்னே செல்வோமே
வெற்றி வேந்தராக முன்னே போகிறார்
ஜெயக் கொடியேற்றிப் போர் நடத்துவார்

பல்லவி

யுத்தம் செய்வோம் வாரும்
கிறிஸ்து வீரரே!
யேசு சேனை கர்த்தர்
பின்னே செல்வோமே!

2\. கிறிஸ்து வீரர்காள், நீர் வெல்ல முயலும்
பின்னிடாமல் நின்று ஆரவாரியும்!
சாத்தான் கூட்டம் அந்தத் தொனிக்கதிரும்
நரகாஸ்திவாரம் அஞ்சி அசையும்!

3\. கிறிஸ்து சபை வல்ல சேனை போன்றதாம்
சுத்தர் சென்ற பாதை செல்கின்றோமே நாம்;
கிறிஸ்து தாசர் யாரும் ஓர் சரீரமே;
விசுவாசம் அன்பு, நம்பிக்கை ஒன்றே.

4\. கிரீடம் ராஜ மேன்மை யாவும் சிதையும்
கிறிஸ்து சபைதானே என்றும் நிலைக்கும்
நரகத்தின் வாசல் ஜெயம் கொள்ளாதே".
என்ற திவ்ய வாக்கு வீணாய்ப் போகாதே.

5. பக்தரே, ஒன்றாகக் கூட்டங் கூடுமேன்
எங்களோடு சேர்ந்து ஆர்ப்பரியுமேன்!
விண்ணோர் மண்ணோர் கூட்டம் யேசு ராயர்க்கே
கீர்த்தி புகழ், மேன்மை என்றும் பாடுமே.

108

There's a royal banner S.S. 675
G.B. 533

1. ஜெய ராஜ கொடி ஏற்றிக்காட்டியே
யுத்தஞ் செய்யக் செல்லுவோம்
வெற்றி மாலைசூடி ஜெயம் பெறவே
பூரிப்போடு பாடுவோம்.

பல்லவி

செல்லுவோம் வெல்லுவோம்
நல் மீட்பர் நாமம் மூலமாய்
வெற்றி சிறப்பார், ஆளுவார்,
பூமி எங்கும் ஜோதியாய்

2. எதிர்ச்சேனை சீறிப் பாய்ந்து வரினும்
ராஜகொடி காட்டுவோம்!
திரள் கூட்டமே போராட்டஞ் செய்யினும்
வெற்றி வேந்தராகுவோம்.

3. எந்தத்தேச ஜாதி பாஷைக்காரரும்
சுவிஷேங் கேட்பதால்
யேசு நாதர் மாண்பாய் ஆளும் காலமும்
மா சமீபமானதால்.

4. அந்த நல்ல காலம் வந்தவுடனே
ராஜரீகம் பண்ணுவார்
அவபக்தி யாவும் ஒழித்திடவே
நீதி முறை நாட்டுவார்.

109

The Son of God goes forth to war S.S. 695
G.B. 545

1. விண் க்ரீடம் பெறப் போருக்குக்
கிறிஸ்தேசு செல்கின்றார்
அவரின் வெற்றிக் கொடிக்குக்
கீழாகப் போவோன் யார்?
தன் துக்கப் பாத்ரம் குடித்துச்
சோராமல் நிற்போன் யார்?
தன் சிலுவையை எடுத்து
அவர் பின் செல்வோன் யார்?

2. முதலாம் இரத்தச் சாட்சியாய்
மரித்தோன் வானத்தில்
கர்த்தாவை விசுவாசமாய்க்
கண்ணோக்கித் துன்பத்தில்
கொலைஞர்க்காக வேண்டிடச்
சண்டாளரால் மாணடான்;
பகைஞர்க்காக ஜெபிக்க
யார் அவன் பின் செல்வான்?

3. தேவர்வி வந்து தங்கின
ஈராறு சீஷர்கள்
மகத்வமாய் விளங்கின
நம்பிக்கையுள்ளோர்கள்
தீ, துன்பம், வாளைச் சகித்தே
சிங்கத்தால் பீறுண்டார்;
மரிக்கவும் அஞ்சாமலே
அவர்போல் செல்வோர் யார்?

4. சிறந்த சேனா வீரராய்க்
கெம்பீரக் கூட்டத்தார்
சிங்காசனத்தைச் சூழ்ந்தோராய்க்
கொண்டாடி நிற்கிறார்

எப்பாடும் நீங்கி மோட்சத்தைச்
சேர்ந்தார் போல் நாங்களும்
உம்மண்டை சேர அருளைத்
தேவா, கடாட்சியும்.

110

ஜெபம்

S.S. 873

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச்செய்வீர்.

பல்லவி

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்.

2. ஊக்கத்துடனே ஓர் மனமாய்
வாக்குத் தத்தத்தைப் பற்றிப் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்யும்.

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்ளும்.

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம்.

111

Sweet hour of prayer

S.S. 318

1. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!
அப்போதென் துக்கம் மறப்பேன்

பிதாவின் பாதம் பணிவேன்
என் ஆசை யாவும் சொல்லுவேன்.
என் நோவு வேளை தேற்றினார்
என் ஆத்ம பாரம் நீக்கினார்
ஒத்தாசைப் பெற்றுத் தேறினேன்
பிசாசை வென்று ஜெயித்தேன்.

2. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!
மா தாழ்மையோடு ப்ரார்த்திப்பேன்!
மன்றாட்டைக் கேட்போர் வருவார்
பேர் ஆசீர்வாதம் தருவார்.
என் வாக்கின்மேல் விஸ்வாசமாய்
என் பாதம் தேடு ஊக்கமாய்
என்றோர்க்கென் நோவைச் சொல்லுவேன்
இவ்வேளையை நான் வாஞ்சிப்பேன்.

3. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!
ஆனந்தக் களிப்படைவேன்.
பிஸ்காவின் மேலே ஏறுவேன்
என் மோட்ச வீட்டை நோக்குவேன்.
இத்தேகத்தை விட்டேகுவேன்
விண் நித்திய வாழ்வைப் பெறுவேன்.
பேரின்ப வீட்டில் வசிப்பேன்
வாடாத க்ரீடம் சூடுவேன்.

112

Revive thy work, O Lord **S.S. 309**
G.B. 441

1. கர்த்தாவே! இறங்கும்!
ப்ரசன்னமாகுமேன்
மெய்ப்பக்தர் நெஞ்சில் இப்பவும்
வந்தனல் மூட்டுமேன்.

பல்லவி

கர்த்தாவே! இறங்கும்!
நற்சீரைத் தாருமேன்;
மாவல்ல க்ரியை செய்யவும்
இந்நேரம் வாருமேன்.

2. கர்த்தாவே! இறங்கும்!
நல்மீட்பர் நாமமும்
மா 'சுடர்போல் ப்ரகாசிக்கப்
பேரன்பைக் காட்டவும்.

3. கர்த்தாவே! இறங்கும்!
இவ்வருள் வேதத்தைக்
கேட்போரின் நெஞ்சில் பொழியும்
தேவாநுக்ரகத்தை.

4. கர்த்தாவே! இறங்கும்!
பேர் நன்மை செய்யுமேன்
விண்மாரி பெய்ய மேன்மையும்
உண்டாகும் உமக்கே.

113

Pass me not, O gentle Saviour S.S. 488
G.B. 245

1. யேசு ஸ்வாமி அருள் நாதா!
கெஞ்சிக் கேட்கிறேன்;
பாவியேனைக் கைவிடாமல்
சேர்த்துக் கொள்ளுமேன்.

பல்லவி

யேசு ஸ்வாமி!
கெஞ்சிக் கேட்கிறேன்,
பாவியேனைக் கைவிடாமல்
சேர்த்துக் கொள்ளுமேன்.

2. கெஞ்சினோர் அநேகர் பேரில்
தயை காட்டினீர்
எந்த நீசன் அண்டினாலும்
தள்ளவே மாட்டீர்

3. தீய குணம் க்ரியை யாவும்
முற்றும் வெறுத்தேன்
நீரே தஞ்சமென்று நம்பி
வந்து நிற்கிறேன்.

4. தூய ரத்தத்தாலே என்னைச்
சுத்தமாக்குவீர்
வல்ல ஆவியால் எந்நாளும்
காத்து ஆளுவீர்.

114

Thou Shepherd of Israel

1. என் ஆத்தும நேச மேய்ப்பரே
என் உள்ளத்தின் ஆனந்தமே!
இன்னும் உம்மைக் கிட்டிச் சேர நான்,
வாஞ்சையோடு சமீபிக்கிறேன்.

பல்லவி

பேசும்! பேசும்! ஜெபம் செய்யும் போது
ஆண்டவா! பரியமானதை
இப்போ காட்டும், செய்ய ஆயத்தம்!

2. மெய் மீட்பரைக் கீழ்ப்படிவோர்
தம் ஆத்மத்தைக் தேற்றும் இடம்
அடியேனும் பெற அருள்வீர்
அப்பனே விண்ணப்பம் கேட்டிடும்!

3. பாவிகட்கு உமது அன்பை
என் நடையால் காட்டச் செய்யும்;
கல்வாரி ஆவியால் உள்ளத்தைப்
போரில் வெல்ல அபிஷேகியும்!

4. என் ஜீவிய நாட்களெல்லாம்
நீர் சென்ற பாதையே செல்வேன்;
ஆசித்துத் தாறேன் எனதெல்லாம்
மீட்பரே! வல்லமை தந்திடும்!

115

God is here S.S. 307
G.B. 83

1. ஆண்டவா! பிரசன்னமாகி
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்
ஆசை காட்டும் தாசன் மீதில்
ஆசீர்வாதம் ஊற்றிடும்.

பல்லவி

அருள்மாரி எங்கள்பேரில்
வருஷிக்கப் பண்ணுவீர்
ஆசையோடு நிற்கிறோமே,
ஆசீர்வாதம் ஊற்றுவீர்.

2. தேவரீரின் பாதத்தண்டை
ஆவலோடே கூடினோம்
உந்தன் திவ்விய அபிஷேகம்
நம்பி நாடி அண்டினோம்.

3. ஆண்டவா! மெய்பக்தர் செய்யும்
வேண்டுகோளைக் கேட்கிறீர்
அன்பின் ஸ்வாலை எங்கள் நெஞ்சில்
இன்று மூட்டி நிற்கிறீர்.

4. தாசர் தேடும் அபிஷேகம்
யேசுவே கடாட்சியும்;
பெந்தெகொஸ்தே திவ்விய ஈவைத்
தந்து ஆசீர்வதியும்.

116

கர்த்தரின் பந்தி

1. முற்றிலும் அழகானவர் எல்லாரிலும் மாசிறந்தோர்,
தேவாதி தேவனானவர் நேசக் கல்வாரி நாயகா,

பல்லவி

கல்வாரி நாயகா! என் உள்ளம் ஆட்கொணடீர்
என்னை மீட்க மரித்தீர் கல்வாரி நாயகா!

2. காயப்பட்டு நொறுங்குண்டு, பாவம் துக்கம் சுமந்தோராய்
நீசச் சிலுவையில் மாண்டார் துக்க கல்வாரி நாயகா.

3. ஜீவன், சமாதானம் ஈய சிறையுற்றோரின் மீட்புக்காய்
இரத்தமாம் ஊற்றைத் திறந்தார், இரக்கக் கல்வாரிநாயகா

4. நமக்காய்ப் பெற்ற வரங்கள் சுத்தாங்கம் யாவும் நல்கிட
அன்பதாம் வெள்ளம் ஊற்றினீர், தயாளக் கல்வாரி நாயகா

5. உம்மை மகிமை மயமாய் கண்டு களிப்பேன் என்பதே
இவ்வுலகில் என் ஆறுதல் ஒப்பற்ற கல்வாரி நாயகா.

6. கண்ணாடிக் கடல் ஓரமாய், சேர்ந்து நின் அன்பில் மூழ்கியே
உம்மைப் போல் என்றும் இருப்பேன், மகிமைக் கல்வாரி
நாயகா

சுவிசேஷ ஊழியம்

117

Rescue the perishing

S.S. 814
G.B. 433

1. கெட்டோனை ரட்சியும், சாவோனைக் காரும்
பாபமும் சாபமும் நீங்கச் செய்யும்
சோர்வோனைத் தாங்கிடும் வீழ்ந்தோனைத் தூக்கும்
சுப விசேஷத்தை அறிவியும்.

பல்லவி

கெட்டோனை ரட்சியும், சாவோனை காரும்
யேசு தயாபரர் யேசு வல்லோர்.

2. பாவ சண்டாளரைப் பொறுமையோடு
திருத்தி ரட்சிக்கப் பார்க்கிறாரே
மெய் மனஸ்தாபமாய் நம்பிக்கையோடு
வந்தடைந்தால் அவர் மன்னிப்பாரே.

3. தீக்குண நெஞ்சிலும், குன்றிப்போனாலும்,
மோட்சத்தை நாடும் நல்லாசையுண்டாம்;
அன்பின் விசேஷத்தால் சத்தியத்தாலும்
குன்றிய வாஞ்சையும் மேலிடுமாம்.

4. கெட்டோனை ரட்சியும் ஆத்திரத்தோடு,
ஆவியின் வல்லமை அருளுவார்;
ரட்சிப்பைக் கூறவும் உருக்கத்தோடு
தேவாசீர்வாதமும் தந்திடுவார்.

118

Jesus shall reign — **S.S. 1084**
G.B. 625

1. பகலோன் கதிர்போலுமே
யேசுவின் ராஜரீகமே
பூலோகத்தில் வியாபிக்கும்
நீடுழி, காலம் வர்த்திக்கும்.

2. பற்பல ஜாதி தேசத்தார்
அற்புத அன்பைப் போற்றுவார்;
பாலரும் இன்ப ஓசையாய்
ஆராதிப்பார் சந்தோஷமாய்.

3. நன்மீட்பர் ராஜ்யம் எங்குமே
சிரேஷ்ட பாக்யம் தங்குமே!
துன்புற்றோர் ஆறித்தேறுவார்
திக்கற்றோர் வாழ்ந்து பூரிப்பார்.

4. பூலோக மாந்தர் யாவரும்
வானோரின் சேனைத் திரளும்
சாஷ்டாங்கம் செய்து போற்றுவார்
"நீர் வாழ்க, ராயனே!" என்பார்.

119

Sowing in the morning S.S. 757
G.B. 438

1. சத்ய வேதமான விதை காலை மாலை
விதைப்போம் எப்போதும் ஓய்வில்லாமலே
அறுப்பின் நற்காலம் எதிர் நோக்குவோமே;
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே.

பல்லவி

அரிக்கட்டோடே
அரிக்கட்டோடே
சேருவோம் எல்லோரும்
அரிக்கட்டோடே

2. மழையடித்தாலும் வெயிலெரித்தாலும்
குளிர்ச்சியானாலும், வேலைசெய்வோமே
நல்ல பலன் காண்போம்; துன்பம்மாறிப்போகும்
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே.

3. கவலை, விசாரம், கஷ்ட நஷ்டத்தோடும்
விதைத்தாலும் வேலை விடமாட்டோமே
இளைப்பாறக் கர்த்தர் நம்மை வாழ்த்திச் சேர்ப்பார்
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே.

120

When all Thy mercies S.S. 515

1. நீர் தந்த நன்மை யாவையும்
நினைத்து தேவனே,
மகிழ்ச்சியோடு என்றைக்கும்
நான் துதி செய்வேனே.

2. குழந்தைப் பருவம் முதல்
குறைவில்லாமலே
எனக்களித்த நன்மைகள்
ஏராளமானதே.

3. என்னோடு வாலிபத்திலும்
இருந்தீர் தேவரீர்,
இக்கட்டுண்டான காலத்தும்
விழாமல் தாங்கினீர்.

4. அநேகமான தீமைகள்
அண்டாமல் தடுத்தீர்
கைம்மாறில்லாத நன்மைகள்
கர்த்தாவே பொழிந்தீர்.

5. இம்மையில் என்றும் தாழ்மையாய்
தேவன்பை நினைப்பேன்
மறுமையில் வணக்கமாய்
உம்மையே போற்றுவேன்.

6. புகழ்ச்சி, துதி, தோத்திரம்,
ஒன்றான உமக்கே
இகத்திலும், பரத்திலும்,
எழும்பத் தகுமே.

121

புது வருடம்

G.B. 136

Safely through another year

1. இன்னோர் ஆண்டு முற்றுமாய்
எங்களை மகா அன்பாய்க்
காத்து வந்தீர் யேசுவே;
உம்மைத்துதி செய்வோமே.

2. நீரே இந்த ஆண்டிலும்
எங்கள் துணையாயிரும்;
எந்தத் துன்பம் தாழ்விலும்
கூடத் தங்கியருளும்.

3. யாரேனும் இவ்வாண்டினில்
சாவின் பள்ளத்தாக்கினில்
செல்லின், உம்தன் கோலாலே
தேற்றும், நல்ல மேய்ப்பரே.

4. நாங்கள் உந்தன் தாசராய்த்,
தூய்மை பக்தி உள்ளோராய்ச்
சாமட்டும் நிலைக்க நீர்
காத்துக் கிரீடம் ஈகுவீர்.

5. ஏக கர்த்தராம் நீரே
மன்னர் மன்னன் எனவே
என்றும் உம்மைப் போற்றுவோம்
உந்தன் வீட்டில் வாழுவோம்.

122

திருமணம்

O perfect love **11.10.11.10**

1. புத்திக்கெட்டாத அன்பின்வாரி. பாரும்;
உம் பாதம் அண்டினோமே தேவரீர்;
விவாகத்தால் இணைக்கும் இரு பேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்.

2. ஆ ஜீவ ஊற்றே, இவரில் உம் நேசம்,
நல் நம்பிக்கையும் நோவு சாவிலும்,
உம்பேரில் சாரும் ஊக்க விசுவாசம்
குன்றாத தீரமும் தந்தருளும்.

3. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி,
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்;
வாழ்நாளின் ஈற்றில் மோட்ச கரையேற்றி
நிறைந்த ஜீவன், அன்பும் நல்குவீர்

123

The voice that breathed o'er Eden G.B. 459

1. ஏதேனில் ஆதி மனம்
   உண்டான நாளிலே
   பிறந்த ஆசீர்வாதம்
   மாறாதிருக்குமே.

2. இப்போதும் பக்தியுள்ளோர்
   விவாகம் தூய்மையாம்;
   மூவர் ப்ரசன்னமாவார்,
   மும்முறை வாழ்த்துண்டாம்.

3. ஆதாமுக்கு ஏவாளைக்
   கொடுத்த பிதாவே!
   இம்மாப்பிள்ளைக்கிப் பெண்ணைக்
   கொடுக்க வாருமே.

4. இரு தன்மையும் சேர்ந்த
   கன்னியின் மைந்தனே!
   இவர்கள் இரு கையும்
   இணைக்க வாருமே.

5. மெய் மணவாளனான
   தேவ குமாரர்க்கே
   சபையாம் மனையாளை
   ஜோடிக்கும் ஆவியே!

6. நீரும் இந்நாளில் வந்து
   இவ்விரு பேரையும்
   இணைத்து, அன்பாய் வாழ்த்தி
   மெய்ப் பாக்யம் ஈந்திடும்.

124

துன்ப காலம்
Jesus lover of my soul.

S.S. 227
G.B. 361

1. என்தன் ஆத்ம நேசரே
வெள்ளம் போன்ற துன்பத்தில்,
தாசன் திக்கில்லாமலே
தடுமாறிப் போகையில்,
தஞ்சம் தந்து, யேசுவே,
திவ்ய மார்பில் காருமேன்;
அப்பால் கரையேற்றியே
மோட்ச வீட்டில் சேருமேன்.

2. வல்ல தேவரீர் அல்லால்
வேறே தஞ்சம் இன்றியே;
கைவிடாமல் நேசத்தால்
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்.
நீரே என்தன் நம்பிக்கை,
நீர் சகாயம் செய்குவீர்;
ஏதுமற்ற ஏழையைச்
செட்டையாலே மூடுவீர்.

3. குறை யாவும் நீக்கிட
நாதா, நீர் சம்பூரணர்;
திக்கற்றோரைத் தாங்கிட
நீரே மா தயாபரர்;
நான் அசுத்தப் பாவிதான்,
நீரே சுத்தர், சுத்தரே;
நான் அநீதி கேடுள்ளான்,
நீர் நிறைந்த நித்யரே.

4. பாவம் யாவும் மன்னிக்க
ஆரருள் அமைந்த நீர்
என்னைச் சுத்திகரிக்க

அருள் பாயச் செய்குவீர்.
ஜீவ ஊற்றாம் யேசுவே,
என்தன் தாகம் தீருமேன்;
ஸ்வாமி, என்றும் என்னிலே
நீர் சுரந்து ஊறுமேன்.

125

S.S. 652
G.B. 333

Like a river glorious

1. பேராற்றுக் கொப்பாகப் பேரின்பமுண்டாம்
சகலத்தின் மேலும் ஜெயங் கொள்ளுமாம்
நிறைந்து, எந்நாளும், வற்றிப்போகாதாம்
நிறைந்தும், எந்நாளும் ஆழ்ந்திருக்குமாம்.

பல்லவி

ஏகோவாவின் பேரில்
சிந்தை வைத்தவன்
பூரண சந்தோஷம்
அடைந்தேறுவான்.

2. ஜீவ ஊற்றினின்று நதி பாயுதே
ஜீவ பிராணியாவும் பிழைக்கும் என்றே
போகுமிடம் எங்கும் செழிப்பாகுமாம்
பானம் பண்ணும் யாவும் தாகம் தீருமாம்.

3. யேசுவே! உம்மண்டை வந்தடைகிறேன்
வாக்குத்தத்தம் என்னில் நிறைவேற்றுமேன்
என் உள்ளத்தினின்று நதி ஓடவே
ஆவியாலே இன்று ஈவைத் தாருமேன்.

4. யேசு உள்ளங்கையில் மறைக்கப்பட்டேன்
அங்கே பகையாளி அலட்டக்காணேன்
கவலை சற்றேனும் பின் தொடராதாம்
சஞ்சலத்தின் மேகம் நிழலிடாதாம்.

126

Lead kindly light G.B. 295

1. காரிருளில் என் நேசத் தீபமே,
   நடத்துமேன்;
   வேறொளியில்லை, வீடும் தூரமே,
   நடத்துமேன்;
   நீர் தாங்கின் தூரக் காட்சி ஆசியேன்
   ஓர் அடி மட்டும் என் முன் காட்டுமேன்.

2. என் இஷ்டப்படி நடந்தேன்! ஐயோ!
   முன்னாளிலே
   ஒத்தாசை தேடவில்லை; இப்போதோ
   நடத்துமே;
   உல்லாசம் நாடினேன், திகிலிலும்
   வீம்பு கொண்டேன், அன்பாக மன்னியும்.

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்!
   இனிமேலும்
   காடாறு சேறு குன்றில் தேவரீர்,
   நடத்திடும்,
   உதய நேரம் வரக் களிப்பேன்
   மறைந்து போன நேசரைக் காண்பேன்.

127

Rock of ages, cleft for me S.S. 237 G.B. 252

1. பிளவுண்ட மலையே,
   புகலிடம் தாருமே;
   பக்கம் பட்ட காயமும்
   பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
   பாவ தோஷங்கள் யாவும்
   போக்கும்படி அருளும்.

2. கண்ணீர் நித்தம் சொரிந்தும்
கஷ்டதவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே,
நீரே மீட்பர் யேசுவே;
ஏதுமின்றி ஏழையேன்
உம்மில் தஞ்சம் புகுந்தேன்.

3. நிழல் போன்ற வாழ்வினில்,
கண்ணை மூடும் சாவினில்,
மறுமைக்குப் போகையில்,
நடுத்தீர்ப்புத் தினத்தில்,
பிளவுண்ட மலையே,
புகலிடம் தாருமே.

128

What a friend we have in Jesus

S.S. 319
G.B. 64

1. பாவ சஞ்சலத்தை நீக்கப்
ப்ராண ஸ்நேகிதருண்டே
பாவ பாரம் தீர்ந்துபோக
மீட்பர் பாதம் தஞ்சமே.
சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்.

2. கஷ்ட நஷ்ட முண்டானாலும்
யேசுவண்டை சேருவோம்,
மோச நாசம் நேரிட்டாலும்,
ஜெப தூபங் காட்டுவோம்.
நீக்குவாரே நெஞ்சின் நோவை,
பெலவீனம் தாங்குவார்.
நீக்குவாரே மனச்சோர்வை
தீயகுணம் மாற்றுவார்.

3. பெலவீனமானபோதும்
கிருபாசனமுண்டே.
பந்து ஜனம் சாகும்போதும்
புகலிடம் இதுவே.
ஒப்பில்லாத ப்ராணநேசா!
உம்மை நம்பி நேசிப்போம்.
அளவற்ற அருள்நாதா!
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.

129

Nearer, my God, to Thee

S.S. 581
G.B. 365

1. உம்மண்டை, தேவனே,
நான் சேரட்டும்;
சிலுவை சுமந்து
நடப்பினும்,
என் ஆவல் என்றுமே
உம்மண்டை, தேவனே,
நான் சேர்வதே.

2. தாசன் யாக்கோபைப்போல்,
ராக் காலத்தில்,
திக்கற்றுக் கல்லின்மேல்
நான் துயில்கையில்
என்தன் கனாவிலே
உம்மண்டை, தேவனே,
இருப்பேனே.

3. நீர் என்னை நடத்தும்
பாதை எல்லாம்,
வீண் எட்டும் ஏணிபோல்
விளங்குமாம்;
தூதர் அழைப்பாரே
உம்மண்டை, தேவனே,
நான் சேரவே.

4 விழித்து உம்மையே
நான் துதிப்பேன்;
என் துயர்க் கல்லை உம்
வீடாக்குவேன்;
என் துன்பத்தாலுமே
உம்மண்டை, தேவனே,
நான் சேர்வேனே.

130

G.B. 27

1. கடல் கொந்தளித்துப் பொங்கக்,
கப்பல் ஆடிச் செல்கையில்
புசல் காற்று சீறி வீசப்,
பாய் கிழிந்துபோகையில்,
யேசு, எங்களிடம் வந்து
கப்பலோட்டியாய் இரும்;
காற்றமர்த்தித் துணை நின்று
கரை சேரச் செய்திடும்.

2. கப்பல் ஏறிப்போவோருக்குக்
கடும் மோசம் வரினும்,
பாறை, மின், முழக்கம், காற்று
உமக்கெல்லாம் அடங்கும்;
இருளில் நீர் பரஞ்ஜோதி
வெய்யிலில் நீர் நிழலே,
யாத்திரையில் திசை காட்டி,
சாவில் எங்கள் ஜீவனே.

3. எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்,
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகபர ஸ்தலத்தில்;
யேசு, எங்களிடம் வந்து
கப்பலோட்டியாய் இரும்;
காற்றடக்கித் துணை நின்று
கரையேறச் செய்திடும்.

131

G.B. 518

When upon lifes billows

1. துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக் கழித்தாலும்
இன்பம் இழந்தேன் என்றெண்ணிச் சோர்ந்தாலும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாம்;
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.

பல்லவி

எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்;
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்
ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்;
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.

2. கவலைச் சுமை நீ சுமக்கும்போதும்;
சிலுவை உனக்குப் பளுவாகும் போதும்,
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்;
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத்தரும்.

3. நிலம் பொன்னுள்ளோரை நீ பார்க்கும்போது
நினை கிறிஸ்துவின் ஐசுவரியம் உண்டுனக்கு;
பணங் கொள்ளா பேராசீர்வாதத்தைப் பார்;
பரலோக பொக்கிஷமும் வீடும் பார்.

4. அகோரத் துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும்,
அதைரியப்படாதே கர்த்தர் உன் பக்கம்
அநேகமாம் நீ பெற்ற சிலாக்கியங்கள்
தூதர் உன்னைத் தேற்றுவார் பிரயாணத்தில்.

132

S.S. 134

Jesus keep me near the cross

1. இயேசுவே! கல்வாரியில்,
என்னை வைத்துக் கொள்ளும்;
பாவம் போக்கும் ரத்தமாம்
திவ்ய ஊற்றைக் காட்டும்.

பல்லவி

இயேசுவே! மீட்பரே!
எந்தன் மேன்மை நீரே!
விண்ணில் வாழுமளவும்!
நன்மை செய்குவீரே!

2. பாவியேன் கல்வாரியில்
ரட்சிப்பைப் பெற்றேனே,
ஞான ஜோதி தோன்றவும்
கண்டு பூரித்தேனே.

3. ரட்சகா! கல்வாரியின்
காட்சி கண்டோனாக,
பக்தியோடும் ஜீவிக்க,
என்னை ஆள்வீராக!

4. இன்னமும் கல்வாரியில்
ஆவலாய் நிற்பேனே!
பின்பு மோட்ச லோகத்தில்
என்றும் வாழுவேனே.

133

Have Thine own way Lord

1. , உம் சித்தம் தேவா, நடப்பியும்
நான் ஓர் மண்பாண்டம் உம் கையிலும்
உம் பாதத்தண்டை காத்திருக்கும்
என்னை உம் சித்தப்படி மாற்றும்.

2. உம் சித்தம் தேவா, ஆகட்டுமே
என் இதயத்தை ஆராயுமே
உம் சமூகத்தில் தாழ்ந்திருக்கும்
என்னைக் கழுவிச் சுத்தம் செய்யும்.

3. உம் சித்தம் தேவா, ஆகட்டுமே
காயப்பட்ட என்னை நோக்குமே
எல்லாம் வல்ல என் ஆண்டவரே
என்னைத் தொட்டுக் குணப்படுத்தும்

4. உம் சித்தம் தேவா, ஆகட்டுமே
முற்றிலும் என்னை ஆட்கொள்ளுமே
கிறிஸ்துவின் ஜீவன் வெளிப்பட
என்னை உம் ஆவியால் நிரப்பும்.

134

மோட்சம்

S.S. 570

1. ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும்பொழுது
நாம் அங்கே வசிக்கச்செல்லுவோம்.

பல்லவி

இன்பமாய் சீக்கிரம் மோட்ச கரையில்
நாம் சந்திப்போம்
இன்பமாய் சீக்கிரம் மோட்ச கரையில்
நாம் சந்திப்போம்

2. அந்த வான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறுதல் அடைவோம்.

3. நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கி துதிப்போம்.

4. அந்த மோட்ச கரை அடைந்து
வான் சேனையுடன் நாம் களிப்போம்.
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண் கிரீடத்தை நாம் தரிப்போம்.

5. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம், பாடுவோம், ஆளுவோம்
துக்கம் நோவழிந்த ஸ்தலத்தில்
க்ஷேமமாய் நாம் இளைப்பாறுவோம்.

135

For ever with the Lord

S.S. 917
G.B. 314

1. "என்றும் கர்த்தாவுடன்,
நான் கூடி வாழுவேன்,"
இவ்வாக்கினால் சாகா வரன்
செத்தாலும் ஜீவிப்பேன்;
பற்றாசையால் உம்மை
விட்டே நான் அலைந்தேன்;
நாடோறும் வழி நடந்தே
விண் வீட்டைக் கிட்டுவேன்.

2. அதோ சமீபமே,
பிதாவின் வீடுதான்!
என் ஞானக் கண்கள் காணுமே
மின்னும் பொன்னகர் வான்;
தூயோர் சுதந்தரம்,
நான் நேசிக்கும் நாடே;
என் ஆவி மேலெருசலேம்
சேரத் தவிக்குமே.

3. "கர்த்தாவுடன் என்றும்!"
பிதாவே, இங்கும் நீர்
இவ்வாக்கை நிறைவேற்றவும்
சித்தம் கொண்டருள்வீர்;

என் பக்கம் தங்கிடின்,
தப்பாமலே நிற்பேன்;
கை தூக்கி என்னைத் தாங்கிடின்
போராடி வெல்லுவேன்.

4. என் ஜீவன் போகும் நாள்
கிழியும் இத்திரை;
சாவை அழிப்பேன் சாவினால்
சாகா உயிர் பெற்றே;
என் நாதரைக் காண்பேன்,
நின்று களிப்புடன்
சிம்மாசனத்தின் முன் சொல்வேன்
"என்றும் கர்த்தாவுடன்".

136

For all the saints ... their labours rest G.B. 568

1. விஸ்வாசத்தோடு சாட்சி பகர்ந்தே
தம் வேலை முடித்தோர் நிமித்தமே,
கர்த்தாவே, உம்மைத் துதி செய்வோமே
அல்லேலூயா! அல்லேலூயா!

2. நீர் அவர் வல்ல கோட்டை ஆயினீர்
வெம்போரில் வெற்றி தந்து வாழ்வித்தீர்;
காரிருளில் மா ஜோதி வீசினீர்
அல்லேலூயா! அல்லேலூயா!

3. முன் நாளில் பக்தர் நற் போராடியே
வென்றார் போல் நாங்கள் வீரராகவே
பொற் கிரீடம் பெற்றுக் கொள்வோமாகவே
அல்லேலூயா! அல்லேலூயா!

4. கடூரமான யுத்த கோஷ்டத்தில்
கெம்பீர கீதம் விண்ணில் கேட்கையில்
அஞ்சாமல் வீரங் கொள்வோம் நெஞ்சத்தில்
அல்லேலூயா! அல்லேலூயா!

5. செவ்வானம் மேற்கில் தோன்றி ஒளிரும்;
மெய் வீரருக்கு ஓய்வு வாய்த்திடும்,
சீர் பரதீசில் பாக்யம் அமையும்
அல்லேலூயா! அல்லேலூயா!

6. அப்பாலே நித்ய பகல் விடியும்;
வென்றோர்கள் மாட்சியாய் எழும்பவும்,
கிறிஸ்துவின் ராஜரீகம் எழும்பவும்
அல்லேலூயா! அல்லேலூயா!

137

When all my labours and trials are o'er S.S. 949

1. பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்.
துன்பமும் துக்கமும் மாறியே போம்.
நன்மைச் சொரூபியைத் தரிசிப்போம்,
நீடூழி காலம் பேரின்பமுண்டாம்.

பல்லவி

பேரின்பமாம், பூரிப்புண்டாம்.
பேரின்பமாம், பூரிப்புண்டாம்.
மேலுலகில் அவர் சந்நிதியில்
மேலான வாழ்வு, பேரின்பமுண்டாம்.

2. மாட்சிமையான காருண்ணியத்தால்
மோட்ச ஆனந்தத்தை அடையுங்கால்,
சாட்சாத் நல் மீட்பரை நோக்குவதால்,
நீடூழி காலம் பேரின்பமுண்டாம்.

3. அன்பராம் இஷ்டரைக் கண்டு கொள்வோம்
இன்ப மா வாரியில் மூழ்கிடுவோம்,
என்றைக்கும் யேசுவை ஸ்தோத்தரிப்போம்.
நீடூழி காலம் பேரின்பமுண்டாம்.

138

Come, ye that love the Lord

S.S. 823
G.B. 31

1. மெய்பக்தர், தாசரே!
கொண்டாடக் கூடுவோம்.
சந்தோஷ கீதம் பாடியே,
சந்தோஷ கீதம் பாடியே,
கர்த்தாவைப் போற்றுவோம்;
கர்த்தாவைப் போற்றுவோம.

பல்லவி

மா உன்னத சீயோன்,
சோபித சுந்தர சீயோன்.
மா உன்னத திவ்விய சீயோன்
நாம் நோக்கிய செல்லுகிறோம்.

2. ரட்சண்யக் கூட்டத்தார்
பேரீவுக்காகவே
மேன்மேலும் நன்றி சொல்லுவார்,
மேன்மேலும் நன்றி சொல்லுவார்,
பாடாமல் தீராதே!
பாடாமல் தீராதே!

3. பேரன்பின் வாரியில்
நாம் மூழ்கி ஆழ்கிறோம்;
பின், மோட்சானந்த வீட்டினில்,
பின், மோட்சானந்த வீட்டினில்,
ஒன்றாகப் பூரிப்போம்;
ஒன்றாகப் பூரிப்போம்.

4. விசாரம், துக்கத்தை
விட்டாரவாரிப்போம்;
இம்மானுவேலின் தேசத்தை
இம்மானுவேலின் தேசத்தை

நாம் நாடிப் போகிறோம்.
நாம் நாடிப் போகிறோம்.

139

Jerusalem, my happy home

1. எருசலேம் என் ஆலயம்,
   ஆசித்த வீடதே;
   நான் அதைக் கண்டு பாக்கியம்
   அடைய வேண்டுமே.

2. பொன் தளம் போட்டவீதியில்
   எப்போதுலாவுவேன்?
   பளிங்காய்த் தோன்றும் தலத்தில்
   என்றைக்குத் தொழுவேன்?

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
   நிற்கும் அம்மோட்சத்தார்
   யேசுவைப் போற்றிக் களிப்பாய்
   ஓய்வின்றிப் பாடுவார்.

4. நானும் அங்குள்ள கூட்டத்தில்
   சேர்ந்தும்மைக் காணவே
   வாஞ்சித்து, லோக துன்பத்தில்
   களிப்பேன், யேசுவே.

5. எருசலேம் என் ஆலயம்
   நான் உன்னில் வாழுவேன்;
   என் ஆவல், என் அடைக்கலம்;
   எப்போ கண்டடைவேன்?

140

We speak of the realms of the blest

1. மேலோகத்தை நாடுகிறோம்,
   அதின் ஜோதி ப்ரகாசத்தையும்;
   பேரின்பத்தை வர்ணிக்கிறோம்,
   பார்த்தால் • என்னமாயிருக்கும்!

பல்லவி

பார்த்தால், பார்த்தால்,
பார்த்தால் என்னமாயிருக்கும்!
பேரின்பத்தை வர்ணிக்கிறோம்,
பார்த்தால் என்னமாயிருக்கும்!

2. எப்பாவமும் இல்லாமற்போம்,
கண்ணீர் சஞ்சலம் சோதனையும்;
வெற்றி சிறந்து, ஓய்ந்திருப்போம்,
சேர்ந்தால் என்னமாயிருக்கும்!

3. அங்கே யேசுவையே சேவிப்போம்!
வெண் வஸ்திரந்தான் தரிப்போம்;
வானோர் சங்கம் சேர்ந்திடுவோம்
சேர்ந்தால் என்னமாயிருக்கும்!

141

சிறப்பு ஆராதனைகள்

The Church's one foundation

S.S. 228
G.B. 503

1. சபையின் அஸ்திபாரம்
நன் மீட்பர் க்றிஸ்துவே;
சபையின் ஜன்மாதாரம்
அவரின் வார்த்தையே;
தம் மணவாட்டியாக
வந்ததைத் தேடினார்,
தமக்குச் சொந்தமாக
மரித்ததைக் கொண்டார்.

2. எத்தேசத்தார் சேர்ந்தாலும்,
சபை ஒன்றே ஒன்றாம்;
ஒரே விஸ்வாசத்தாலும்
ஒரே ரட்சிப்புண்டாம்;

ஒரே தெய்வீக நாமம்
சபையை இணைக்கும்;
ஓர் திவ்ய ஞானாகாரம்
பக்தரைப் போஷிக்கும்.

3. புறத்தியார் விரோதம்
பயத்தை உறுத்தும்,
உள்ளானவரின் த்ரோகம்
கிலேசப்படுத்தும்;
பக்தர் ஓயாத சத்தம்,
"எம்ம்டும்"? என்பதாம்;
ராவில் நிலைத்த துக்கம்
காலையில் களிப்பாம்.

4. மேலான வான காட்சி
கண்டாசீர்வாதத்தைப்
பெற்று, போர் ஓய்ந்து வெற்றிச்
சிறந்து, மாட்சிமை
அடையும் பரியந்தம்
இன்னா உழைப்பிலும்
நீங்காத சமாதானம்
மெய்ச்சபை வாஞ்சிக்கும்.

142

O For a thousand tongues to Sing **C.M.**

1. எத்தனை நாவால் பாடுவேன்
என் மீட்பர் துதியை!
என் ஆண்டவர் என் ராஜனின்
மேன்மை மகிமையை

2. பாவிக்கு உந்தன் நாமமோ
ஆரோக்கியம் ஜீவனாம்;
பயமோ துக்க துன்பமோ
ஓட்டும் இன்கீதமாம்.

3. உமது சத்தம் கேட்குங்கால்
மரித்தோர் ஜீவிப்பார்;
புலம்பல் நீங்கும் பூரிப்பால்,
நிர்ப்பாக்கியர் நம்புவார்.

4. ஊமையோர், செவிடோர்களும்,
அந்தகர், ஊனரும்,
உம் மீட்பர்! போற்றும்! கேட்டிடும்!
நோக்கும்! குதித்திடும்!

5. என் ஆண்டவா, என் தெய்வமே,
பூலோகம் எங்கணும்
பிரஸ்தாபிக்க உம் நாமமே
பேர் அருள் ஈந்திடும்.

143

பாலர் கீதங்கள்

Jesus is our shepherd

S.S. 1153
G.B. 653

1. யேசு எங்கள் மேய்ப்பர்,
கண்ணீர் துடைப்பார்,
மார்ப்பில் சேர்த்தணைத்துப்
பயம் நீக்குவார்
துன்பம் நேரிட்டாலும்
இன்பம் ஆயினும்,
யேசுவின் பின் செல்வோம்
பாலர் யாவரும்.

2. நல்ல மேய்ப்பர் சத்தம்
நன்றாய் அறிவோம்,
காதுக்கின்பமாகக்
கேட்டுக் களிப்போம்;
கண்டித்தாலும், நேசர்
ஆற்றித் தேற்றுவார்,
நாங்கள் பின்னே செல்ல
வழி காட்டுவார்.

3. ஆட்டுக்காக மேய்ப்பர்,
ரத்தம் சிந்தினார்,
அதில் மூழ்கினோரே
சுத்தர் ஆகுவார்;
பாவ குணம் நீக்கி
முற்றும் ரட்சிப்பார்.
திவ்ய தூய சாயல்
ஆக மாற்றுவார்;

4. யேசு நல்ல மேய்ப்பர்
ஆட்டைப் போஷிப்பார்,
ஓநாய்கள் வந்தாலும்
தொடவே ஒட்டார்;
சாவின் பள்ளத்தாக்கில்
அஞ்சவே மாட்டோம்,
பாதாளத்தின் மேலும்
ஜெயங் கொள்ளுவோம்.

144

Jesus loves me, this I know S.S. 1155
G.B. 661

1. யேசு எந்தன் நேசரே,
கண்டேன் வேத நூலிலே
பாலர் அவர் சொந்தம்தான்
தாங்க அவர் வல்லோர்தான்

பல்லவி

யேசு என் நேசர்,
யேசு என் நேசர்,
யேசு என் நேசர்,
மெய் வேத வாக்கிதே.

2. என்னை மீட்க மரித்தார்.
மோட்ச வாசல் திறந்தார்,
எந்தன் பாவம் நீக்குவார்.
பாலன் என்னை ரட்சிப்பார்.

3. பெலவீனம் நோவிலும்
என்றும் என்னை நேசிக்கும்
யேசு தாங்கித் தேற்றுவார்,
பாதுகாக்க வருவார்.

4. எந்தன் மீட்பர் யேசுவே
தங்குவார் என்னருகே;
நேசனாய் நான் மரித்தால்
மோட்சம் சேர்ப்பார் அன்பினால்.

145

G.B. 674

1. துள்ளித் துள்ளிப் பாலரே;
கீதம் பாடி ஆடியே,
யேசுவண்டை ஓடிவா,
நேசர் அவர் அல்லவா?

2. பெத்லகேமில் பிறந்தார்,
பெற்றோருக்கு அமைந்தார்
தீய தான குணங்கள்
உண்டோ? இல்லை, பாருங்கள்.

3. சிறு பிள்ளை நீயும் வா,
நெஞ்சை யேசுவுக்குத் தா;
அவர் கையில் ஏந்துவார்,
ஆசீர்வாதம் தருவார்.

4. வாரும், சிறு பாலரே,
அஞ்சவேண்டாம், நேசரே;
பயம், துக்கம் நீக்குவார்,
கண்ணீர் யாவும் துடைப்பார்.

146

பூமி அதிர்ந்தாலும்,
ஆழி பொங்கினாலும்
என்ன நேரிட்டாலும்
அஞ்சிடேன்.

1. யெகோவா துணை நிற்கிறார்,
அஞ்சிடேன்,
எக்காலும் அவர் கைவிடார்,
அஞ்சிடேன்,

2. ஓர் ஜீவ நதியுண்டு! பார்!
அஞ்சிடேன்,
அத்தால் சந்தோஷம் செய்கிறார்,
அஞ்சிடேன்,

3. "நான் உந்தன் தேவன்" என்கிறார்
அஞ்சிடேன்,
மாற்றாரை ஓடப்பண்ணுவார்,
அஞ்சிடேன்,

4. என்யேசு நாதர் நாமம் ஜெயம்,
நம்புவேன்.
என் யேசு நாதர் நாமம் ஜெயம்.
நம்புவேன்
யேசு நாமம் ஜெயம்
யேசு நாமம் ஜெயம்
யேசு நாமம் ஜெயம்
நம்புவேன்.

147

There's a friend for little children

S.S. 1130
G.B. 640

1. பாலரே, ஓர் நேசர் உண்டு
விண் மோட்ச வீட்டிலே;
நீங்கா இந்நேசர் அன்பு
ஓர் நாளும் குன்றாதே;
உற்றாரின் நேசம் யாவும்
நாட் செல்ல மாறினும்,
இவ்வன்பர் திவ்ய நேசம்
மாறாமல் நிலைக்கும்.

2. பாலரே, ஓர் வீடு உண்டு
விண் மோட்ச நாட்டிலே;
பேர் வாழ்வுண்டாக யேசு
அங்கரசாள்வாரே;
ஒப்பற்ற அந்த வீட்டை
நாம் நாட வேண்டாமோ?
அங்குள்ளோர் இன்ப வாழ்வில்
ஓர் தாழ்ச்சிதானுண்டோ?

3. பாலரே, ஓர் க்ரீடம் உண்டு
விண் மோட்ச வீட்டில், நீர்
நல் மீட்பரின் பேரன்பால்
பொற் க்ரீடம் அணிவீர்;
இப்போது மீட்பைப் பெற்று
மா நேசர் பின் சென்றார்
இவ் வாடா ஜீவ க்ரீடம்
அப்போது சூடுவார்.

4. பாலரே, ஓர் கீதம் உண்டு
விண் மோட்ச வீட்டிலே;
மா ஜெய கீதம் பாட
ஓர் வீணையும் உண்டே;
அந்நாட்டின் இன்பம் எல்லாம்
நம் மீட்பர்க்குரிமை
நீர் அவரிடம் வாரும்,
ஈவார் அவ்வின்பத்தை

148

ஆராதனை முடிவு

Dismiss us with Thy blessing. Lord

1. தேவ ஆசீர்வாதத்தோடே
அடியாரை அனுப்பும் ;
வார்த்தை என்னும் அப்பத்தாலே
போஷித்து வளர்ப்பியும்.

2. இப்போதும்மைத் தேடிக்கொண்டு
மனதாரப்போற்றினோம்
மோட்ச லோகத்தில் களித்து,
உம்மை வாழ்த்தித் தொழுவோம்.

149

துதி, கனம், மகிமையுமக்கே
ஓ எல்லாமுமே ஓ எல்லாமுமே
துதி, கனம் மகிமையுமக்கே
ஓ நீரே ராஜாவே,
ஸ்தோத்ரம் ஸ்தோத்திரம்

ஸ்தோத்ரம் மிக ஸ்தோத்ரம்
ஓ நீரே ராஜாவே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ எல்லாமுமே, ஓ எல்லாமுமே
ஓ நீரே ராஜாவே

150

Praise God from whom

ஒன்றாக ஆட்சி செய்கிற
த்ரியேக தேவனாகிய
பிதா குமாரன் ஆவிக்கே
மா ஸ்தோத்திரம் உண்டாகவே!

151

அல்லேலூயா துதி மகிமை
என்றும் இயேசுவுக்குச் செலுத்திடுவோம் (2)
ஆ... அல்லேலூயா, அல்லேலூயா அல்லேலூயா (2)

துதிபாடல்கள்

1

பல்லவி

மகிமை உமக்கன்றோ
மாட்சிமை உமக்கன்றோ
துதியும் புகழும் ஸ்தோத்திரமும்
தூயவர் உமக்கன்றோ

அனுபல்லவி

ஆராதனை - ஆராதனை - என்
அன்பர் இயேசுவுக்கே

சரணங்கள்

1. விலையேறப் பெற்ற உம் இரத்தத்தால்
விடுதலை கொடுத்தீர்
இராஜாக்களாக லேவியராக
உமக்கெனத் தெரிந்து கொண்டீர்

2. வழி காட்டும் தீபம் துணையானவரே
தேற்றும் தெய்வமே
அன்பால் பெலத்தால்
அனல் மூட்டும் ஐயா அபிஷேக நாதரே

3. எப்போதும் இருக்கின்ற
இனி மேலும் வருகின்ற எங்கள் ராஜாவே
உம் நாமம் வாழ்க உம் அரசு வருக
உம் சித்தம் நிறைவேறுக

4. உம் வல்ல செயல்கள்
மிகவும் பெரிய அதிசயமன்றோ
உம் தூய வழிகள் நேர்மையான
சத்திய தீபமன்றோ

2

பல்லவி

மங்களம் ஜெய மங்களம்
மாசில்லாத திரியேகர்க்கு!

அனுபல்லவி

சங்கையின் ராஜர்க்கு
எங்குமாபுகழ் நேசர்க்கு

சரணங்கள்

அந்தம் ஆதி யில்லாதவர்
விந்தை யுலகம் செய்தவர்
முந்த நமை நேசித்தவர்
மூவுலகுக்கும் ஆண்டவர்
சந்ததம் வாழ்பவர்
எந்தையாம் பிதாவுக்கு

2. வான லோகமே விட்டு,
ஈனப் பாவியை யிட்டுத்,
தானமா யுயிர் விட்டுத்
தீன நரரைத் தான் மீட்டு
வாழும் மணவாளர்க்கு
நன்மை செய் மனுவேலர்க்கு

3. சுத்த இதயமே தந்து
பக்தர் மனதிலே வந்து
சுத்த ஓலயமா யீந்து
நித்தம் துதிபெற நின்று
சத்தியம் போதிக்கும்
சுவாமி பரிசுத்தாவிக்கும்.

3

பல்லவி

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

அனுபல்லவி

காத்தீரே என்னைக் கருத்தாக
வழுவமால் என்னை உமக்காக
எடுத்தீர் எனையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக

1. வல்ல வான ஞான வினோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலைந்த எனையும் மீட்டீரே

2. நம்பினோரை காக்கம் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவியாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க் குந்தன் தயவாலே

கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே
மன்னா எமக்கும் நீர் தானே
எந்நாளும் எங்கள் துணை நீரே

அல்லேலூயா ஸ்தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியா திருப்பேனோ
அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையே துதித்திடுவேன்.

4

அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர்
இயேசு அற்புதர்
அண்டினோர் வாழ்வை இன்பமாய் மாற்றும்
இயேசு அற்புதர்

எல்லோரும் பாடுங்கள்
கைத்தாளம் போடுங்கள்
சந்தோஷத்துடனே சங்கீதம் பாடுங்கள் அற்புதர்

1. என்னென்ன துன்பங்கள் நம்மில்
வந்தபோதும் தீர்த்த இயேசு அற்புதர்
எத்தனை தொல்லைகள் நம்மை
சூழ்ந்த போதும் காத்த இயேசு அற்புதர்
உலகத்தில் இருப்போனிலும் எங்கள்
இயேசு பெரியவர் அற்புதரே
உண்மையாய் அவரைத் தேடும் யாவருக்கும்
இயேசு அற்புதரே எல்லோருக்கும்

2. அலைகடல் மேலே நடந்தவர் எங்கள்
இயேசு அற்புதர்
அகோரா காற்றையும் அமைதிப்படுத்திய
இயேசு அற்புதர்
அறைந்தனர் சிலுவையிலே
ஆண்டவர் மரித்தார் அந்நாளிலே
ஆயினும் மூன்றாம் நாள் உயிருடன் - எழுந்த
இயேசு அற்புதர் எல்லோருக்கும்

5

1. அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்

பல்லவி

ராஜாதி ராஜனாம் இயேசுராஜன் பூமியல் ஆட்சி செய்வார்
அல்லேலூயா அல்லேலூயா தேவனைத் துதியுங்கள்

2. தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிட துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்

3. சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரை துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்

4. பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்

5. ஆழ்கடலே, சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலை அலையாய் ஊழியர்கள் எழுப்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை இந்தியர்கள் நிரப்புவார் துதியுங்கள்

6

பல்லவி

மகிமை மாட்சிமை நிறைந்தவரே
மகிழ்வுடன் தொழுதிடுவோம்
பரிசுத்த தேவனாம் இயேசுவை
பணிந்தே தொழுகுவோம்.

1. உன்னத தேவன் நீரே
ஞானம் நிறைந்தவரே
முழங்கால் யாவுமே
பாரில் மடங்கிடுதே
உயர்ந்தவரே சிறந்தவரே
என்றும் தொழுதிடுவோம்

2. ஒருவரும் சேரா ஒளியில்
வாசம் செய்பவரே
ஒளியினைத் தந்துமே
இதயத்தில் வாசம் செய்யும்
ஒளி நிறைவே அருள் நிறைவே
என்றும் தொழுதிடுவோம்.

3. பரிசுத்த தேவன் நீரே
பாதம் பணிந்திடுவோம்
கழுவியே நிறுத்தினீரே
சத்திய தேவன் நீரே
கனம் மகிமை செலுத்தியே நாம்
என்றும் தொழுதிடுவோம்.

4. நித்திய தேவனும் நீரே
நீதி நிறைந்தவரே
அடைக்கலமானவரே
அன்பு நிறைந்தவரே
நல்லவரே வல்லவரே
என்றும் தொழுதிடுவோம்.

7

நன்றியால் துதிபாடு உன் இயேசுவை
உள்ளத்தால் என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர்

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விடும்.

2. துன்மார்க்கத்திற்கேதுவான வெறி கொள்ளாமல்
தெய்வ பயத்தோடே என்றுமே
ஆவியினால் என்றும் நிறைந்தே
சங்கீத கீர்த்தனம் பாடு.

3. சரீரம் ஆத்துமா ஆவியினாலும்
சோர்ந்து போகும் வேளையிலெல்லாம்
துதி சத்தத்தால் உள்ளம் நிறைந்தால்
தூயரின் பெலன் கிடைக்கும்.

8

பல்லவி

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்.

அனுபல்லவி

இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே.

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனித் தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுமே.

3. நீரினில் வாழ்கின்ற யாவும் - இந்
நிலத்தின் சீவ ராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே.

4. வால வயதுள்ளோரும் - மிகும்
வயதால் முதிர்ந்தோர்களும்
பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மைப் போற்றுவாரே.

9

பல்லவி

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பணிகிறோம் ஆவி உண்மையுடனே

அனுபல்லவி

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம், சரணம்

சரணங்கள்

1. நன் நலங்கட்கோர் முதலே,
நற்சேயை நீர் தந்ததாலே
திரித்துவயேகத்துவனே
திரிலோகனே சரணம், சரணம்

2. பாவிநேசன் பாவ நாசன்
பரம பாசன் வரமே வாசன்
துங்கா சிங்கன் மங்காத் தங்கன்
தூய அங்கனே சரணம் சரணம்

3. வெண்மையுங் சிவப்புமானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம்

4. சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதான எம்மூலைக் கல்லே
ஏராளமாம் சரணம் சரணம்

5. பார்த்திபனே கன தோத்திரம்
கீர்த்தனம் மங்களம் தோத்திரம்
வாழ்க, வாழ்க, வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென், ஆமென்

10

பல்லவி

தூயாதி தூயவரே உமது புகழை நான் பாடுவேன்
பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ள வரை நின் புகழ்பாட வேண்டும்.

சரணங்கள்

1. சீடரின் கால்களை கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே

2. நோய்களை அகற்றிடும் வைத்தியராய்
தெய்வீக நல்லசுகம் ஈந்திடுமே

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன் தாருமே

4. பரலோகில் இடமுண்டு என்றவரே
பரிவாக எனைச் சேர்க்க வந்திடுவீரே

5. பாவத்தின் சேற்றினில் அமிழ்ந்திடாமல்
பாசமாய் அணைத்தென்னை தூக்கினீரே

11

1. தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒருமனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்.

பல்லவி

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தர்க்கே
அல்லேலூயா இராஜனுக்கே

2. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண் மணிப்போல காத்தருளும்
கிருபையால் நிதம் வழி நடத்தும்

3. சபையில் உம்மை அழைத்திடுவோம்
சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்
சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம்.

4. ஜீவனுள்ள நாட்க ளெல்லாம்
நன்மை கிருபை தொடர்ந்திடவே
தேவ வசனம் கீழ்ப்படிவோம்
தேவ சாயலாய் மாறிடுவோம்.

12

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனைப்
புனித இதயமுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா
யேசுவை நாமென்றும் பாடித் துதிப்போம்.

பல்லவி

இயேசு என்னும் நாமமே - என்
ஆத்துமாவின் கீதமே - என் நேசரேசுவை
நான் என்றும் ஏத்தி மகிழ்ந்திடுவேன்.

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரங்கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன்.

3. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந்தழிந்து மாளாதே
ஆர்ப்பின் ஜெயதொனியோடே
பாதுகாத்த அன்பை என்றும் பாடுவேன்.

4. தாய்தன் பாலகனையே மறப்பினும்
நான்மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னை அவர் கையில் தந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவேன்.

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால்
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவும் என்றும்
தந்து தொண்டு செய்குவேன்.

13

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்
ஆனந்தம் கொள்ளுவேன்
அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் - அல்லேலூயா

1. பாவ இருள் என்னை வந்து
சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார்.

2. வாதை நோயும் வந்த போது
வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்ப மெல்லாம்
நீக்கி மீட்டிட்டார்.

3. சேற்றில் வீழ்ந்த என்னையவர்
தூக்கி யெடுத்தார்
நாற்ற மெல்லாம் ஜீவரத்தம்
கொண்டு மாற்றினார்.

4. தந்தை தாயும் நண்பருற்றார்
யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர்
மேன்மை சொல்லுவேன்.

5. இவ்வுலகப்பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக்
காண காத்திருக்கிறேன்.

14

பல்லவி

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன், துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்.

1. ஆதியும் நீரே - அந்தமும் நீரே
ஜோதியும் நீரே - என் சொந்தமும் நீரே
தாய் தந்தை நீரே - தாதியும் நீரே
தாபரம் நீரே - என் தாரகம் நீரே

2. வாழ்விலும் நீரே - தாழ்விலும் நீரே
வாதையில் நீரே - என் பாதையில் நீரே
வானிலும் நீரே - பூவிலும் நீரே
ஆழியில் நீரே - என் ஆபத்தில் நீரே

3. துன்ப நேரத்தில் - இன்பமும் நீரே
இன்னல் வேளையில் - என்மாறா நேசரே
ஞான வைத்தியராம் - ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் - என் நண்பரும் நீரே

4. ஞானமும் நீரே - கானமும் நீரே
தானமும் நீரே - என் நாதனும் நீரே
ஆறுதல் நீரே - ஆதாரம் நீரே
ஆசையும் நீரே - என் ஆனந்தம் நீரே

5. மீட்பரும் நீரே - என் மேய்ப்பரும் நீரே
மேன்மையும் நீரே - என் மகிமையும் நீரே
தேவனும் நீரே - என் ஜீவனும் நீரே
ராஜ ராஜனும் - என் சர்வமும் நீரே.

15

என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா
உம் கிருபை தந்தாலே போதும்
அலை மோதும் வாழ்வில் அலையாமல் செல்ல
உம் கிருபை முன் செல்ல அருளும்.

1. கடல் என்னும் வாழ்வில் கலங்கும் என் படகில்
சுக்கான் பிடித்து நடத்தும் என் தேவா
கடலினை கண்டித்த கர்த்தர் நீர் அல்லவோ
கடவாத எல்லையை என் வாழ்வில் தாரும்.

2. பிளவுண்ட மலையே புகலிடம் நீரே
புயல் வீசும் வாழ்வில் பாதுகாத்தருளும்
பாரினில் காரிருள் சேதங்கள் அணுகாமல்
பரனே என் வாழ்வில் தீபமாய் வாரும்

2. எதிர்காற்று வீச எதிர்ப்போரும்பேச
என்னோடிருப்பவர் பெரியவர் நீரே
இயேசுவே யாத்திரையில் கரைசேர்க்கும்
என் ஜீவ படகின் நங்கூரம் நீரே.

16

துதிப்போம் அல்லேலூயா பாடி
மகிழ்வோம் மகிபனை போற்றி
மகிமை தேவ மகிமை
தேவ தேவனுக்கே மகிமை

1. தேவன் நம்மை வந்தடையச் செய்தார்
தம்மையென்றும் அதற்காகத் தந்தார்
அற்புதங்கள் செய்யும் சர்வ வல்ல தேவன்
அடைக்கலம் கொடுத்திடுவார்.

2. தேவன் எந்தன் அடைக்கலமாமே
ஒரு போதும் பொல்லாப்பு வராதே
சர்வ வல்ல தேவன் தாபரமாய் நின்றே
விடுவித்து காத்திடுவார்.

3. கூப்பிடும் வேளையில் என்னை
தப்புவிக்க ஆத்திரமாய் வந்தார்
சிங்கத்தின் மேலே நடத்திடுவேனே
சர்ப்பங்களை மிதித்திடுவேனே.

4. பாதம் கல்லில் என்றும் இடறாமல்
கரங்களில் தாங்கிடுவார் தூதர்
ஒரு போதும் வாதை என் கூடாரத்தை
அணுகாமல் காத்திடுவார்.

17

தோத்திரம் பாடியே போற்றிடுவேன்
தேவாதி தேவனை இராஜாதி ராஜனை
வாழ்த்தி வணங்கிடுவேன்.

1. அற்புதமான அன்பே - என்னில்
பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
என்றும் மாறா தேவ அன்பே
என்னுள்ளம் தங்கும் அன்பே

2. ஜோதியாய் வந்த அன்பே பூவில்
ஜீவன் தந்து என்னை மீட்ட அன்பே
தியாகமான தேவ அன்பே
திவ்விய மதுர அன்பே

3. மாய உலக அன்பை - நம்பி
மாண்ட என்னைக் கண்டழைத்த அன்பே
என்னை வென்ற தேவ அன்பே
என்னில் பொங்கும் பேரன்பே

4. ஆதரவான அன்பே - நித்தம்
அன்னை போல் என்னையும் தாங்கும் அன்பே
உன்னதமா தேவ அன்பே
உள்ளம் கவரும் அன்பே

5. வாக்கு மாறாத அன்பே திரு
வார்த்தையுரைத் தென்னைத் தேற்றும் அன்பே
சர்வ வல்ல தேவ அன்பே
சந்ததம் ஓங்கும் அன்பே.

18

1. இயேசுவே உம்நாமத்தினால்
இன்பமுண்டுயாவருக்கும்
நன்றியுள்ள இதயத்துடன்
கூடினோம் இந்நன்னாளிலே

பல்லவி

எங்கள் தேவனே எங்கள் ராஜனே
என்றும் உம்மையே சேவிப்போம்
நன்றியுள்ள சாட்சியாக
உமக்கென்றும் ஜீவிப்போம்.

2. நிலையில்லா இவ்வுலகில்
நெறி தவறியே அலைந்தோம்
நின்னொளி பிரகாசித்திட
நித்திய ஜீவன் கண்டடைந்தோம்.

3. பொன்னை நாடி மண்ணையடைந்தோம்
புகழ் தேடி ஏமாற்றம் கொண்டோம்
விண்ணை நோக்கி ஜெயம் பெற்றோம்
இயேசுவின் தரிசனத்தால்.

4. உன்னைக் கண்டழைக்கும் சத்தத்தை
கேட்பாயோ ஓ பாவியே
இன்று இயேசுவண்டை வாராயோ
சாகா ஜீவன் கண்டடைய.

19

பல்லவி

பிறந்தார் பிறந்தார்
வானவர் புவி மானிடர்-புகழ்
பாடிட பிறந்தார்

1. மாட்டுத் தொழுவம் தெரிந்தெடுத்தார்
மாதேவ தேவனே
மேன்மை வெறுத்தார் தாழ்மை தரித்தார்
மா தியாகியாய் வளர்ந்தார்.

2. பாவ உலகின் மானிடர் மேல்
பாசம் அடைந்தவரே
மனக்காரிருளை எம்மில் நீக்கிடும் மெய்
மா ஜோதியாய் திகழ்ந்தார்.

3. பொறுமை தாழ்மை அன்புருக்கம்
பெருந்தன்மை உள்ளவரே
மரணம் வரையில் தம்மைத் தாழ்த்தினதால்
மேலான நாமம் பெற்றார்.

4. கந்தை துணியோ கர்த்தருக்குக்
கடும் ஏழ்மைக் கோலமதோ
விலையேறப் பெற்ற உடை அலங்கரிப்பும்
வீண் ஆசையும் நமக்கேன்

5. இயேசு பிறந்தார் உள்ளமதில்
இதையெங்கும் சாற்றிடுவோம்
புசிப்பும் குடிப்பும் தேவராஜ்யமல்ல
பரன் ஆவியில் மகிழ்வோம்.

20

மேசியா இயேசு நாயனார்
எம்மை மீட்கவே நரனாயினார்

1. நேசமாய் இந்தக் காசினியோரின்
நிந்தை அனைத்தும் போக்கவே
மாசில்லான் ஒரு நீசனாகவே
வந்தார் எம் கதி போக்கவே

2. தந்தையின் சுதன் மைந்தர் பாதகம்
சமஸ்தமும் அற வேண்டிய
விந்தையாய் குடில் மீது வந்தனர்
விண்ணுலகமும் தாண்டியே

3. தேவனாம் நித்ய ஜீவனாம் ஒரே
திருசுதன் மனுவே ஆனார்
பாவியாம் நரர் பாவம் அறவே
பார்தீரன் தேவ பாலனானார்.

21

பல்லவி

கிறிஸ்து இயேசு தயாள பிரபு,
சிருஷ்டித்த தயவு;
கீர்த்தனம் என்றும் பாடுவேன்,
இரட்சித்தார் தேடி.

1. மானிலத்தில் நீர் மானிடனானீர்,
மாந்தர்கள் மத்தியில் மா ஏழை யானீர்
மா பெரும் துன்பம் துக்கங்கள் ஏற்றீர்,
பாவி என்னை இரட்சிக்க,-பிரிய இயேசு

2. விசுவாசப் பேழை ஆழியிலிருக்க,
புயல் களெல்லாம் அலைக்கழிக்க,
இயேசுவே நீரே அலை அதட்டி,
அக்கரைப் படுத்தினீர்,-பிரிய இயேசு

3. பாவப் பிணியால் வாதிக்கப் பட்டேன்,
பாடு பட்டும் பலா பலனைக் காணேன்,
பின்னே வந்து உம் வஸ்திரம் தொட்டேன்,
பிழைத்தேன் அட்சணமே,-பிரிய இயேசு.

22

1. என் ஆண்டவர் இயேசுவின் அன்பினையே
நான் ஆராய்ந்து பார்க்கும் இவ்வேளையிலே
இன்பம் பொங்கிடுதே உள்ளம் துள்ளிடுதே
அன்பின் நேசர்க்கல்லேலூயா - (2)

பல்லவி

எண்ணி எண்ணி பார்க்கும் நேரமெல்லாம்
இவ்வுலக நேசம் ஓடிடுதே - (2)
பாடிடுவேன் நான் ஆடிடுவேன்
என் அன்பர் அன்பில் நிறைந்து - (2)

2. நான் கல்வாரி அன்பினை அறியுமுன்னே
என்னை நன்கு புரிந்துள்ள தோழர்களே
இன்று பாருங்களே எந்தன் ஜீவியத்தை
தூய ரத்தம் செய்த விந்தையே - (2)

3. என் நண்பர் உறவினர் எத்தனைபேர்
என்னைக் காட்டிலும் நீதியில் உயர்ந்தவரே
என்ன சொல்லிடுவேன் இந்த விந்தைப்பற்றி
நேசர் என்னில் அன்பு கூர்ந்தாரே - (2)

4. என் நேசர் வரும் வேலை நெருங்கிடுதே
நிந்தை தாங்கிடும் நாட்களும் ஓடிடுதே
அண்ணல் இயேசுவிடம் சேரும் எண்ணத்திலே
உள்ளம் பொங்கி மகிழ்ந்திடுதே - (2)

23

1. இயேசு என்றதுமே எனக்கோர், இன்பம் பிறக்குதம்மா!
காசினியில் அவர் போல், எவரையும்
கண்டதுமில்லையம்மா

2. பேசத் தொடங்கினாலோ பேச்சலல்லாம் பேரின்பம்
கொட்டுதம்மா!
பார்க்கத் தொடங்கினாலோ பார்வையெல்லாம்;
பாவியென்மேலேயம்மா!

3. குஷ்டரோகியவனை கையினால் கூசாமல் தொட்டாரம்மா!
கஷ்டப்படுவோரை கண்டதும் கண்ணீர் வடித்தாரம்மா!

4. சிலுவை மரத்தினில் இரத்தத்தை சிந்தி மரித்தாரம்மா!
உலகை மீட்டிடவே ஆண்டவர் அன்பாக வந்தாரம்மா!
அவனியில் மாண்டாரம்மா!

5. எங்கு நான் சென்றிடுவேன் இவ்வன்பை எவ்விதம்
சொல்லிடுவேன்
பங்கம் எதுவரினினும் அவர்க்காய் பாடுகள் பட்டு மரித்திடுவே

24

இயேசு கிறிஸ்துவின் அன்பு
என்றும் மாறாதது
இயேசு கிறிஸ்துவின் மாறா கிருபை
என்றும் குறையாதது.

1. உன் மீறுதல்கட்காய் அவர் காயங்கள்பட்டார்
உன் அக்கிரமங்கட்காய் அவர் நொறுக்கப்பட்டார்
உனக்காகவே அடிக்கப்பட்டார்
உன்னை உயர்த்த தன்னைத் தாழ்த்தினார்

2. பாவி என்றுன்னை தள்ளவே மாட்டார்
ஆவலாய் உன்னை அழைக்கின்றாரே
தயங்கிடாதே தாவி ஓடிவா
தந்தை இயேசுவின் சொந்தம் கொள்ளவே

25

பல்லவி

பாரீர் கெத்சமெனே, பூங்காவிலென் நேசரையே,
பாவியெனக்காய் வேண்டுதல் செய்திடும்
சத்தம் தொனித்திடுதே.

சரணங்கள்

1. தேகமெல்லாம் வருந்தி சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏக சுதன் பாடும்
பாடுகள் எனக்காயே.

2. அப்பா இப்பாத்திரமே நீக்கும் நின் சித்தமானால்
எப்படியுமும் சித்தம் செய்ய என்னை
தத்தம் செய்தேன் என்றாரே.

3. இரத்தத்தின் வேர்வையாலே மெத்த வேதனையுற்ற
இம்மானுவேலன் உள்ளமுருகியே
வேண்டுதல் செய்தனரே.

4. மும்முறை தரைமீதே, தாங்கொண்ணா வேதனையால்
முன்னவன் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே
பாதகர் மீட்புறவே.

5. அன்பின் அருள்மொழியால் ஆறுதல் அளிப்பவர்
துன்ப வேளையில் தேற்றுவாரின்றியே
நொந்து அலருகின்றார்.

6. என்னையும் தம்மைப்போல மாற்றும் இம்மா நேசத்தை
எண்ணி எண்ணியே உள்ளம் கனிந்து நான்
என்றும் புகழ்ந்திடுவேன்.

26

பல்லவி

போற்றுவோமே, போற்றுவோமே
நம் தேவரீரை, இவ்வேளையில-நன்றியுடனே

சரணங்கள்

1. துங்கன் இயேசுவே, தூயா உமக்கே
துதிகள் சாற்றிடுவேன்; மங்கா புகழும்
மகிழ்ந்து போற்றி எங்கும் துதித்திடுவேன்,
கங்குல் அற, எங்குமே ஒளி மங்கிடாமலே தங்கிடவேணும்

2. ஆழ்ந்த சேற்றினில் அமிழ்ந்த என்னையே
அணைத்து எடுத்தோனே! அழி தன்னி லெம்
பாவம் எறிந்த அன்னை உத்தமனே!
அன்றும், இன்றும், என்றும் துதிப்பேன்
மன்னவனையே, மண்ணதினிலே.

3. பாவம் போக்கியே, கோபம் மாற்றியே,
ரோகம் தொலைத்தேனே! துரோகி என்னையே
சுத்திகரித்த தூய வேந்தனே!
தூய வேந்தனே! தூயா நேயா, காயம் மாற்றியே
கருணாநிதியே, பரிகாரியே.

4 பாரில் என்னையே பரித்தெடுத்தோனே!
தாவி வந்தோலே! அக மதினிலே ஆவி ஈந்திட
அருள் நிறைந்தவனே; தரிசனம் தந்த தேவனே,
பரிசுத்தமாய் பாரில் ஜீவிக்க.

5. பூரணராகவே பூவில் வாழ்திந்திட
கிருபை அளித்தோனே, புகழை விரும்பேன்
மகிழ்வேன் தினமே, மகிமை செலுத்திடுவேன்;
கோனே! தேனே! கோதில்லாதோனே!
கானம் பாடியே துதித்திடுவேன்

27

ப்ல்லவி

உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா!
ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமானாரே

சரணங்கள்

1. கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே.

2. மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ?
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே.

3. எம்மா ஊர் சீஷர்களின்
எல்லா மன இருள் நீக்கினாரே
எம் மனக் கலக்கங்கள் நீக்கினதாலே
எல்லையில்லாப் பரமானந்தமே.

4. மரணமுன் கூர் எங்கே?
பாதாளமுன் ஜெயமெங்கே?
சாவையும் நோவையும் பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம்.

5. பரிசுத்த மாகுதலை
பயத்தோடென்றும் காத்துக்கொள்வோம்
எக்காளம் தொனிக்கையில் மறுரூபமாக
எழும்புவோம் மகிமையிலே.

28

பல்லவி

எக்காள சத்தம் வானில்
தொனித்திடவே
எம் இயேசு மாராஜனே
வந்திடுவார்

1. அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனைச் சந்திப்போமே

2. வானமும் பூமியும் மாறிடினும்
வல்லவர் வாக்கு தாம் மாறிடாதே
தேவ தூதர் பாடல் தொனிக்க
தேவன் அவரையே தரிசிப்போமே.

3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்
கண்ணீர் கவலை அங்கு இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சமாவார்.

4. கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவோம்.

29

பல்லவி

குதூகலம் நிறைந்த நன்னாள்
நடுவானில் மின்னிடுமே
இதுவரை இருந்த துன்பமில்லை
இனி என்றுமே ஆனந்தம்

சரணங்கள்

1. தளகர்த்தனாம் இயேசு நின்று
யுத்தம் செய்திடுவார் நன்று
அவர் ஆவியினால் புது பெலனடைந்து
ஜெய கீதங்கள் பாடிடுவோம்.

2. புவி மீதினில் சரீர மீட்பு
என்று காண்போம் என ஏங்கும்
மன மகிழ்ந்திடவே - அவர் வந்திடுவார்
மணவாட்டியாய் சேர்த்திடவே

3. ஜெப விழிப்புடன் வாஞ்சையாக
அவர் வருகையை எதிர் நோக்கி
நவ எருசலேமாய் தூயாலங்கிர்தமாய்
நாம் ஆயத்தமாகிடுவோம்.

4. ஜீவ ஒளிவீசும் கற்களாக
சீயோன் நகர்தனிலே சேர்க்க

அருள் சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம்.

5. தேவ தூதர்கள் கானமுடன்
ஆரவார தொனி கேட்கும்
அவர் கிருபையினால் மறுரூபமாக
நம்மை இனிதுடன் சேர்த்திடுவார்.

30

பல்லவி

வானில் காகளம் முழங்கிடவே
வாஞ்சையோடு பறந்திடுவோம்
இப்புவித் துன்பங்கள் மறைந்திடுதே
இயேசுவின் இராச்சியம் நெருங்கிடுதே (2)

அனுபல்லவி

ஆ....... ஆமென் அல்லேலூயா!
ஆமென் வாரும் இயேசுவே. (2)

1. கன்மலை வெடிப்பினில் உத்தமியாய்
கறைகள் திரைகள் அகற்றிடுவோம்
கற்புள்ள கன்னியாய் விழிப்புடனே
அவர் வரும் வேளைக்காய் காத்திருப்போம்.

2. மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த
மகிபன் உரைத்த வாக்கின்படி
மாசற்ற மணவாட்டி சபையதனை
மகிமையில் சேர்க்கவே வந்திடுவார்.

3. பாரினில் பலியாய் ஜீவன் வைத்தோர்
பாடுகள்பாதையில் ஏற்றதினால்
தியாகத்தின் மேன்மையைக் காத்துக் கொண்டோர்
அவர் போல் மாறியே பறந்திடுவார்.

4. மகிமையின் நாளும் நெருங்கிடுதே
மணவாளன் சத்தமும் கேட்டிடுதே
மகிழ்ச்சியின் நிறைவை அனுபவிக்க
ஆயத்தம் தீவிரம் அடைந்திடுவோம்.

31

1. பாவத்தின் பலன் நரகம்
ஓ பாவி நடுங்கிடாயோ?
காண்பதெல்லாம் அழியும்
காணாததல்லோ நித்தியம்!

பல்லவி

இயேசு ராஜா வருவார்,
இன்னும் கொஞ்சம் காலந்தான்,
மோட்ச லோகம் சேர்ந்திடுவோம்

2. உலக இன்பம் நம்பாதே
அதின் இச்சை யாவும் ஒழியும்!
உன் ஜீவன் போகும் நாளிலே
ஓர் காசும் கூட வராதே!

3. உன் காலமெல்லாம் போகுதே
உலக மாய்கையிலே;
ஓ தேவ கோபம் வருமுன்
உன் மீட்பரண்டை வாராயோ?

4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே
கல்வாரி மலைதனிலே;
உன் பாவம் யாவும் நீங்கிப்போம்;
அதில் ஸ்நானம் செய்வதாலே!

5. மாபாவியான என்னையும்
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய்!

32

ஊற்றுத்தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கிவா
ஆசீர்வதியும் என் நேசக் கர்த்தரே
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

1. கன்மலையை பிளந்து வனாந்திரத்திலே
கர்த்தாவே உன் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும் (2)
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே (2) ஊற்றுத்

2. ஜீவத்தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுவீர்
கனி தந்திட நான் செழிந்தோங்கிட - (2)
கர்த்தரின் கரத்தில் நித்தம் கனம் பெற்றிட (2) ஊற்றுத்

3. திறக்கப்பட்டதாம் ஊற்று சிலுவையிலே
இரட்சகரின் காயங்களில் வெளிப்படுதே
பாவக்கறைகள் முற்றும் நீங்கிட - (2)
பரிசுத்த சமூகத்தில் ஜெயம் பெற்றிட - (2) ஊற்றுத்

4. கிருபையின் ஊற்றுக்கள் பெருகிடவே
புது பெலன் அடைந்து நான் மகிழ்ந்திடவே
பரிசுத்தத்தைப் பயத்துடனே - (2)
பூரண மாக்கிட தேவ பெலன் தாருமே (2) ஊற்றுத்

33

பல்லவி

சத்திய வேதம் பக்தரின் கீதம்
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்.

அனுபல்லவி

எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்

சரணங்கள்

1. நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்த பசும்பொன் தெளித்திடும் தேன்,
இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்மா உயிரடையும்.

2. பேதைகளிடம் ஞானம் அருளும்
வேத புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதன் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும்.

3. வேதப்பரியர் தேவப் புதல்வர்
சேதமடையா நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார்.

4. உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளங் கபடெல்லாம் அகற்றும்
கடிந்து கொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழி நடத்தும்.

5. கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன்மலையும் நொறுக்கிடும்
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இருபுறமும் கருக்குள்ளதே.

6. வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும்.

34

பல்லவி

எங்கும் புகழ் யேசு ராசனுக்கே
எழில் மாட்சிமை வளர் வாலிபரே!

அனுபல்லவி

உங்களையல்லவோ உண்மை வேதங் காக்கும்
உயர்வீரரெனப் பக்தா ஓதுகிறார்.

சரணங்கள்

1. ஆயிரத் தொருவர் ஆவீரல்லோ நீரும்
அதை அறிந்து துதி செய்குவீர்
தாயினும் மடங்கு சதம் அன்புடைய
சாமி யேசுவுக்கிதயம் தந்திடுவீர்.

2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்குக்
கடன்பட்டவர் கண்திறக்கவே;
பல்வழி அலையும் பாதைத்தப்பினோரைப்
பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர்.

3. தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும்
தழைப்பதல்லோ தகுந்த கல்வி?
பாழுந்துர்க்குணமும் பாவச் செய்கையாவும்
பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றோ?

4. சுத்த சுவிசேஷம் துரிதமாய்ச் செல்ல
தூதர் நீங்களே தூயன்வீரரே;
கர்த்தரின் பாதத்தில் காலைமாலை தங்கிக்
கருணை நிறை வசனம் கற்றிடுவீர்.

35

1. இயேசுவின் பின்னே,
போகத் துணிந்தேன்,
பின்னோக்கேன் நான்
பின்னோக்கேன் நான்

2. உலகம் என் பின்னே,
சிலுவை என் முன்னே,
பின்னோக்கேன் நான்,
பின்னோக்கேன் நான்,

3. கஷ்டம் என் பாக்கியம்
நஷ்டம் என் லாபம்,
பின்னோக்கேன் நான்,
பின்னோக்கேன் நான்,

4. முன்வைத்த காலை பின்
வைக்க மாட்டேன்
பின்னோக்கேன் நான்,
பின்னோக்கேன் நான்,

5. இயேசுவை நம்பி,
மோசம் போவதில்லை
பின்னோக்கேன் நான்,
பின்னோக்கேன் நான்.

36

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசு வண்டை

சரணங்கள்

1. வாழ்நாளையெல்லாம் வீண் நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக் கொள்வார்.

2. கட்டின வீடும், நிலம், பொருளும்
கண்டிடும் உற்றார், உறவினரும்
கூடு விட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை.

3. அழகும் மாயை நிலைத்திடாதே
அதை நம்பாதே மயக்கிடுமே
மரணம் ஓர் நாள் சந்திக்குமே
மறவாதே உன் ஆண்டவரை.

4. வானத்தின் கீழே, பூமி மேலே
வானவர் இயேசு நாமம் அல்லால்
இரட்சிப்படைய வழியில்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே.

5. தீராத பாவம் வியாதியையும்
மாறாத உந்தன் பலவீனமும்
கோரக்குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய.

37

பல்லவி

எனக்கொருவர் இருக்கின்றார் - அவர்
என்னையும் நேசிக்கின்றார்
காட்டினிலே அலைந்த என்னை
கருணையாய்த் தேடுகின்றார்
அவர் தாம் இயேசு (4)

1. கானகத்து ஆட்டினைப்போல்
வழிதப்பி திரிந்த என்னை,
மேய்ப்பனவர் தேடி வந்து
என்னையும் சேர்த்துக்கொண்டார்.

2. என்னையவர் தெரிந்ததினால்
மன்னரை அறிந்தேனே
பரத்திலென்னை சேர்த்திடுவார்,
பரிசுத்தம் அடைந்திடுவேன்.

38

பல்லவி

கிருபையிதே தேவ கிருபையிதே
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

சரணங்கள்

1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவியப் பாதையிலே - இயேசு பரன்
அனுதினமும் வழி நடந்தே
அவரது நாமத்தைக் காத்தனரே

2. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் - வைத்தியராய்
இயேசுவல்லால் சார்திடவோ
இகமதில் வேறெமக் காருமில்லை

3. அன்பின் அகலமும் நீளம் உயரமும்
ஆழமும் அறிந்துணர - அனுக்கிரகித்தார்
கிறிஸ்துவிலே ஒரு மனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய்

4. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் - பெற்றிடவே
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினை காத்துக்கொள்வோம்.

5. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன்
வாருமென்றழைக்கின்றாரே - வாருமென்பீர்
சியோனே நீ பார் உனக்காய்
நாயகன் இயேசு தாம் வெளிப்படுவார்.

39

பல்லவி

தேவ கிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றித் துதித்துப்பாடி
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்.

சரணங்கள்

1. நெருக்கப்பட்டோம் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே.

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது.

3. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே.

4. நித்திய தேவனாம் சத்திய பரன்தாம்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே.

40

பல்லவி

தம் கிருபை பெரிதல்லலோ!
என் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே.

சரணங்கள்

1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அது போதுமே
சுகமுடன் தம் பலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே

2. நிர் மூலமாகாததும் நிற்பதும் உம் கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே
நித்திய ஜீவன் பெற்றுக்கொண்டேன்
காத்துக்கொள்ள கிருபை தாருமே

3. தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும்
பலவீன சரீரத்திலும்
போதுமே உம்கிருபை தாருமே

4. தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை
ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே
ஜெப வரம் கிருபை தாருமே.

5. கர்த்தர் வெளிப்படும் நாள் அளித்திடும், கிருபை
காத்திருந்தே அடைந்திடவே
இயேசுவே உம்மைச் சந்திக்கவே
இரக்கமாய் கிருபை தாருமே.

41

பல்லவி

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே.

சரணங்கள்

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்குத் தங்கிடுவேன்.

2. என்னை நோக்கி கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே.

3. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே.

4. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீர பாதை காட்டினீரே
தமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே.

5. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீர பாதை காட்டினீரே
வளர்ந்து கனிதரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன்.

42

கிறிஸ்துவின் அடைக்கலத்தில்
சிலுவையின் மாநிழலில்
கன்மலை வெடிப்பதனில்
புகலிடம் கண்டு கொண்டோம்.

1. கர்ச்சிக்கும் சிங்கங்களும்
ஓநாயின் கூட்டங்களும்
ஆடிடைக் குடிலினில்
மந்தைகள் நடுவினில்
நெருங்கவும் முடியாது.

2. இரட்சிப்பின் கீதங்களும்
மகிழ்ச்சியின் சப்தங்களும்
கார்மேக இருட்டினில்
தீபமாய் இலங்கிடும்
கர்த்தரால் இசை வளரும்.

3. தேவனின் இராஜியத்தை
திசை எங்கும் விரிவாக்கிடும்
ஆசையில் ஜெபித்திடும்
அதற்கென்றே வாழ்ந்திடும்
யாருக்கும் கலக்கம் இல்லை.

4. பொல்லோனின் பொறாமைகளும்
மறைவான சதி பலவும்
வல்லோரின் கரத்தினில்
வரைபடமாயுள்ள
யாரையும் அணுகாது.

43

1. வானம் பூமி யாவற்றிலும் - இயேசு மேலானவர்;
மனிதர், தூதர், பேய்தானும் - அவர்முன் விழுவார்.

பல்லவி

நான் நம்புவேன், நான் நம்புவேன்,
இயேசு எனக்காய் மரித்தார்
பாவம் நீங்க சிலுவையில், உதிரம் சிந்தினார்.

2. இரட்சகர் உயிர்விட்டதும் - எந்தனுக்காவே
வேறெந்த வாக்குவாதமும் - வேண்டியதில்லையே.

3. பாவியின் பயம் யாவையும் - நீக்கும் நாமம் இது
நரக தண்டனையையும் - தொலைத்திடும் இது.

4. பாவச் சங்கிலி யாவையும் - தறிப்பார் என்னேசு;
வேதாளத்தின் தலையையும் - நசுக்குவாரேசு.

5. பாவத்தில் மாளும் யாவர்க்கும் - உயிரளிப்பாரே;
பெலனற்ற ஆத்மாவுக்கு - சக்தி கொடுப்பாரே;

44

நடந்து வந்த பாதையெல்லாம்
எம்மைச் சுமந்து வந்த அன்பரல்லவோ

நீர் இருக்க பயம் ஒன்றும் இல்லையே
உம் கரம் இருக்க ஜெயம் என்றும் எமக்கே - நடந்த

1. யோர்தான் கரை புரளும் - வல்
எரிகோ மதில் உயரும்
செங்கடல் அலை புயுளும் (2) - பார்வோன்
சேனைகள் அணி திறளும் (2) - நீர்

2. வருடங்களை நன்மையினால் முடி
சூடியே மகிழ்ந்திருக்கும்
பாதை நெய்யாய்ப் பொழியும் - கொடும்
வாதைகள் மறைந்தோடும் - நீர்

3. ஒரு போதும் நடந்ததில்லை - புது
பாதைகள் நீண்டிருக்கும்
சோதனை தொடர்ந்திருக்கும் - அதில்
வேதனை மறைந்திருக்கும் - நீர்

45

பல்லவி

சேனைகளின் கர்த்தர் நல்லவரே
சேதமன்றி நம்மைக் காப்பவரே
சோர்ந்திடும் நேரங்கள் தேற்றிடும் வாக்குகள்
சோதனை வென்றிடத் தந்தருள்வார்.

அனுபல்லவி

எக்காலத்தும் நம்பிடுவோம்
தக்கற்ற மக்களின் மறைவிடம்
பக்க பலம் பாதுகாப்பும்
இக்கட்டில் ஏசுவே அடைக்கலம்.

சரணங்கள்

1. வெள்ளங்கள் புரண்டு மோதினாலும்
உள்ளத்தின் உறுதி அசையாதே
ஏழு மடங்கு நெருப்பு நடுவிலும்
ஏசு நம்மோடங்கு நடக்கின்றார்.

2. ஆழத்தினின்றும் நாம் கூப்பிடுவோம்
ஆத்திரமாய் வந்து தப்புவிப்பார்
கப்பலின் பின்னணி நித்திரை செய்திடும்
கர்த்தர் நம்மோடுண்டு கவலை ஏன்

3. காத்திருந்து பெலன் பெற்றிடுவோம்
கர்த்தரின் அற்புதம் கண்டிடுவோம்
ஜீவனானாலும் மரணமானாலும் நம்
தேவனின் அன்பில் நிலைத்திருப்போம்

4. ஏசு நம் யுத்தங்கள் நடத்துவார்
ஏற்றிடுவோம் என்றும் ஜெயக்கொடி
யாவையும் ஜெயித்து வானத்தில் பறந்து
ஏசுவைச் சந்தித்து ஆனந்திருப்போம்

46

திருக்கரத்தால் தாங்கியென்னை
திருச்சித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினம் நீர் வனைந்திடுமே

1. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழி நடத்தும்.

2. ஆழ்கடலில் அலைகளினால்
அசையும் போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு
சேர்ந்திடுவேன் அவர் சமூகம்.

3. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்பக் கானான் தேசமதை.

47

பல்லவி

என்னை நேசிக்கின்றாயா?
என்னை நேசிக்கின்றாயா?
கல்வாரி காட்சியைக்கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பாயோ?

1. வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால்
தேடி இரட்சிக்க பிதா என்னை அனுப்பிடவே
ஓடி வந்தேன் மானிடனாய்.

2. பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப் பார்
பரிகாச சின்னமாய் சிலுவையிலே
பலியானேன் நான் உனக்காய்.

3. பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாசம் பொங்க அழைக்கிறேன் பார்
உன் பாவம் யாவுமே சுமப்பேன் என்றேன்
பாதம் தன்னில் இளைப்பாற வா.

4. உம்மை நேசிக்கின்றேன் நான்
உம்மை நேசிக்கின்றேன் நான்
கல்வாரி காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனோ?

48

1. இயேசுவைப் போல் அழகுள்ளோர் யாரையும் இப்புவினில்
இதுவரை கண்டதில்லை காண்பதுமில்லை

பல்லவி

பூரண அழகுள்ளவரே பூவில் எந்தன் வாழ்க்கையாலே
நீரே போதும் வேறே வேண்டாம் எந்தன் அன்பர் இயேசுவே
மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டிடமாட்டேன்.

2. சம்பூரண அழகுள்ளோர் என்னை மீட்டுக் கொண்டீரே
சம்பூரணமாக என்னை உந்தனுக்கீந்தேன் - பூரண

3. எருசலேம் குமாரிகள் எத்தனை யனைந்தோராய்
உம்மில் உள்ள எந்தன் அன்பை நீக்க முயன்றார் - பூரண

4. லோக சுக மேன்மை யெல்லாம் எந்தனை கவர்ச்சித்தால்
பாவ சோதனைகளெல்லாம் என்னை சோதித்தால் - பூரண

5. தினந்தோறும் உம்மில் உள்ள அன்பு என்னில் பொங்குதே
நேசரே நீர் வேகம் வந்து என்னைச் சேருமே - பூரண

49

பல்லவி

தேவ சாயல் ஆக மாறி
தேவனோடிருப்பேன் - நானும்

சரணங்கள்

1. அந்த நாளும் நெருங்கிடுதே
அதி விரைவாய் நிறைவேறுதே
மண்ணின் சாயலை நான் களைந்தே - தம்
விண்ணவர் சாயல் அடைவேன்.

2. பூமியின் கூடாரம் என்றும்
பெலீனமே அழிந்திடுமே

கை வேலையல்லாத பொன்வீடு
கண்டடைந்து வாழ்ந்திடுவேன்.

3. சோரும் உள்ளான மனிதன்
சோதனையில் பெலமடைய
ஆற்றி தேற்றிடும் தேற்றரவாளன்
ஆண்டவர் என்னோடிருப்பார்.

4. ஆவியின் அச்சார மீந்தார்
ஆயத்தமாய் சேர்ந்திடவே
ஜீவனே எனது கிறிஸ்தேசு
சாவு எந்தன் ஆதாயமே.

5. காத்திருந்து ஜெபிப்பதினால்
கழுகு போல பறந்தெழும்பி
ஜீவ யாத்திரை ஓடி முடித்து
ஜீவ கிரீடம் பெற்றிடுவேன்.

6 மூன்றில் ஒன்றாய் ஜொலிப்பவரை
முகமுகமாய்த் தரிசித்திட
வாஞ்சையாய்த் தவிக்கும் எனதுள்ளம்
வாரும் என்று கூப்பிடுதே -

50

1. ஜீவனுள்ள தேவனே வாரும்
ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்.

பல்லவி

தேவனே நீர் பெரியவர்
தேவனே நீர் பரிசுத்தர்
தேவனே நீர் நல்லவர்
தேவனே நீர் வல்லவர்

2. பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் என் பாவம் போக்கவே
பாதகன் போல் தொங்கினீரல்லோ!

3. ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல்
நேச ஆவி வீச செய்குவீர்.

4. வாக்குத் தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்
ஆவியின் நிறைவைத் தாருமே.

5. நியாயத் தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேசர் வர காலமாகுதே
மாயலோகை நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க மாட்டீரோ.

51

1. என்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உன்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
உன்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா

2. மாம்சக்கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா.

3. திரும்ப விழாது பாரும் இயேசு நாயகா
கிருபை இழாதுகாரும் இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
கிருபை இழாதுகாரும் இயேசு நாயகா.

52

பல்லவி

உறக்கம் தெளிவோம்
உற்சாகம் கொள்வோம்
உலகத்தின் இறுதிவரை
கல்வாரி தொனிதான்
மழை மாரி பொழியும்
நாள்வரை உழைத்திடுவோம்.

1. அசுத்தம் களைவோம் அன்பை அழைப்போம்
ஆவியில் அனலும் கொள்வோம்
அவர் படை ஜெயிக்க நம்மிடைக்கருத்து
வேற்றுமையின்றி வாழ்வோம்.

2. அச்சம் தவிர்ப்போம் தைரியம் கொள்வோம்
சரித்திரம் சாட்சிக்கூறும்
இரத்தச் சாட்சிகள் நம்மிடை தோன்றி
நாதனுக்காய் மடிவோம்.

3. கிறிஸ்தவுக்காய் இழந்தவர் எவரும்
தரித்திரர் ஆனதில்லை இராச்சிய
மேன்மைக்காய் கஷ்டம் அடைந்தோர்
நஷ்டப் பட்டதில்லை.

4. உயிர் பெறுவீர் ஒன்று கூடுவீர்
உலர்ந்த எலும்புகளே
நீங்கள் அறியா ஒருவர்
உங்கள் நடுவில் வந்து விட்டார்.

53

பல்லவி

பொங்கி வரும் அருள் மனிதரை மாற்றிடுதே
மங்கிப் போன மனம் புது வாழ்வில் மலர்ந்திடுதே

1. தீயவர் திருடரும், கொடியவர்
கொலைஞரும் இயேசுவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள
வாழ்விற்கு அழைக்கிறார் ஓடியே வா

2. தேவனின் ஆவியால் விடுதலை வாழ்வினை
பெற்றவர் பலருமுண்டு
இயேசு மகா ராஜன்
உன்னைத்தான் அழைக்கிறார் நம்பி நீ ஓடியேவா

3. கிருபையின் நாட்களைத் தயவுடன் ஏற்றிட
கனிவுடன் வேண்டுகிறோம்
வருகையின் நாளினில்
வருந்திட வேண்டாம் நீ அழைக்கிறார் ஓடியே வா.

54

உம்மைப் போல் யாருண்டு
என்தன் இயேசு நாதா
இந்தப் பார்தலத்தில்
உம்மைப் போல் யாருண்டு
பாவப் பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர்!

1. உலகம், மாமிசம், பிசாசுக்கடியில்
அடிமையாகவே, பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம் போல் நடந்தேன், ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா, இயேசு நாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
அடிமை உமக்கே இனி நான்.

2. இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும், உருக்கும், உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்

ஐம் பொறிகளையும் உமக்குள் அடக்க
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய்த் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும்.

3. வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தர் நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக்கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க, வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்.

55

1. எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னைச் சந்திக்க வந்திடுவாரே

பல்லவி

இயேசு போதுமே இயேசு போதுமே
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே!

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவைத் தினம் தேற்றிடுவார்
மரண பள்ளத்தாக்கில் காத்திடுவார்

4. மனிதர் என்னைக் கை விட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளி விட்டாலும்

56

1. ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்
ஆசையவர் என் ஆத்துமாவிற்கே
ஆசிகளருளும் ஆனந்தனந்தமாய்
ஆண்டவர் இயேசு போல் ஆருமில்லையே

பல்லவி

இயேசு வல்லால் இயேசு வல்லால்
இன்பம் இகத்தில் வேறு எங்குமில்லையே
இயேசு வல்லால் இயேசு வல்லால்
இன்பம் வேறெங்குமில்லையே

2 தந்தை தாயுமுன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுவேனோ
தாங்கிடுவேனென் நீதியின் கரத்தால்
தாபரமும் நல்ல நாதனுமென்றார்.

3 கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே
கிருபையும் வெளியாகினதே
நீக்கியே சாவினை நற்சுவிசேஷத்தால்
ஜீவன் அழியாமை வெளியாக்கினார்.

4 மகிமையும் நம்பிக்கை சந்தோஷமும்
மகிழ்ச்சியின் கிரீடமாகவே
அப்போஸ்தலர் தம் ஊழியத்தாலே
ஆதி விஸ்வாசத்தில் வளர்ந்திடுவோம்.

57

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மைப் போல் ஒரு தேவனைப் பூமியில் அறிந்திடேன்
உயிர் தந்த தெய்வமே நீர்

பல்லவி

ஆ! ஆனந்தம் ஆனந்தமே!
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேவே எந்தன் ஆருயிரே!

2 பெற்ற தாயும் என் தந்தையுமானவரே
மற்ற எல்லா மெனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடுமே
நீரோ வாக்கு மாறாதவரே.

3 உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மை யல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வமே நீர்.

4 பொன் வெள்ளியுமோ பெரும்பேர் புகழோ
பண ஆசையும் வீண் அல்லவோ!
பரலோகத்தின் செல்வமே என் அரும் இயேசுவே
போதும் எனக்கு நீரே.

5 எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
தந்த வாலிப நாட்களிலே
இந்த மாய உலகத்தை வெறுத்திட அளித்தீரே
பரிசுத்த ஜீவியமே.

பல்லவி

அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அக மகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தும் நித்தும் நான் நினைப்பேனே.

1. அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம்பாதம் பற்றிடுவேனே

2. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனை கிருபை சூழ்ந்து கொள்ளுதே

3. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னைக் குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக் கொண்டீரே
அழுகையைக் களிப்பாக மாற்றி விட்டீரே!

4. பாவங்களைப் பாரா தென்னைப் பற்றிக் கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சண்யத்தின் சந்தோஷத்தைத் திரும்ப தந்தீரே
உற்சாக ஆவி என்னைத் தாங்கச் செய்தீரே.

59

1. சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே
சர்வ வல்ல ஏசு என்னை நேசித்தார்
பெற்றதாம் நன்மைகள் ஒவ்வொன்றாய் எண்ணியே
பேரன்பு பொங்க என்றும் பாடுவேன்.

பல்லவி

ஆர்ப்பரித்து நான் ஆனந்தங் கொள்வேன்
ஆண்டவர் சமூகம் என்னைத் தேற்றுதே
துன்பங்கள் யாவுமே துரிதமாய் நீங்குதே
இன்ப ஏசு நாமத்தில்.

2 பேரின்ப கீதங்கள் என்னில் பொங்குதே
போன நாட்கள் என்னை கர்த்தர் தாங்கினார்
சோதனை சூழ்ந்து என் நம்பிக்கை குன்றினும்
சோர்ந்தழியாமல் என்னைக் காத்ததால்

3 இரட்சிப்பின் கீதம் என்னில் பொங்குதே
இரட்சகர் என் பாவம் முற்றும் மன்னித்தார்
மானிடர் மாறினும் அன்பை விட்டோடினும்
மா தேவ அன்பில் என்னைக் காத்ததால்

4 ஆனந்தக் கீதம் என்னில் பொங்குதே
ஆரவாரத்தோடே இயேசு தோன்றுவார்
ஆவலாய் விழித்தே ஆவியில் ஜெபித்தே
ஆயத்தமாய் நான் காத்து நிற்பதால்

5 சீயோனின் கீதம் என்னில் பொங்குதே
சீக்கிரம் வந்தென்னைச் சேர்த்துக் கொள்ளுவார்
பொன்முடி வேந்தனாம் எந்தை என் இயேசுவின்
பொன் மாளிகை நான் கிட்டிக் சேர்வதால்

60

பல்லவி

நன்றியால் பாடிடுவோம் - 2
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைத்தே - ஆ ஆ 2

சரணங்கள்

1 செங்கடல்தனை நடுவாய்ப் பிரித்த
எங்கள் தேவனின் கரமே
தாங்கியதே இந்நாள் வரையும்
தயவாய் மாதயவாய் - ஆ ஆ

2 உயிர்ப்பித்தே உயர்த்தினார் உன்னதம் வரை
உடன் சுதந்தரராய் இருக்க
கிருபையின் மகத்துவமது - வருங்
காலங்களில் விளங்க - ஆ ஆ

3 அழைக்கப் பட்டோரே நீர் உன்னத
அழைப்பினை அறிந்தே வந்திடுவீர்
அளவில்லா திரு ஆக்க மிதனை
அவனியோர்க் களிப்பீர் - ஆ ஆ

4 சீயோனை பணிந்துமே கிறிஸ்தேசு ராஜனாய்
சீக்கிரம் வருவார்
சிந்தை வைப்போம் சந்திக்கவே
சீயோனின் ராஜனையே - ஆ ஆ

61

பல்லவி

என் நேசர் இயேசுவை நான் என்றும் பாடுவேன்
என் ஆத்துமாவை நித்தம் நேசிக்கின்றவர்
என் நேசர் லீலியிலும் வெண்மையானவர்
என் வாழ்வில் நறுமணம் ஈந்தவர்

சரணங்கள்

1 பெலனற்றுப் போகையில் என் பெலனவரே
இன்ப துன்ப நேரத்தில் என் நண்பரவரே
பொற்தள வீதியில் பாடி மகிழ
என் நேசர் இயேசு மீட்டுக் கொண்டாரே

2 கடும்புயல் சீறிடும் அலைகள் மோதிடும்
கண்ணுக் கெட்டா கரைதனை உள்ளம் நாடிடும்
பொற்கரம் நோக்கி என் கண்கள் தொடுப்பேன்
என் நேசர் இயேசு மீட்டுக் கொள்வாரே

3 எட்டியாய் கசந்திட்ட என் வாழ்வு இனித்திட
எத்தனாய் அலையாது நான் நித்தம் பின் செல்ல
ஏந்திட்டார் பொற்கரத்தில் ஆவலாய் என்னை
எந்நாளும் இன்ப துதிகள் பாடவே

62

1. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினார்
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

பல்லவி

ஆ அனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்.

2. சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
"ஜீவன் பெற்றுக்கொள்" என்றுரைத்தார்

3. எந்தச் சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பரிக்காது காத்துக் கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக் கொள்வேன்.

4. அவர் வரும் நாளினில் எனைக்கரம் அசைத்து,
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக்கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப் பாடியே மகிழ்ந்திடுவேன்.

63

பல்லவி

என் தேவனே உம்மை உயர்த்திடுவேனே
உம் நாமத்தை என்றும் துதித்திடுவேனே

சரணங்கள்

1 எழைக்குப் பெலனான கர்த்தர் நீரே
எளியனுக்கு திடனான தேவன் நீரே
பெருவெள்ளத்தில் தப்பிக்கொள்ள அடைக்கலம் நீரே
வெயிலுக்கு ஒதுங்கிக்கொள்ள நிழலானோர் நீரே.

2 மரணத்தை ஜெயமாக விழுங்கினீரே
மானிடரின் கண்ணீரைத் துடைப்பவரே
நம்பினோரின் நிந்தைகளை நீக்குபவரே
நித்தம் நித்தம் அதிசயங்கள் செய்பவர் நீரே

3. உமக்காக என்னை உருவாக்கினீரே
உதிர கிரயம் ஈந்து என்னை மீட்டவரே
பெயரைச் சொல்லி பூரணமாய் அழைத்துக் கொண்டீரே
புதிய தொன்று என்னிலே செய்திட நீரே

4 கல்விமானின் நாவை எனக்குத் தருபவரே
காலை தோறும் கற்றுக்கெள்ள செய்பவரே
நீதியின் கரத்தால் என்னைத் தாங்குபவரே
நித்திய நித்திய வெளிச்சமாக இருப்பவர் நீரே

64

சந்தோஷம் பொங்குதே (2)
சந்தோஷம் என்னில்
பொங்குதே அல்லேலூயா
இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே

1. வழி தப்பி நான் திரிந்தேன்-பாவ
பழியதை சுமந்தலைந்தேன்
அவர் அன்பு குரலே
அழைத்தது என்னையே
அந்த இன்ப நாளில்
எந்தன் பாவம் நீங்கிற்றே

2. சத்துரு சோதித்திட தேவ
உத்திரவுடன் வருவான்
ஆனால் இயேசு கைவிடார்
தானாய் வந்து இரட்சிப்பார்
இந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே

3. பாவத்தில் ஜீவிப்பவர்
பாதாளத்தில் அழிந்திடுவார்
நானோ பரலோகத்தில்
நாளும் பாடல் பாடிடுவேன்
என்னில் வாழும் இயேசுவோடு
என்றும் வாழுவேன்.

65

அலையலையாய் அலையினூடே
அல்லேலூயா பாடிட வா (2)

1. அலை கடலில் மீன் பிடிப்போனே - நீ
வலை கிழிய மீன் பிடிக்க வா
கலைகளெல்லாம் கைவிட்டதோ - உன்
வலையை வலப்புறம் வீச வா

2. அலைகடலைக் கடந்து சென்றோனே - நீ
வலைகளிலே சிக்கி விட்டாயோ
மலைதனிலே சிலுவையண்டை - பார்
விலைமதியா விடுதலையுண்டே

3. அலைகளினால் அமிழும் நண்பனே - நீ
அலைகளின் மேல் நடந்த நாதராம்
தலைவன் இயேசு கரம் பிடித்திட்டால்
அலைகளின் மேல் அழைத்துச் செல்லுவார்

4. பல வழிகள் பார்த்து நிற்கும் நீ - பார்
மலைகளிலே மாளும் மாந்தரை
அலையலையாய் மாந்தர் செல்கிறார் - உன்
வலையுடனே வேகமாக வா

66

பல்லவி

குயவனே, குயவனே!
படைப்பின் காரணனே!
களி மண்ணான என்னையுமே
கண்ணோக்கி பார்த்திடுமே!

சரணங்கள்

1. வெறுமையான பாத்திரம் நான்
வெறுத்துத் தள்ளாமலே
நிரம்பி வழியும் பாத்திரமாய்
விளங்க செய்திடுமே!
வேதத்தில் காணும் பாத்திரமெல்லாம்
இயேசுவை போற்றிடுமே!
என்னையும் அவ்வித பாத்திரமாய்
வனைந்து கொள்ளுமே

2. விலை போகாத பாத்திரம் நான்
விரும்புவார் இல்லையே!
விலை இல்லா உம் கிருபையால்
உகந்ததாக்கிடுமே!
கறைகள் யாவும் நீக்கி என்னைத்
தம்மைப் போல் ஆக்கிடுமே!

உடைத்து என்னை உந்தனுக்கே
உடமை ஆக்கிடுமே!

3. மண்ணாசையில் நான் மயங்கினேன்
மெய்வழி விட்டகன்றேன்
கண்போன போக்கை பின் பற்றினேன்
கண்டேன் இல்லை இன்பமே!
காணாமல் போன பாத்திரம் என்னைத்
தேடிவந்த தெய்வமே!
வாழ்நாள் எல்லாம் உம் பாதம் செல்லும்
பாதையில் நடத்திடுமே!

67

1. பாவப்பாரமே கொண்டு, துர்குணத்தால் நிறைந்து
சாப இருளின் கஷ்டத்தை யடைந்தேன்,
இன்ப சத்தத்தைக் கேட்டு இயேசுவண்டையே செல்ல
அன்பாகவே இளைப்பாறுதல் தந்தார்.

பல்லவி

குருசண்டை, குருசண்டை
குற்றங்குறை யெல்லாங் குலைத்தே விட்டார்,
எல்லாப் பாவம் நீங்கின இருள் ஒளியாயின
ஏற்றுக் கொண்டேன் இயேசுவைக் குருசண்டை

2. தினம் போகிறேன் அங்கே புது ஜீவன் பெறவே
தான மான க்ருபையாலே சந்தித்தார்,
ஈன சோதனை வந்தால் அதைக் ஜெயித்திடவே
மனத் தாழ்மையான ஜெபத்தைச் செய்வேன்.

3. ஜீவியத்தில் வறட்சி, வந்து வாதிக்கும்போது
ஆவியாலே குருசை நோக்கிப் பார்ப்பேன்,
பாவிக்காகவே இயேசுபட்ட பாட்டைப் பார்க்கையில்
மேவிச் சுமக்கப் பெலனை யடைவேன்.

4. ஆத்துமா அங்கலாய்ப்பில், அவர் பக்கமே நிற்பேன்
அந்தோ அடியேனுக் காறுதல் செய்வார்!
ஒப்புக் கொடுப்பாயானால் ஜீவனையே பெறுவாய்
எப்பொழுதுமே தப்பாம லிருப்பாய்.

68

பல்லவி

என் இயேசுவே நான் என்றும் உந்தன் சொந்தம்
என் ராஜனே அனுதினமும் வழிநடத்தும்

சரணங்கள்

1. உளையான சேற்றினின்றே
தூக்கியே நிறுத்தினீரே
உந்தனை நான் மறவேன்
உந்தனை போற்றிடுவேன்

2. அலைமோதும் கடலதனை
அடக்கியே அமர்த்தினீரே
வார்த்தையின் வல்லமையை
என்றுமே காணச் செய்யும்

3. தாயினும் அன்பு வைத்தே
தாங்கியே காப்பவரே
ஜீவிய காலமெல்லாம்
உம்மையே பின் செல்லுவேன்

69

1. சேனையதிபன் நம் கர்த்தருக்கே
செலுத்துவோம் கனமும் மகிமையுமே
அற்புதமே தம் அன்பெமக்கு - அதை
அறிந்தே அகமகிழ்வோம்.

பல்லவி

ஜெயகிறிஸ்து முன் செல்கிறார்
ஜெயமாக நடத்திடுவார்

ஜெயகீதங்கள் நாம் பாடியே
ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே -2

2. தாய் மறந்தாலும் நான் மறவேன்
திக்கற்றோராய் விட்டு விடேன்
என்றுரைத் தெம்மைத் தேற்றுகிறார்
என்றும் வாக்கு மாறிடாரே.

3. மேய்ப்பனில்லாத ஆடுகட்கே
நானே நல்ல மேய்ப்பன் என்றார்,
இன்ப சத்தம் பின் சென்றிடுவோம்
இன்ப பாதை காட்டிடுவார்.

4. சத்ருவின் கோட்டை தகர்ந்தொழிய
சத்தியம் நித்தியம் நிலைத்தோங்க
சாத்தானின் சேனை நடுங்கிடவே - துதி
சாற்றி ஆர்ப்பரிப்போம்.

5. கறை திரை முற்றும் நீங்கிடவே
கர்த்தர் நம்மைக் கழுவிடுவார்
வருகையில் எம்மைச் சேர்க்கும்வரை
வழுவாமல் காத்துக் கொள்வார்.

70

பல்லவி

காலையும், மாலை, எவ்வேளையும் கர்த்தரைக்
கருத்துடன் பாடிடுவேன்.

அனுபல்லவி

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், எனதூதர்
பாடிடும் தொனி கேட்குதே

சரணங்கள்

1. கர்த்தர் என் வெளிச்சம், ஜீவனின் பெலனும்
கிருபையாய் இரட்சிப்புமானார்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன்.

2. எனக்கெதிராய் ஓர் பாளய மிறங்கி
என் மேல் ஓர் யுத்தம் வந்தாலும்
பயப்படேன் எதிராளி நிமித்தமாய் செவ்வையான
பாதையில் நடத்திடுவார்.

3. ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் தம் ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்து நாடிடுவேன்.

4. தீங்கு நாளில் தம் கூடார மறைவில்
தேடிச் சேர்த்தென்னை மறைப்பார்,
உன்னதத்தில் மறைவாக ஒளித்தென்னைப் பாதுகாத்து
உயர்த்துவார் கன் மலைமேல்.

5. எந்தன் முகத்தைத் தேடுங்கள் என்று
என் கர்த்தர் சொன்ன தினாலே
தம் முகத்தைத் தேடுவேனே கூப்பிடும் என் சத்தம்கேட்டு
தயவாகப் பதிலளிப்பார்.

6. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்
கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்வார்
எந்தன் உள்ளம் ஸ்திரமாகத் திடமாகக் கர்த்தருக்கே
என்றென்றும் காத்திருக்கும்.

7. எனக்காக யாவும் செய்து முடிப்பார்
என் கர்த்தர் வாக்கு மாறிடார்
தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர் விருப்பமும்
தவறாமல் நிறைவேற்றுவார்.

71

பல்லவி

இயேசு என் பரிகாரி
இன்ப இயேசு என் பரிகாரி - என்
ஜீவிய நாட்களெல்லாம் - இன்ப
ராஜா என் பரிகாரி.

1. என்ன துன்பங்கள் வந்தாலும்
என்ன வாதைகள் வந்தாலும்,
என்ன கஷ்டங்கள் வந்தாலும்,
இன்ப இராஜா என் பரிகாரி!

2. சாத்தான் என்னை எதிர்த்தாலும்
சத்ரு என்னைத் தொடர்ந்தாலும்
சஞ்சலங்கள் வந்தபோதும்
இன்ப இராஜா என் பரிகாரி!

3. பெரும் வியாதிகள் வந்தாலும்,
கடும் தோல்விகள் நேர்ந்தாலும்,
பல சோதனை சூழ்ந்தாலும்,
இன்ப இராஜா என் பரிகாரி!

4. எனக்கென்ன குறை உலகில்
என் இராஜா துணை எனக்கு,
என் ஜீவிய நாட்களெல்லாம்,
இனப் இராஜா என் பரிகாரி!

72

1. தொல்லைக் கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்

சோதனை வரும் வேளையிலே
சொற் கேட்டும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் என்னைக் காக்க வல்லோர்.

பல்லவி

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே!

2. ஐயம் இருந்ததோர் காலத்தில்
ஆவிக்குறைவால்தான்
மீட்பர் உதிரபெலத்தால்
சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்று
இயேசு கைத் தூக்கினார்
முற்றும் என் உள்ளம் மாறிற்று,
இயேசு என்னைக் காக்க வல்லோர்.

3. என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின்செல்வேன்
எனது இயேசுவை
அகல ஆழ உயரமாய்
எவ்வள வன்பு கூர்ந்தார்,
என்னைக் கைவிட மாட்டார்.

73

பல்லவி

அனாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே.

அனுபல்லவி

இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்;
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்.

சரணங்கள்

1. காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்;
தூய தேவ அன்பே,
இவ்வனாந்தரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார்.

2. கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே;
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே.

3. கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன்படிக்கைதனை
உண்மையாய் கர்த்தர் காத்துக்கொள்வார்.

4. இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே.

5. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால்,
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம்.

6. ஆனந்தம் பாடி திரும்பியே வா
தூய தேவ பெலத்தால்
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சந்ததம் மகிழ்ச்சி அடைவாய்.

74

1. உன்னதமானவரின் - உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்;
இது பரம சிலாக்கியமே.

பல்லவி

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே தம் சிறகுகளால் மூடுவார்.

2. தேவன் என் அடைக்கலமே-
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே.

3. இரவின் பயங்கரத்திற்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன்.

4. ஆயிரம் பதினாயிரம்
பேர்கள் உன்பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே;
உன் தேவன் உன் தாபரமே!

5. தேவன் உன் அடைக்கலமே
ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ?
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார்.

6. உன் வழிகளிலெல்லாம்
உன்னைத் தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார்.

7. சிங்கத்தின் மேலும் நடந்து
வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார்.

8. ஆபத்திலும் அவரை நான்
நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்

என்னைத் தப்புவித்தே முற்றம் ரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர்.

75

பல்லவி

எனக்காக யாவற்றையும் செய்பவரே
எனக்கினி பயமில்லை உலகினிலே
எனக்காக யாவற்றையும்
செய்ததினால் - நான்
இரட்சிப்பின் பாத்திரம் ஏந்தி தொழுதிடுவேன்

சரணங்கள்

1. பஞ்சத்தில் எலியாவுக்கு அப்பங்கொடுத்தார்
பஞ்சமின்றி எலியாவை ஆசீர்வதித்தார்.
பஞ்சம் தீரும்வரை அந்த
விதவை வீட்டில் - அந்த
பானையில் எண்ணெயும் மாவும் குறையவில்லை.

2. ஆகாயத்துப் பறவையைக் கவனித்துப் பார்
விதைப்பதில்லை அவை அறுப்பதில்லை
அவைகளைப் பிழைப்பூட்டும்
பரமபிதா - நம்மை
அனுதினம் அற்புதமாய் நடத்திடுவார்.

3. என்னத்தை உடுப்போமென்று கவலை வேண்டாம்
ஏறெடுத்துப் பார்த்திடுவோம் காட்டுப் புஷபத்தைக்
காட்டுப் புஷ்பத்திற்கு தேவன் உடுத்துவித்தால்
அவர் நம்மையும் உடுத்துவிப்ப துண்மையல்லவா.

4. நாளைய தினத்திற்காக கவலை வேண்டாம்
நாதன் இயேசு இருக்கிறார்
அஞ்சவே வேண்டாம்
நாளைய தினத்திற்காக கவலைப்படும் - அந்த
நாளுக்கு நாளுக்கு அதின் பாடுகள் போதும்.

5. ஆசீர்வதித்திடும் இயேசு வனாந்தரத்தில்
ஐயாயிரம் பேரையும் போஷித்தாரே
தேவை அனைத்தையும் அவர் கொடுத்திடுவார் - அவர்
தம்மையே தந்தாரே இயேசு எனக்காகவே

76

1. கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் வாழ்ந்தடவே
சுதனருள் புரிந்தனரே.

பல்லவி

விசுவாசியே நீ பதறாதே!
விசுவாசியே நீ கலங்காதே!!
விசுவாசத்தால் நீதிமான்
இன்றும் என்றும்
பிழைப்பான்.

2. பரிசுத்த ஆவியானவரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்
கிருபையிலே வளர்ந்திடுவோம்
வரங்களை நாடிடுவோம்.

3. நெஞ்சமே நீ அஞ்சிடாதே
தஞ்சம் யேசு உன் அரணே
தம் ஜனத்தைச் சீக்கிரமாய்
தம்முடன் சேர்த்துக் கொள்வார்.

4. மேகம் போன்ற வாக்குத்தத்தம்
சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன்னேறிடுவாய்.

77

பல்லவி

ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி கோடி ஸ்தோத்திரம்
வாழ்வளிக்கும் இயேசு ராஜனுக்கும்
வாழ்நாளெல்லாம் ஸ்தோத்திரம்.

அனுபல்லவி

அல்லேலூயா அல்லேலூயா பாடுவேன்
ஆனந்த தொனியால் உயர்த்துவேன்

1. நீதியின் கரத்தினால்
தாங்கி நடத்துவார்
கர்த்தரே என்பெலன்
எதற்குமே அஞ்சிடேன்

2. அற்புதம் செய்பவர்
அகிலம் படைத்தவர்
யுத்தத்தில் வல்லவர்
மீட்பர் ஜெயிக்கிறார்

3. நம்பிக்கை தேவனே
நன்மைகள் அளிப்பவர்
வார்த்தையை அனுப்பியே
மகிமைப் படுத்துவார்

4. உண்மை தேவனே
உருக்கம் நிறைந்தவர்
என்னைக் காப்பவர்
உறங்குபவரில்லையே

1. மாறிடார் எம் மா நேசரே - ஆ
மாறாதவர் அன்பெந்நாளுமே
கல்வாரி சிலுவை மீதிலே
காணுதே இம்மா அன்பிதே

பல்லவி

ஆ! இயேசுவின் மகா அன்பிதே
அதன் ஆழம் அறியலாகுமோ
இதற் கிணையேதும் வேறில்லையே
இணையேதும் வேறில்லையே

2. பாவியாக இருக்கையிலே - அன்பால்
பாரில் உன்னைத் தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே.

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும் - தம்
உள்ளம் போல நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே.

4. ஆவியால் அன்பைப் பார்த்திட - தூய
தேவனின் விண்சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்
ஆவலாய் அவரைச் சந்திக்க.

5. பயமதை நீக்கிடவே - யாவும்
பாரினிலே சகித்திடுமே
அது விசுவாசம் நாடிடுமே
அன்பு ஒருக்காலும் ஒழியாதே

79

1. கர்த்தரிலும் தம் வல்லமையிலும்
கிருபையாய் யாவரும் பலப்படுவோம்
தீங்கு நாளிலே சாத்தானை எதிர்த்து நின்று
திராணியுடன் போர் புரிவோம்.

பல்லவி

சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொள்வோம்
சாத்தானின் சேனை முறித்திடுவோம் - அவர்
சத்துவ வல்லமையால்

2. மாமிசம் இரத்தத்துடனுமல்ல,
துரைத்தனம், அதிகாரம், அந்தகாரத்தின்
லோகாதிபதியோடும் பொல்லா ஆவியோடும்
போராட்டம் நமக்கு உண்டு.

3. சத்தியமாம் கச்சையைக் கட்டியே
நீதியின் மார்க்கவசம் தரித்தே,
சமாதானத்தின் சுவிசேஷ பாதரட்சை
நாம் கால்களில் தொடுத்துக் கொள்வோம்.

4. பொல்லாங்க னெய்யும் அம்புகளை
வல்லமையோ டெதிர்க்கும் ஆயுதம்
விசுவாசம் என்னும் கேடகம் மேலே
வீரமுடன் பிடித்து நிற்போம்.

5. இரட்சண்யமாம் தலைச் சீராவும்
எஷணமும் அணிந்து கொள்ளுவோம்
தேவ வசனமென்னும் ஆவியின் பட்டயம்
தேவ்வ அதைப் பிடித்துக்கொள்வோம்.

6. எந்தச் சமயத்திலும் சகல
வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்
பரிசுத்தர்கட்காகவே ஆவியினால்
மன உறுதியுடன் ஜெபிப்போம்.

80

எந்தன் ஜெபவேளை உமை தேடி வந்தேன்
தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்.

1. சோராது ஜெபித்திட
ஜெப ஆவி வரம் தாருமே
தடையாவும் அகற்றிடுமே
தயை கேட்டு உம்பாதம் வந்தேன்.

2. உம்மோடு எந்நாளும்
உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம் வார்த்தையை
கேட்டிட காத்திருப்பேனே

3. நம்பிக்கை இல்லாமல்
அழிகின்ற மாந்தர்களை
மீட்டிடும் என் இயேசுவே
போராடி ஜெபிக்கின்றேன் நாதா

4. நாளெல்லாம் பாதத்தில்
கர்த்தாவே அமர்ந்திடுவேன்
கண்ணீரின் ஜெபம் கேளுமே
கருணையின் பிரவாகம் நீரே

5. சகாயம் பெற்றிட
கிருபாசனம் வந்தேனே
இரக்கங்கள் ஈந்திடுமே
என்றென்றும் தயை காட்டும் தேவா.

81

பல்லவி

பரிசுத்தர் கூட்டம் நடுவில்
ஜொலித்திடும் சுத்த ஜோதியே

அருபியே இவ்வேளையில்
அடியார் நெஞ்சம் வாரீரோ (2)

1. மீன் கேட்டால் பாம்பை அருள் வாருண்டோ?
கல் தின்னக் கொடுக்கும் பெற்றோருண்டோ?
பொல்லா தோர் கூட செய்திடார்
நற்பிதா நலம் அருள்வார்.

2. சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே
விரும்பா அசுத்தம் யாவும் போக்குமே
பாவி நீச பாவி நானைய்யா
தேவா இரக்கம் செய்ய மாட்டீரோ

3. பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை
யாரும் காணா உள் அலங்கோலத்தை
மனம் நொந்து மருளுகின்றேன்
பரிசுத்தம் கெஞ்சுகின்றேன்.

4. துணை வேண்டும் தகப்பனே உலகிலே
என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே
என் ஜீவன் எல்லை எங்கிலும்
பரிசுத்தம் என எழுதும்.

82

1. கல்வாரியின் கருணையிதே
காயங்களில் காணுதே
கர்த்தன் இயேசு பார் உனக்காய்
கஷ்டங்கள் சகித்தாரே

பல்லவி

விலையேறப் பெற்ற திரு இரத்தமே-அவர்
விலாவினின்று பாயுதே
விலையேறப் பெற்றோனாய் உன்னை-மாற்ற
விலையாக ஈந்தனரே

2. பொன் வெள்ளியோ மண்ணின் வாழ்வோ
இவ்வன்புக் கிணையாகுமோ
அன்னையினும் அன்பு வைத்தே
தன் ஜீவனை ஈந்தாரே

3. சிந்தையிலே பாரங்களும்
நிந்தைகள் ஏற்றவராய்
தொங்குகிறார் பாதகன் போல்
மங்கா வாழ்வளிக்கவே

4. எந்தனுக்காய் கல்வாரியில்
இந்தப் பாடுகள் பட்டீர்
தந்தையே உம் அன்பதையே
சிந்தித்தே சேவை செய்வேன்.

5. மனுஷனை நீர் நினைக்கவும்
அவனை விசாரிக்கவும்
மண்ணிலவன் எம்மாத்திரம்
மன்னவா உம் தயவே.

83

பல்லவி

அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்குறார்.

சரணங்கள்

1. மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமைக் குருசை தெரிந்தெடுத்தாரே;
மாய லோகத்தோ டழியாது யான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே.

2. அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க,
பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே!

3. முள்ளின் முடியும், செவ்வங்கி அணிந்தும்,
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்,
குருதி வடிந்தவர் தொங்குறார்
வருந்தி மடிவோரையும் மீட்டிடவே.

4. அதிசயம் இது இயேசுவின் தியாகம்
அதிலும் இன்பம், அன்பரின் தியாகம்
அதை எண்ணியே நிதம் வாழுவேன்
அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடவே.

5. சிலுவைக் காட்சியைக் கண்டு முன்னேறி
சேவை செய்வேன் ஜீவனும் வைத்தே
என்னைச் சேர்த்திட வருவேனென்றார்
என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன்.

84

அழைக்கிறார், அழைக்கிறார் இதோ!
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் இதோ!

1. பாவத்தை ஏற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில் கண்கொள்ளாத காட்சியே
கண்டிடும் வேண்டிடும் பாவப் பாரம் நீங்கிடும்.

2. நோயையும் ஏற்றவர், பேயையும் வென்றவர்
நீதிபரன் உன் நோயை நிச்சயமாய்த் தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே நேயமாய் அழைக்கிறார்.

3. துன்பம் சகித்தவர் துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே அண்ணல் இயேசழைக்கிறார்
துன்புறும் நெஞ்சமே துரிதமாய் நீ வாராயோ

4. அந்தக் கேடடைந்தார் அழகற்றுத் தொங்கினார்
சொந்தமாகச் சேர்த்திட இந்தப் பாடடைந்தரே
நிந்திக்கும் உன்னையும் சந்திப்பார் நீ வாராயோ

5. கல்லறை திறக்க காவலர் நடுங்க
கஸ்தி களடைந்தாரே கட்டுகளறுத்தாரே
உயிர்த்தார் ஜெயித்தார் உண்டு மீட்புனக்குமே.

85

பல்லவி

இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்
ஆவலாய் உன்னைத் தம் கரங்கள் நீட்டியே
இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்.

1. எத்துன்ப நேரத்திலும் ஆறுதல் உனக்களிப்பார்
என்றுணர்ந்து நீயும் இயேசுவை நேசித்தால்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய்.

2. கண்ணீரெல்லாம் துடைப்பார் கண்மணிபோல் காப்பார்
கார்மேகம் போன்ற கஷ்டங்கள் வந்தாலும்
கருத்துடன் உன்னைக் காத்திடவே.

3. சகல வியாதியையும் குணமாக்க வல்லவராம்
யாராயிருந்தாலும் பேதங்கள் இன்றியே
கிருபையாய் அன்பை அளித்திடவே.

86

ஆண்டவர் இயேசு அழைக்கிறார் அன்புடன் வருவாய்
ஆனந்தமாக இரட்சிப்பை அடைந்தபின் ஏகுவாய்

1. முன்முடி சூட்டினர் முகத்தில் துப்பப்பட்டார்
மூன்று ஆணிகளால் சிலுவையில் தொங்கினார்
ஜீவ பலியாக மாண்டாரே-ஜீவனைக் கொடுத்தே

2. காணாத ஆட்டைத் தேடிக் கண்டடைய
கல்வாரி மலையில் சிந்தின் இரத்தம்
மேய்ப்பர் அழைக்கும் சத்தம் தொனிக்குதே ஓடியே வருவாய்

3. அன்பாக சுவிசேஷம் அறிவிக்கும் போது
அன்பராம் இயேசுவை அண்டிக்கொள்வாயே
கிருபையின் காலமிதே தள்ளாதே விரைவுடன் வருவாய்.

87

வாழவந்த மானிடனே வாழுகின்ற பூமியிலே
வாழும் காலம் எத்தனைநாள் கணக்குத் தெரியுமா - அந்த
விபரங்களை அறிந்து கொள்ள உனக்குத் தெரியுமா?

1. எட்டடுக்கு மாளிகையில் எட்டிப்பார்த்து நிற்கிறீயே
எத்தனை நாள் இந்த வாழ்வு உனக்குத் தெரியுமா?
மூச்சு நின்றபின்பு இடையில் ஒரு துணியும் மிஞ்சுமா

2. குடிசையிலே வாழ்பவரும் கோடிக் செல்வம் சேர்ப்பவரும்
ஓடிஆடி ஓயும்போது எங்கே போகிறார்
அந்த இருவருமே மண்ணுக்குள்ளே மறைந்து போகிறார்

3. பதவிபணம் என்றலைந்து பாவத்திலே நீ மிதந்து
சத்தியத்தை மறந்து நீயும் செல்வதேனய்யா
கொடிய சாத்தானுடன் நரகத்தில் வீழ்வதேனய்யா

4. செத்தபின்பு உனது உயிர் சொர்க்கத்திலே வாழனுன்னா
கர்த்தர் இயேசு கிறிஸ்துவை நீ ஏற்றுக் கொள்ளனும்
அதை இப்பொழுதே உடனடியாய் செய்து ஆகனும்.

88

உன் மனம் போல் உன் வழியே நீ போகாதே
அது நரகப்பாதை என்பதை மட்டும் மறவாதே

1. கடவுள் இல்லை என்பதை நீயும்
உன் மனதில் நீ எண்ணாதே
அதைக் கூறுகிறவன் மதிகேடன் என்று
வேதம் சொல்வதை அறியாயோ?

2. அறிவைக் கொண்டு வாழ்ந்துவிடலாம்
என்று நீ மனதில் எண்ணாதே
கூடுவிட்டு ஆவிபோனால்
அறிவும் கூட வருவதில்லை

3. உலகத்திலுள்ள சிற்றின்பம்
உன் வாழ்வு என்பதை எண்ணாதே
அது மரணத்துக்குக் கொண்டு போகும்
என்பதை மட்டும் மறவாதே

4. இருக்கிற வரைதான் வாழ்வு என்று
உன் மனதில் நீ எண்ணாதே
நீ இறந்த பின்னும் வாழ்வு உண்டு
வேதத்தில் நீயும் அறியாயோ

5. இன்று நீ மரித்தால் எங்கு செல்வாய்
என்பதை இன்றே அறிந்து கொள்
மோட்சமா நரகமா என்பதை
மட்டும் முடிவு செய்.

89

பல்லவி

சமாதானம் நல்கும் நாமம்
இயேசு நாமமே - மன சாந்தி
தரும் இனிய நாமம் இயேசு நாமமே
இயேசு நாமமே, இயேசு நாமமே
கிறிஸ்தேசு நாமமே

சரணங்கள்

1. அன்னை தந்தை சொந்தம் யாவும்
இயேசு நாமமே
தன்னைத் தந்த இன்ப நாமம்
இயேசு நாமமே

2. பாவவினை போக்கும் நாமம்
இயேசு நாமமே
பரலோக வாழ்வில் சேர்க்கும் நாமம்
இயேசு நாமமே

3. பயங்கள் யாவும் போக்கும் நாமம்
இயேசு நாமமே

உயர் பக்தி தன்னை வளர்க்கும் நாமம்
இயேசு நாமமே

4. பொன்னும் வெள்ளி புகழ் பொருளும்
இயேசு நாமமே
என் உள்ளில் வாழும் ஏக நாமம்
இயேசு நாமமே

90

இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம்
இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்
நம் இயேசு இராஜாவே, இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல் படுவோம்.

1. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய் அதி சீக்கிரமாய்
இராஜ பாதையைச் செம்மையாக்குவோம்.
நம் இயேசு இராஜாவே, இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல் பாடுவோம்.

2. சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்
இந்தப் பார்முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்.
நம் இயேசு இராஜாவே, இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல் படுவோம்.

3. ஆவி, ஆத்துமா, தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல, அவரே எல்லாம்
என முடிவு செய்தோம், அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்.
நம் இயேசு இராஜாவே, இதோ வேகம் வாராரே
அதி வேகமாய் செயல்படுவோம்.

91

பல்லவி

பாவிக்குப் புகலிடம் இயேசு ரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே

அனுபல்லவி

பரிசுத்தரே பாவமானாரே
பாரமான சிலுவை சுமந்தவரே

சரணங்கள்

1. கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன்போல்
குற்ற, மற்ற கிறிஸ்தேசு தொங்கினார்
பரிகாசமும் பசி தாகமும்
படுங்காயமும் அடைந்தாரே

2. கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முள்களில் பின்னிச் சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதைக் காணும் உள்ளம் தாங்குமோ

3. உலகத்தின் இரட்சகர் இயேசுவே
உயிர் கொடுத்தார் உயிர்த்தெழுந்தார்
தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடிவா

4. பாவ சாபங்கள் தீரா வியாதிகள்
பல தோல்விகள் உந்தன் வாழ்க்கையில்
கண்டு நீ மனம் கலங்குவதேன்?
கர்த்தர் இயேசு வண்டை ஓடிவா

5. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே
வாருங்கள் என்னண்டையில் என்கிறார்
இளைப்பாறுதல் தரும் இயேசுவை
இன்று தேடி நாடி நம்பிவா.

பல்லவி

சிலுவை சுமந்த உருவம்
சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதி போலவே பாய்கின்றதே
நம்பி இயேசுவண்டை வா

சரணங்கள்

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணாய் நிலையான சந்தோஷம் பூவில்
கர்த்தாவின் அன்பண்டைவா

2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்ம நஷ்டமடைந்தால்
லோகம் முழுவதும் ஆதாயமாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே

3. பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
